உ

கடவுள்றுணை

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-௪.] விசுவாவசுஹு தைமீ [பகுதி-௫.

உள்ளுறை.

வேள்-ஆயண்டிரன்.—பத்திராசிரியர் ௯௦
பெரியபுராண அரும்பத விளக்கம்.—ஸ்ரீமத்-ஜி. சதாசிவம்பிள்ளை ௯௫
மகாபாரதச்செய்யுட் பாடாந்தரம்.—ஸ்ரீமத்-சேற்றூர்-சுப்பிரமணியக் கவிராயர் ௯௬
கலிங்கம்.—ஸ்ரீமத்-ல. அனந்தையர் ௧௦௫
பரியாயப்பெயர்,—ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை ௧௧௦
பாண்டிய சாஸனங்கள்.—ஸ்ரீமத்-து. அ. கோபிநாத ராவ், M.A. ௧௧௫
தென்மொழியில் தன்மை முன்னிலைகளாமாறு.—Prof. ஜூலியன்வின்ஸன், பாரிஸ். ௧௨௨
நூலாராய்ச்சி.—ஸ்ரீமத்-அ. மாதவையர், B. A., ௧௨௫
பாலமுது.—ஸ்ரீமத்-செ. வீ. இராஜகோபாலாசாரியர் ௧௨௯
புத்தகக்குறிப்பு.—பத்திராசிரியர் ௧௫௨
ஐந்திணையெழுபது.— ஸ்ரீமத்-ரா. இராகவையங்கார் ௧
தொல்காப்பியஞ்செய்யுளியல் நச்சினார்க்கினியம்.— ஸ்ரீமத்-ரா. இராகவையங்கார் ௧௦௩
இயற்கைப்பொருட்பாடம்.—ஸ்ரீமத்-செ. வீ. இராஜகோபாலாசாரியர்
மதுரைத் தமிழ்ச்சங்கத்து ஆங்கில கலாசாலைப் பரீக்ஷைகளிற் றேறியோர் குறிப்பு.— ௪௧

மதுரை:
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] 1906. [தனிப்பிரதி அண 8.

## திருச்சிற்றம்பலம்.

நம் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் "பாண்டியன் புத்தகசாலை"க்கு அடியிற்குறித்த அபிமான சீலர்கள் ஏட்டுப்பிரதிகளும் அச்சுப் பிரதிகளும் உதவினமைக்குப் பெரிதும் நன்றிகூறுகின்றேன்.

### ஏட்டுப்பிரதிகள்.

1. மறைசைவெண்பா அந்தாதியுரை—ஸ்ரீமத்-எம். சே. சபாபதிபிள்ளை [திருத்தருப்பூண்டி.
2. திருக்கலம்பகவுரை—ஸ்ரீமத்-சந்திரநாதஐயர், ஆரணி.
3. பாரதம்—ஸ்ரீமத்-கிருஷ்ணசாமி ஐயங்கார், அனுமந்தன்பட்டி.
4. பாரதம்—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை, யாழ்ப்பாணம்.
5. திருப்புத்தூர்த் தலபுராணம்—ஸ்ரீமத்-நம்பெருமாளையங்கார், மூகனூர்.
6. தேவாரம்—ஸ்ரீமத்-பொன்னுசாமிப்பிள்ளை, மதுரை. [மதுரை.
7. திருவாலவாய்த்திருப்பணிமாலை—ஸ்ரீமத்-மு. ரா. அருணசலக்கவிராயர்,

### அச்சுப்பிரதிகள்.

1. இலக்குமியந்தாதி—ஸ்ரீமத்-எ. பு. குருசாமி நாயுடு அவர்கள்.
2. தேவதாருவனத்தலபுராணம் } ஸ்ரீமத்-அ. நாராயணசாமி ஐயர், பின்னத்தூர்.
3. F. A. டெக்ஸ்டு 1906—
4. திருக்கோதையந்தாதி } ஸ்ரீமத்-சு. பெருமாளையங்கார், விழுப்பநல்லூர்.
5. ஆண்டாள்கும்மி
6. ஞானவாசிஷ்ட வசனம் } ஸ்ரீமத்-இராமசாமி முதலியார், திருநெல்வேலி.
7. வாசிஷ்ட முக்கிய விஷயம் மூலமுமுரையும்
8. சூதவனபுராணம்—ஸ்ரீமத்-ராம. சித. சிதம்பரஞ்செட்டியார், ஆலங்காடு.
9. தம்புசிந்தாமணி—ஸ்ரீமத்-T. ராமகிருஷ்ணம்பிள்ளை, B. A., சென்னை.
10. விநாயகமான்மியம்—ஸ்ரீமத்-ச. பூபாலபிள்ளை, மட்டக்களப்பு.
11. அருணகிரிநாதர் அற்புதசரித்திரம்—ஸ்ரீமத்-பி. கல்யாணசுந்தர பத்தர், சென்னை.
12. அறநெறிச்சாரம்—ஸ்ரீமத்-எ. சிங்காரவேலு முதலியார் சென்னை.

பொ. பாண்டித்துரை.

அக்கிராசனாதிபதி.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-ச.] விசுவாவசுஷு தைமீ [பகுதி-ந.

## வேள் ஆயண்டிரன்.

“வேளிர்” என்பவர் வடபாலினின்றுவந்து தென்னாடாண்ட ஒருபெரு வகுப்பினர் என்பதற்குப் பலகாரணங்காட்டி முன்னொருவியாசம் என்னால் எழுதப்பட்டமை செந்தமிழபிமானிகள் பலருமறிவர். அவ்வகுப்பினருள் வரையாதளித்த பெருவள்ளல்களாய் விளங்கினோர் மிகப்பலர். அவருள்ளே ஒருவனாய்ச்சிறந்த ஆய் என்னும் வேளைப்பற்றிய வரலாறு, முன்னூல்களைத் துணைக்கொண்டு இங்கே ஆராயப்படுகின்றது.

வேள் ஆயைப்பற்றிய சரித்திரம் முழுதுந் தெரியவில்லையாயினும், இவன் விஷயமாகப் பழைய நல்லிசைப்புலவர் பாடிய பாடல்கள், இவ்வேளின்வரலாறுசிலவற்றை அறிதற்கு உதவியாயிருத்தலோடு, இவனது குணங்களையும் கொடையின்சிறப்பையும் பெரிதும் விளக்கி நிற்கின்றன. இப்பாடல்கள் அகநானூறு புறநானூறு முதலிய சங்கநூல்களில் அமைந்தவை. இவ்வள்ளல் “வேளிர்” கூட்டத்தைச் சேர்ந்தவனென்பது “மாவேள் ஆய்” “தேர்வேள் ஆய்” எனப் புறநானூற்றில் வருந்தொடர்களாற் றெரிகின்றது. அந்நூலில் “கழறொடி யாஅய் மழைதவழ் பொதியில்” எனவும் “தென்றிசையாய்குடி” எனவுங் கூறப்படுதலால், ஆய்நாடு பொதியின்மலைப்பக்கத்துள்ளதென்பதும், அவன் தலைநகர் “ஆய்குடி” யென்னும் பெயர்பெற்றதென்பதும் தெளிவாம். இவன் மலை வேற்றரசரால் தாக்கமுடியாத அரண்வலியுடையதென்பர். ஆய் நாட்டில் யானைகள் மிகுந்த காடுகளுண்டென்றும், பரிசிலர்க்கு யானைக்

கொடை மிகுதியாகஅளித்தவன் ஆய் என்றும் சொல்லப்படுகின்றன. இவ்வள்ளலுக்கு "அண்டிரன்" என்னும் மறுபெயரு முண்டென்பது இவனைப்பற்றிய பாடல்கள் பலவற்றிற் காணலாம். புறநானூற்றுரையாளரும் "அண்டிரன் ஆய்க்கொருபெயர்" என்பர். புறப்பாட்டில் "ஈகை யரிய விழையணி மகளிர்" "கோடேந்தல்குற் குறுந்தொடி மகளிரொடு" எனவருதலால் ஆய் மகளிர்பலரை மணம்புரிந்தவனென்பது அறியப்படும். இவன் அணிந்துவந்த மாலை சுரபுன்னை யென்பது. இவன் இன்சொல்லே தன்சொல்லாக வுடையன் என்பர். ஆய் கொங்குநாட்டாரோடு போர்புரிந்து அவரை மேல்கடற்பக்கத்தே யோட்டினவனென்று கந௦-வது புறப்பாட்டுக் கூறுகின்றது. இவன், ஒருகால் நீலநாகமொன்றால் தான்பெற்ற அருமை பெருமை வாய்ந்ததோர் ஆடையை, சிவபிரானே அணியத்தக்கதென்று கருதி அப்பிரானுக்கு உவந்து சாத்தினனென்று சிறுபாணாற்றுப்படையில் வியக்கப் படுகின்றான். இதனை,

"நீல நாக நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆய்"

என்பதனால் அறிக. இவ்வரலாறு, ஆய் சிவபத்திமிக்க வைதிகமதத்தின னென்பதைக் குறிப்பது. இவ்வள்ளலின் நாளோலக்கம் மிகச் சிறந்து விளங்கு மென்பர் (நற்-கூ0). இவனைப்பாடியபுலவர்:—உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், துறையூர் ஓடைகிழார், குட்டுவன் கீரனார் என்போர். இவருள் முடமோசியார் அந்தணரென்பது தொல்காப்பிய மரபியலுரையால் விளங்குகின்றது. இம்மோசியாரே ஆயின் அருமை பெருமைகளை அதிகமாக வெளியிட்டவர். வேள் பாரிக்குக் கபிலர் போலவும், அதிகமானுக்கு ஔவைபோலவும், வேள்-ஆய்க்கு மோசியார் பெரிதும் வேண்டிய புலவரென்பது "திருந்துமொழி, மோசிபாடிய ஆயும்" எனப் பெருஞ்சித்திரனார் என்னும் பழைய புலவர் கூறுதலால் தெரிகின்றது.

வேள்-ஆயின் வள்ளன்மையையும் அருங்குணங்களையும் புறநானூற்றில் வரும் பாடல்கள் மிகவழகுபெற விளக்குவன. மோசியார்

ஆயின் அரமனையைப்பற்றிப் பேசுமிடத்து, "அவன் தன் மனைவியரது மாங்கல்ய சூத்திரமொழிய மற்றவையனைத்தையும் பரிசிலர்க்கு வழங்கி விட்டனனாயினும், கொடுக்குமின்பத்தையநுபவித்தறியாது தம் வயிறருத்திக் கழியும் மற்றப் பெருஞ்செல்வர்கள் பெருமனை போலப் பொலிவிழக்காது, ஆயின் அரமனை அழகு பொலிந்து விளங்கும்" என்று புகழ்கின்றார். இப்புலவர் ஆயைக் காணாத முன்பு தாம் அவனைப்பற்றிக் கொண்ட எண்ணங்கள் அவனைக் கண்டதும் முற்றும் மாறுபட, அதற்கிரங்கி "முன்னுள்ளு வோனைப் பின்னுள்ளினேனே, ஆழ்கென் னுள்ளம் போழ்கென் னாவே, பாழூர்க்கிணற்றிற் றூர்கவென் செவியே" எனத் தம் மறியாமையை இழிப்பதன் மூலம் ஆயின் குணங்களைப் புகழ்ந்தனர். ஒருகால் இப்புலவர் காட்டு வழியே சென்றபோது ஆண்டு வாழும் யானைக்கூட்டங்கள் தம் கண்ணுக்குப் புலப்பட, அப்போது,

"மழைக்கணஞ் சேக்கு மாமலைக் கிழவன்
வழைப்பூங் கண்ணி வாய்வா ளண்டிரன்
குன்றம் பாடின கொல்லோ
களிறுமிக வுடையவிக் கவின்பெறு காடே"

என்னும் இனிய பாடலை பாடினார். "யானைகளை மிகுதியாகவுடைய இவ்வழகிய காடு அண்டிரனுடைய (ஆய்) மலையைப்பாடிப் பரிசில் பெற்றதோ" என்பது அதன்கருத்து. ஆயின் யானைக்கொடை, காட்டியானைகளைக் கண்டதும் தம் நெஞ்சில் தோன்ற அப்போது தானே சுரந்த பாடல் இது. இன்னும் மோசியார், ஆயது ஒப்புயர்வற்ற ஞானத்தையும தூய்மையையும் குறித்து,

"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வாணிக னாஅ யல்லன்
பிறருஞ் சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கைவண் மையே"

என்று பாடுகின்றனர். "இவ்வுலகில் அறங்கள் செய்யின் அவை மறுமைக்குதவும் என்று மறுபயன் பெறும் எண்ணத்துடன் தரும வியாபாரஞ் செய்யும் வாணிகனல்லன் ஆய்; அவன் கொடை பெரியோர்கள் சென்ற வழியென்று உலகோர் கருதும்படி அமைந்தது"

என்பது மேற்பாட்டின் போந்தபொருள். இக்கருத்து, வேள்-ஆயின் உயர்ந்த மனநிலையை விளக்குவதாகும். கீதை முதலிய ஞானநூல்களெல்லாம் மேற்குறித்த பாடற்கருத்தையே விளக்குவன. இனி, மோசியார் மற்றோரிடத்தில்,

"வடதிசை யதுவே வான்றோ யிமயந்
தென்றிசை யாஅய் குடியின் றாயிற்
பிறழ்வது மன்னோவிம் மலர்தலை யுலகே"

என ஆய் உலகிற்குப் புரியும் பேருபகாரத்தை வியக்கின்றனர். மோசியார் மேற்கண்ட அடிகளில் அமைத்தகருத்து, பொதியின்மலைக்குரிய அகத்தியர்க்கு வழங்கும் புராணகதை யொன்றை யடியாகக் கொண்டு எழுந்ததுவோ என்னும்படி யிருத்தல் உய்த்தறியத்தக்கது.

இவ்வாறு வேள்-ஆய் பெருவள்ளலாய் உலகினர் தன்னை என்றும் நினைக்கும்படி விளங்கிப், பின், "காலனென்னுங் கண்ணிலியுய்ப்ப மேலோருலக மெய்தினன்." இவன்பிரிவினை யாற்றாது, அவனதுரிமை மனைவியர் தீப்பாய்ந்து உயிர்விட்டொழிந்தனர். ஆய் இறந்தபோது அவனது பிரிவுக்கு இரங்கிப்பாடிய புலவர்—முடமோசியார், குட்டுவன் கீரனார் என்போர். இவருள் மோசியார், ஆய் அண்டிரன் விண்ணுலகுசென்றதற்கிரங்கி அடியில் வரும் இனிய பாடலைப் பாடினர்.

"திண்டேர் இரவலர்க் கீத்த தண்டார்
அண்டிரன் வரூஉ மென்ன வொண்டொடி
வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுட்
போர்ப்புறு முரசங் கறங்க
ஆர்ப்பெழுந் தன்றால் விசும்பி னானே"

இதன் பொருள்:—திண்ணிய தேரை இரவலர்க்குக் கொடுத்த குளிர்ந்த மாலையையுடைய ஆய் வருகிறானென்று கருதி, ஒள்ளிய தொடியையும் வச்சிராயுதத்தையுமுடைய இந்திரனது அரமனையுள் போர்த்தலுற்ற முரசம் முழங்க வானத்தில் ஓர் ஓசை எழுந்தது" என்பது. இது நிற்க.

இனி, 'ஆய் எயினன்' என மற்றொருவன் அகநானூற்றிற் பலவிடங்களிற் கூறப்படுகின்றான். இவனைப் பாடியவர் பரணர் முதலியோர். வேள் ஆயைப் பாடியவராக முற்கூறிய புலவர்கள் இவனைப் பாடியவராகக் காணவில்லை. ஆயெயினனும் புலவர்க்குப் பேருபகாரியாயிருந்தவனென்று தெரிகின்றது. இவன், வேளாகிய ஆய் அண்டிரனின் வேறுபட்டவனென்பதை விளங்கவைத்தற்குப் போலும், "எயினன்" என்னுஞ் சொற்புணர்ப்புடனேயே வழங்கப்படுகின்றான். வேள் ஆயைத் தனியே 'அண்டிரன்' எனவும் கூறுதல்போல, இவனைத் தனியே 'எயினன்' எனவும் வழங்குவர். இதனை "வண்மையெயினன் வீழ்ந்தனன்" எனவரும் அகநானூற்றடியால் அறிக. இதனால் இவ்வாயெயினன் ஆயண்டிரனின் முற்றும் வேறானவனென்பது வெளியாம். அன்றியும் ஆயெயினன், மிஞிலியென்பானோடு புரிந்த பெரும்போரில் உயிரிழந்தவனென்பது, அகநானூற்றிற் பரணர்பாடல் பலவற்றால் அறியக்கிடக்கின்றது. வேள் ஆயின் சாவைக்குறிக்கும் புறப்பாடல்கள் அச்செய்தி கூறவில்லை. ஆய் இருவரும் ஒருவரேயானால், அகப்பாட்டில் அவனுக்கு அடுத்தடுத்துக் கூறப்படும் எயினன் என்னும் அடைமொழி புறப்பாட்டில் ஆயைப்பற்றிய பல பாடல்களிலும் பயிலாதிருத்தற்கும், புறப்பாட்டில் ஆய்க்கு வழங்கும் வேள், அண்டிரன் என்னும் அடைமொழிகள் அகப்பாட்டில் அவனைப்பற்றிய பாடல்களுளொன்றினும் பயிலாதிருத்தற்கும் சிறந்த காரணமின்மையால் அவ்விருவரும் ஒருவரல்லரென்பதே நிச்சயம். அன்றியும் எயினனாகிய ஆய் பொதியமலைக்குரியவனென்று சொல்லப்படாமல் பெரிய காடொன்றற்குத் தலைவனென்று கூறப்படுதலுங் காண்க. பிந்தியவன், வேள் ஆயின் காடுகளைக் காத்துவந்தமைபற்றி "ஆயெயினன்" என அழைக்கப்பட்டனனோ என ஊகித்தற்குக் காரணமுமுண்டு.

வேள் ஆய்க்கு அண்டிரன் என்னும் மறுபெயருமுண்டென்று முன்னர்க் குறிக்கப்பட்டது. இப்பெயரை நோக்கும்போது இது தமிழ்ச்சொல்லென்று தோற்றவில்லை. ஆதலால் இச்சொல் ஆய்க்கு வந்ததன் வரலாற்றைச் சிறிது ஆராய்தல் விரும்பத்தக்கது.

ஔவையாராற் புகழப்பட்ட அம்பர்கிழான் அருவந்தைகாலத்து இயற்றப்பட்டதென்று தெளிந்த திவாகரத்தில், வேளிர் என்னும்

பெயர் சளுக்கியர்க்குரியதாகப் படிக்கப்படுதலாலும், "வடபான் முனிவன் தடவினுட் டோன்றி" னவர் வேளிரின் ஆதிமுதல்வரென்னும் வரலாறு, சாஸனங்களில் "முனிவரொருவரது யாகபாத்திரத்தினின்று சளுக்கியரின் மூலபுருஷன் உண்டானான்" எனக்கூறப்படுதலோடு ஒத்திருத்தலாலும், வேளிரும் சளுக்கியரும் வடக்கினின்றும் தென்னாட்டிற்குடியேறியவரெனக் கதைகளுண்மையாலும் அவ்விருவரும் ஒரே வகுப்பினராதல் வேண்டுமென்று "வேளிர் வரலாறு" என்னும் வியாசத்துக் குறித்துள்ளேன். இற்றைக்கு 1100-வருஷங்கட்குமுன் தக்ஷிணத்திற் பிரபலராய் விளங்கிய சளுக்கியர், பழங்காலத்தே இன்னவரசர்கூட்டத்தைச்சேர்ந்தவரென்பது, அவர் சாஸனங்களால் நிச்சயிக்கப்படவில்லையாயினும், அக்குடியினரையொத்த வகுப்பார் இரண்டாயிரம் வருஷங்கட்கு முன்பே தமிழ்நாட்டில் விளங்கிய செய்தி தெரியவருதலால், அச்சளுக்கியர் வடக்கே பழைமைபெற்றிருந்த ஓரரசர் வகுப்பைச் சேர்ந்தவரென்று பெறப்படுகின்றது. ஆனால் 2000-ஆண்டுக்குமுன் சளுக்கியர் என்னும் பெயர்கொண்ட அரசர் விந்தியத்துக்கு வடக்கே ஆட்சிபுரிந்தனரென்று விளங்கவில்லை. ஆயினும் மகதநாட்டை நெடுங்காலம் ஆண்ட ஆந்திரர்கள், அக்காலத்தே பெருவலியுடன் பரதகண்டத்திற் பெரும்பாகத்தை ஆண்டவரென்பது புராணங்களாலும் சாஸனங்களாலும் பிரசித்தமாகும். அவர்கள்—ஆந்திரர், ஆந்திரஜாதிகர், ஆந்திரபிருத்தியர் என மூவகையராயிருந்தனர். பிற்காலத்தில் அவர்களுடைய ஆட்சி மகதநாட்டில் நிலைகுலைந்தபோது, அவ்வகுப்பினரில் எழரசர் தக்ஷிணத்தில் நிலைபெற்று ஆட்சிபுரிந்தனர் என்றும், இவர்களெல்லாம் மகதநாடாண்ட மௌருதியரசனுடைய சந்ததியார்களென்றும், இவ்வெழுவருள் சளுக்கியரு மொருவரென்றும், வடக்கே மிஸ்டர் ஜேம்ஸ்,பிரின்ஸிப்என்னும் பிரசித்தசரித்திராசிரியர்க்ககப்பட்ட சாஸனங்களினால் இச்செய்திகள் தெரியவருகின்றனவென்றும் கூறுவர். பாலபாகவதம், வசுசரித்திர முதலிய தெலுங்கு காவியங்களிலும் சளுக்கியர் ஆதியில் ஆந்திரவகுப்பைச் சேர்ந்தவரென்று சொல்லப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. பிற்காலத்துச் சளுக்கிய சாஸனங்களில் அவர் ஆந்திர வகுப்பினரென்று கூறப்பட்டதில்லையாயினும், அவ்வரசரது ஆதிக்குடி, முன் குறித்தபடி,

ஆந்திரஜாதியென்பதே பொருத்தமாம். ஆகவே, சளுக்கிய வகுப்பைச் சார்ந்தவரென்று நன்கு தெளியப்படும் வேளிரும் ஆதியில் அவ்வாந்திரரினின்றே பிரிந்தவரென்பது பெறப்படும். எனவே, வேள் ஆய்க்கு வழங்கும் "அண்டிரன்" என்னும் பெயர் அவனது குலப்பெயராகிய ஆந்திரரென்பதன் திரிபென்பதுஎளிதில் விளங்கும். மற்றொருவனாகிய ஆயை 'எயினன்' என அவன் குலப்பெயரால் விசேடித்ததுபோல, இவ்வேளையும் அவன்குலப்பெயரான "அண்டிரன்" என்ற சொல்லால் விசேடித்தனராவர். ஆந்திரன், மேலோன் என்னும் பொருளுடையது. இப்பொருளன்றி வேறு தமிழ்ப்பொருள் அச்சொற்கின்மையும் கண்டுகொள்க. தமிழர் ஆந்திரரை "அண்டிரர்" என வழங்கியதுபோலவே, கிரேக்கதேசத்துப் பழையபூமிசாஸ்திரிகளும் அவரை "அண்டரிய" என வழங்கியுள்ளார்.

இனி, இற்றைக்கு 1750-ஆண்டுகட்கு முன்பு, டாலமி (Ptolemy) என்னும் யவனாசிரியர் இப்பரதகண்ட முழுதுஞ்சுற்றி, அதன் பூமிதத்துவத்தையும் அரசியனிலைகளையும் பிறவற்றையும்பற்றி நீண்ட குறிப்பொன்றெழுதியிருக்கின்றனர். அக்குறிப்புக்கள் சரித்திரவறிஞராற் பிரபலமாக எடுத்தாளப்படுகின்றன. அவ்வரலாற்றுள் தென்னாட்டைப்பற்றிய பழங்காலச் செய்திகள் சிலவும் காணலாகும். இவ்யவனாசிரியர் இங்கு வந்தசமயம் கடைச்சங்க நிகழ்ந்த காலமாம். யவனர்கள் முன்னாளில் சேரனாட்டுப் பெருந்துறைமுகப்பட்டினமாயிருந்த தொண்டி, முசிரி முதலியவிடங்களில் தம் கப்பலுடனிறங்கி, மிளகு முதலிய பொருள்களை விலைக்குப் பெற்றுச் செல்வதும், உண்ணாடுகளில்வியாபாரஞ் செய்வதும் பெருவழக்கமாயிருந்ததென்பது, டாலமி முதலியோர் குறிப்புக்களால்விளங்குவதேயன்றி, பழைய சங்க நூல்களிலும் அச்செய்திகள் கேட்கப்படுகின்றன. இதனை "யவனர் தந்த வினைமாண் கலம், பொன்னொடு வந்து கறியொடு பெயரும், வளங்கெழு முசிரி" (அகம்) என்பன போன்றவற்றான் அறிக. (கறி-மிளகு) இனி, மேற்கூறிய டாலமியாசிரியர் தங் குறிப்பில் தமிழகத்துள்ள பலநகரங்களைப்பற்றி யெழுதிய விடத்தில், ஆயநாட்டையும் அதனுள் ஐந்து துறைமுகங்களையுங் குறித்திருக்கின்றார். அவ்வாசிரியர் எழுத்துப்படி ஆராய்ந்தால்; வேள் ஆயுடை

யநாடு, திருவாங்கூர்ஸம்ஸ்தானத்துள்ள கோட்டயமென்னும் ஊர்க்குத் தெற்கண் உள்ள பிரதேசமாகு மென்பர். இவ்வாறு 1750-வருஷத்துக்கு முன்னிருந்த யவனாசிரியரொருவர் ஆய்நாட்டைக்குறித்திருத்தலால், அக்காலத்துக்கு முன்பு விளங்கிய வள்ளல் "ஆய் அண்டிரன்" என்பது வெளியாகின்றது.

மு. இராகவையங்கார்.

---

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராண அரும்பத விளக்கம்.

யாழ்ப்பாணம் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் மருகரும் மாணாக்கருமாகிய காலங்கடந்துபோன பிரபல வித்துவான் 'ஸ்ரீமத்-பொன்னம்பலப் பிள்ளையவர்களின் பனையேட்டுப் பிரதியொன்று நீண்டநாளாய் எம்மிடத்துள்ளது. இதைச் 'செந்தமிழ்ப்' பத்திரிகையில் வெளியேற்றினால் அதன் சந்தாதார்களிற் சிலருக்கேனும் பயன்படுமெனக்கருதிப் பெயர்த்தெழுதத் தொடங்கினோம்.

காப்பு.

உலகெலாமுணர்ந்தோ தற்கரியவ
னிலவுலாவியநீர் மலிவேணிய
னலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம்.

உலகெலாந்தாமாக வறிந்து வரையறுத்து இத்தன்மையனென்று கூறுதற்கரியன். நிலவு - ஞானசந்திரன். நிலவுலாவிய - சந்திரன் தவழ்கின்ற. ஆடுவான் - தம்பயன் கருதாதுபஞ்சகிருத்திய தாண்டவஞ் செய்தருளும் நடேசபிரான். மலர்—யாண்டும் வியாபித்த. சிலம்பு - வேதங்களாகிய பரிபுரம்.

ஓதற்கரியனுயினுனை ஆன்மாக்கள் இத்தன்மையனென்றறிந்து பாவித்து இன்புறுமாறு எங்ஙனமெனநிகழுமைய மறுத்தற்கு, உண்மையன்புடையார்க்கருள் செய்யுமாறு கருணையாற் றிருவுருக்கொண்டு தோன்றுவனென்பது தோன்ற "அம்பலத்தாடுவான்" என்றும், அவ்வன்புடையார்க்கு எளிதினறியற்பாலனென்பது தோன்றச் 'சோதியன்' என்றும், யாவர்மாட்டுந் தண்ணளியுடையானென்பது தோன்ற "நீர்மலிவேணியன்" என்றும், சர்வான்மாக்களும் புரியும் இருவினைகளையறிந்து அவற்றிற்கியைய இன்பத்துன்பங்களைக் கொடுத்தருளும் முற்றறிவுடையானென்பது தோன்ற ஞான சந்திரன் எனப்பொருள்படும் "நிலவுலாவிய" என்றும், எம்பெருமானடிகளாகிய சேக்கிழார்சுவாமிகள் விதந்து திருவாய்மலர்ந்தருளினமைதெளிக.

## பாயிரம்

(உ) தசைபொருந்திய உடம்பையெடுத்த பிறவியே, தான் பிறந்ததனாலடைதற்பாலதாகிய உறுதியைப் பொருந்தும். உறுதி, புருஷார்த்தங்களாகிய அறம் பொருளின்பம் வீடென்பன. பிறவி எழுவாய். ஏகாரம் பிரிநிலையோடு தேற்றத்தின்கண் வந்தது.

(ச) சொன்மலர் பொதிநலம்—பாமாலையிற் பொதிந்த நலம்.

(ரு) கூறுகேன்—வினையாலணையும் பெயர். அந்நாயன்மாருடைய அளவைக்கூட.

(சூ) பிரவாகிக்கின்ற தெளிவாகிய சமுத்திரத்தின் ஊற்றை உண்ணவேண்டுமென்னும் பேராசையையுடைய ஒருநாயை நிகர்க்கின்ற தகைமையுடையேன் அறிதற்கரிய பெருமை பொருந்திய திருத்தொண்டர்களுடைய நிகரில்லாத சிறப்பை முழுதுங்கூறலுற்றேன். இனி ஊற்றும் எனப்பாடமோதி வாயிலெடுத்தூற்றுகின்ற எனப் பொருள் கொள்வாருமுளர்.

(எ) சொல்லப்பட்ட பொருளையுடைய சிறப்பினால் அப்பொருட்குரிய சொல்லை எவரும் அங்கீகரிப்பர், அதுபோல, இப்பிரபந்தத்திற்கு எனது சொற்சிறிதாயினும், மெய்ம்மையாகிய பொருளுக்

குரிய புலவர் அப்பொருண் மேன்மையால் அங்கீகரிப்பர். இவ்வா றன்றி, சொல்லப்பட்ட புதல்வன் மாட்டுள்ள விருப்பத்தினால் அப் புதல்வனுடைய குதலைவார்த்தையை எவரும் அங்கீகரிப்பர் எனக் கூறுவாருமுளர். முன்னையதற்குப் பொருளை நோக்கிச் சொல்லை மேலாகக்கொள்வர் என்பதுகருத்து.

(அ) அன்பரல்லார்க்குத் தூரியராகிய நடராஜரது சபையைச்சி வந்த பரிசுத்தமான பொன்னால் வேய்வித்த சோழனாகிய நீடூழிகாலம் பூமியிலே சிறப்பையுடைய அநபாயனது சபையானது, பொருந்திய இவ்வுரையை அங்கீகரித்து மகிழும்; அநபாயன் அபாயரகிதன்.

(கூ) அருட்குணம்பொருந்திய திருத்தொண்டை அறிதற்கரிய அறிவினையுடைய நீர் இது கூறுதற்கியலுமோவென்னில், மயக்கமற்ற வேதாகமங்களைத் திருவாய்மலர்ந்தருளிய சிவபெருமானுடைய பிரதி பிம்பத்திலே தோன்றிய சுந்தரமூர்த்திநாயனார் திருவாய்மலர்ந்தரு ளிய திருத்தொண்டத்தொகையென்னுந் தேவாரத்திருப்பதிகத்தி னால் இயலுமென்க. இனி, நிழல் என்பதற்கு அசரீரியெனப்பொ ருள் கூறுதலுமொன்று; நிழல்கூறியபொருள், நடராஜராகிய அசரீரி அடியெடுத்துக்கொடுத்த "உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்" என் பது. அஃது இந்நூலின் முதற்செய்யுளில் முதலினும், இறுதிச்செ ய்யுளில் இறுதியிலும், மத்திமச்செய்யுளில் மத்தியிலும் "உலகெலா ம்" என்னுஞ்சிவவாக்கை ஆசிரியர் புணர்த்துக் கூறியவாறுபற்றி யறிக.

## முதற்காண்டம் திருமலைச்சருக்கம். திருமலைச்சிறப்பு.

(க) பொன்னிலே வெண்மையாகிய திருநீற்றை யணிந்தாற் போலச் சொல்லப்படாநின்ற நெடியஇமயமலையின் பக்கத்தது. என நீள் எனமுடிக்க. இமயமலையைப் பொன்னாகவும், அதன்மேலுள்ள பனியை விபூதியாகவுங்கொள்க.

(உ) அந்தப் பெரிய கைலாசமலையானது, விளங்குகின்ற அள விறந்ததலங்களும் மிகுந்த ஒளிவிளங்குகின்ற தளிராக எழுந்த ஏழ் பற்ற உலகமென்கின்ற ஒளியையுடைய அழகிய கொடியானது தன் மீதுமலருகின்ற வெண்மையாகிய மலரைப்போல்வது.

(௪) கானம்—பாட்டு. "காரெதிர்தானமாக்கண் முழக்கமும்" மேகத்திற்கு எதிரே தம்மினமென்றுகருதி யானைகள் ஒலிக்கின்ற ஒலியும்.

(௫) அனிதம்—அளவின்மை.

(இன்னும் வரும்.)

ஜி. சதாசிவம்பிள்ளை,
"நாகைநீலலோசனி" ப் பத்திராதிபர.

---

௳

# மகாபாரதச்செய்யுட் பாடாந்தரம்.

(உஎ-ம் பக்கத்தொடர்ச்சி.)

சம்பவச்சருக்கம்.

எம்பிரானுநின்மூலமிந்திரன் முதலோர்க்கெல்லாந்
தம்பிரான் பாண்டுவீன்றதருமதேவதைதனைநோக்கி
யமபுராசிகளுட்பட்டவவனிகளனைத்துநாமே
யிம்பரேயகற்றியெல்லாவெண்ணமுமுடித்துமென்றான்.

என்னும் ககச-ம் செய்யுளில் 'இம்பரேயகற்றி' என்பது 'இம்பர்நோயகற்றி' எனக்காணப்படுகின்றது. 'இம்பரேயகற்றி' என்பதற்கு ஏகாரத்தை அசையாக்கி அகற்றியென்பதற்கியைந்த ஒருசொல்லை வருவித்துப் பொருள் கூறுவர். அதனினும் அசையின்றியும் அகற்றி யென்பதற்கியைந்த 'நோய்' என்னுஞ்சொல் வெளிப்பட்டு நின்று பொருடரும் 'இம்பர் நோயகற்றி' என்பதே சிறப்புடைத்தென்க.

வாரணாவதச்சருக்கம்.

அதிருகின்றவெழிலிபோலருச்சுனன் றனைக்குறித்
தெதிருகின்றவின்மைகண்டியாவருந்திகைக்கவே
முதிருகின்றமெய்யனுகிமுன்னிருந்தகௌதம
னுதிருகின்றவமுதவிந்துவொக்குமென்னவுரைசெய்வான்.

என்னும் ௬௬-ம் செய்யுளில் 'எதிருகின்ற வின்மைகண்டு' என்பது 'எதிருகின்ற வன்மைகண்டு' எனக் காணப்படுகின்றது. இவ்விடத்தில், எதிருகின்ற வன்மையைக்கண்டதன்றி வின்மையைக் கண்டிராதலின் 'வன்மைகண்டு' என்பது சிறப்புடைத்தென்க.

௬௮

தேரோடருக்கனருணமணிச்சிமையத்துதிப்பச்செவ்வியுட
னீரோடையிற்செந்தாமரைகணிறம்பெற்றலர்ந்துநின்றனபோல்
வீரோதயன்வந்துதிப்பளவின்மேன்மேன்மகிழ்ந்துமெய்களித்துப்
பாரோர்கண்கள்களித்தனவார்பார்க்குந்தோறும்பரிவுற்றே.

என்னும் ௮௮-ம் செய்யுளில் 'மெய்களித்து' என்பது 'மெய்சிலிர்த்து' எனக் காணப்படுகின்றது. பின் கண்களுக்கேற்பக் 'களித்தன' எனக் கூறுதல்போல மெய்க்கேற்பச் 'சிலிர்த்து' எனக்கூறுவதே சிறப்புடைத்தென்க.

## வேத்திரகியச்சருக்கம்.

மான்மதங்கமழ்கொடிமந்தரந்தொறும
கான்மணங்கமழ்தடங்காவகந்தொறுந்
தேன்மிகுசனைநெடுஞ்சிலம்பகந்தொறு
மேன்மணம்புரிந்தனர்வேட்கைவிஞ்சவே.

என்னும் ௨௯-ம் செய்யுளில் 'கொடியந்தரம்' என்பது 'கொடிமந்திரம்' எனக் காணப்படுகின்றது. கொடிமந்திரம்—லதாகிரகம்; ஆதலின் இப்பாடமே சிறப்புடைத்தென்க.

## இந்திரப்பிரத்தச்சருக்கம்.

யாய்மொழிதலைமேற்கொண்டுமிளையவர்மொழிகள்கேட்டும்
வேய்மொழிவேய்த்தோள்வல்லிமெனமொழிவிரும்பலுற்றும்
வாய்மொழியறத்தின்மைந்தன்மாநகர்வாழுநாளில்
வாய்மொழிப்பாடலோரோடோரந்தணனுங்கண்வந்தான்.

என்னும் ௪௦-ம் செய்யுளில் 'பாடலோரோடோரந்தணன்' என்பது 'பாடல்யாழோரந்தணன்' எனக்காணப்படுகிறது. நாரதமுனிவரைக்கூறுமிடத்து "யாழ்முனி" "வீணைநாரதன்" என்று வீணையாற்சிறப்பித்துக்கூறுதல் வழக்காதலின் 'பாடல்யாழோரந்தணன்', என்பதே பொருத்தமுடைத்தென்க. பாடல் யாழோரந்தணன் - பாடலைத்தருகின்றயாழையுடைய ஒப்பற்றமுனி.

## காண்டவதகனச்சருக்கம்.

'பச்சைவாசிகளும்' என்னும் ௯௫-ம் செய்யுளின்பின்,

மாறுபட்டுழியப்பற்குனன்கணையான்மழுக்களுஞ்சூலமுமுடைய
நீறுபட்டுடலினீற்றுடன்மடியநெடுங்கொடியூர்தியேறுகளு
மேறுபட்டழியச்சடையில்வார்நதியாலேறியதூளிவானெறியுஞ்
சேறுபட்டிடுமாறோடினார்மீளப்பதினொருதிறலுருத்திரரும்.

என்னும்செய்யுள் இப்பொழுது கிடைத்த ஏடுகளிலெல்லாங் காணப்படுகின்றது. ஆசிரியர் ௯௪-வது "செய்யுளில் தேவருங்கோடிதேவருக்கொருவர் சிரங்களாய் நின்ற முப்பத்து, மூவருந்தத்தம் வாகமேல் கொண்டு முந்துற வந்து வந்தணிந்தார்" என்றுகூறியதற்கேற்ப "பச்சைவாசிகளும்" என்னுஞ் செய்யுளால் அருக்கர்பன்னிருவரும், "மாறுபட்டுழி" என்னுஞ்செய்யுளால் உருத்திரர் பதினொருவரும், "எண்ணியவசுக்கள்" என்னுஞ்செய்யுளால்வசுக்களில் வீட்டுமராக அவதரித்தவரொழிந்த எழுவரோடு மருத்துவரிருவரும் "இருவரெண்மர்பதினொருவர்பன்னிருவரெனுமவிண்ணவர்கண்முப்பத்து மூவரையும்" வெந்நிட்டனர் என்று முறையாகக்கூறியிருக்கின்றார். ஈண்டுக்கூறிய உருத்திரர் பரமசிவனது ஸாரூப்பியம் பெற்றுச் சிவகணத்திற் சேர்ந்திருப்பவரல்லர்;சிவசின்னங்களைப்பெற்றுத்தேவகணத்தலைவராயிருப்பவர் ஆதலால் இச்செய்யுளீண்டிருத்தலின்றியமையாததென்க.

ஷை

அருணவெங்கனலோன்கனலொடுகலந்தானுசுகனவர்குநண்பானான்
கருணையில்யமனுங்காளிடைமடியுங்கணத்திலேகவலையுற்றனனால்
வருணனுங்கடல்கள்வறத்தல்கண்டழிந்தான்மதியொடுவைச்சிரவணனு
மிருணிறவரக்கன்றானுமிங்கிவரோடெங்ஙனம்பொருதுமென்றிளைத்தார்.

என்னும் ௯௭-ம் செய்யுளில் 'மதியொடுவைச்சிரவணனும்' என்பது 'மதியுமம்மதிமுடித்தவனும்' எனக்காணப்படுகின்றது. இதற்குமுன்னுள்ளமூன்று செய்யுள்களால் முப்பத்து முக்கோடி தேவரும் புறந்தந்தமைகூறி, திகசுப்பாலகர்களில் (தலைவனாகிய இந்திரனைப்பற்றிப் பின்னர்க்கூறலின்) ஏனை எழுவரை இச்செய்யுளாற் கூறுவான்றொடங்கி 'அக்கினிக்கடவுள் அக்காட்டுத்தீயுடனே சேர்ந்தான்;வாயு(அக்கினிக்குத்தோழனாகையால்) அவனோடு சேர்ந்து எரிப்பதற்குதவியாயினான்; யமன் அக்காட்டிலே மடியும் உயிர்களைக்கொண்டு செல்லுந்தொழிலிற் கவலையுற்றிருந்து விட்டான்; வருணன்இத்தீயாற்கடலும்வற்றுதலைக்கண்டழிந்தான்; முடிவிற்குபேரனும், ஈசானனும், நிருதியும்—நாம்மட்டும் நின்று இவ்விருவரோடும் பொருதல் அசாத்தியமென்றெண்ணியிளைத்தார்' என்றலின் 'மதியுமம்மதிமுடித்தவனும்' என்னும்

பாடமே பொருத்தமுடைத்தென்க. மதி—குபேரன். பின் நிரைமீட்சிச்சருக்கம் ௯௯-ம் செய்யுளில் 'வடதிசை மறலிவாளி தென்றிசை மதியின்வாளி' என்பதனுற் காண்க; மதிமுடித்தவன் என்றது வடகீழ்த்திசைக்காவலனுகிய ஈசானனை; இவன் சிவசின்னங்களைப்பெற்று வடகீழ்த்திசைக்காவலனுயிருத்தல் பற்றி மதிமுடித்தவனென்ருர். இங்ஙனங்கொள்ளாதொழியில் இக்கவிக்குப்பொருளியையாமையறிக.

இராசசூயச்சருக்கம். ௧௧௩-ம் செய்யுளின்பின்,

கொச்சையிடையர்மகளிருக்குங்கூத்துக்குனித்துநவநீதப்
பிச்சைநுகருமிவனெமக்கு முன்னேபூசைபெறுவானுஞ்
சச்சைமறையின்முறையென்னுந்தருமன்புரிந்தமகமென்னுஞ்
செச்சைவடிவேன்முடியரசர் செங்கோலென்னுந்திருவென்னும்.

என்னும் ஓர் செய்யுள் சில ஏடுகளில் ௧௧௪-வதாகக்காணப்படுகின்றது.

ஷை

கஞ்சனெனுமாமனுடுகாளையமர்விளைத்தான்
வஞ்சனையினுலமருமெத்தனைமலைந்தான்
றஞ்சமெனவேமருவுதமரிலொருதானே
மிஞ்சிவிரகாலுரியமேதினிபுரந்தான்.

என்னும் ௧௨௪-ம் செய்யுளில் 'காளையமர்விளைத்தான்' என்பது 'காளையமர் செய்தான்' எனக்காணப்படுகின்றது. ஓசையின்பம் பயத்தலின் 'காளையமர்செய்தான்' என்பதே சிறப்புடைத்தென்க.

சூதுபோர்ச்சருக்கம்.

விதுரனெந்துநீதிகூறவிழியிலாமையன்றியே
வெதிரனுங்கொலென்னுமாறுவிழியிலானும்வைகினன்
சதுர்புரிந்தசகுனிசொல்லையெதிர்புரிந்துதருமனு
மதிரவஞ்சமுதிரவந்தவருளிலானுடாடினன்.

என்னும் ௧௮௭-ம் செய்யுளில் இரண்டாமடி 'பெதிரனுங்கொலென்னுமாறு பெரிய தாதை வைகினன்' எனக்காணப்படுகின்றது. அவையிலிருந்தோர் (திருதராஷ்டிரனை) "இவனுக்குக்கண் மட்டுந் தெரியாதென்றெண்ணியிருந்தோம்; காதுங்கேளாதுபோலும்" (கேட்கின் விதுரன் இவ்வளவு நீதிகூறவும் வாளா இரான்) என்று சொல்லும்படி தருமனுக்குப் பெரியதாதையாகியதிருதராஷ்டிரனிருந்தான் எனப் பொருள்கொள்ளக்கிடத்தலின் இப்பாடமே சிறப்புடைத்தென்க. பெதிரன் - செவிடன். 'விழியிலா'

மையன்றியே, வெதிரெனுஞ்சொலென்னுமாறு விழியிலானும் வைகினன்"
என்பது சொல்லும்பொருளுஞ்சிறவாமனிற்றல் காண்க. பெதிரனும் என்ற
தில் உம்மை இறந்ததுதழீஇயது.

௬௪

மேகங்கள்வழங்காமல்விண்ணதிர்ந்திட்டூர்கோளும்வெயிலைச்சூழ்ந்து
பூகம்பம்பிறந்துடுவுமரும்பகலேவிழுந்துடனேபொய்கைவாடி
யாகஞ்செய்நெடுஞ்சாலையின்பாலுஞ்செந்நீராயிருந்தவேந்த
ராகங்கவொளிமழுங்கிற்றவதாவென்றணங்கனையாளழுதபோதே.

என்னும் ௨௫௯-ம் செய்யுளில் 'அவதா' என்பது 'அவிதா' எனக்காணப்படுகின்றது. அவிதா-யாதேனும் ஓர் ஆபத்து அடைந்தவர் அதினின்றும் நீங்குதற்கு உதவிபெறும்பொருட்டு முறையிட்டுக்கூறும் ஒருசொல். (தமிழ்ச்சொல்லகாராதி, முதலாம்பாகம்). 'அவதா' என்பதற்கு இப்பொருளின்மையின் 'அவிதா' என்பதே பொருத்தமுடைத்தென்க.

(இன்னும் வரும்)

சேற்றூர்—சுப்பிரமணியக்கவிராயர்.

---

# க லி ங் க ம்.

---

பாரதகண்டமெனும் பெயர்புனைந்த இவ்விந்தியாவின் கண்ணே பூர்வம் இந்துக்கள் அரசாண்ட காலத்து இந்நாடானது ஐம்பத்தாறு தேசங்களாகத் தொகுக்கப்பட்டு ஒவ்வொன்றும் தனித்தனியே இந்து அரசர்களான ஆரியரால் ஆளப்பட்டு வந்ததென்பதைப் புராணங்களும் ஆங்காங்குக் காணப்படும் சிலாசாஸனங்களும் மற்றும் கிரந்தகர்த்தர்களனேகர் தமக்கு வாய்த்திருக்கவல்ல சமயங்களிற் பொதுவாய்க்கூறியுள்ள குறிப்புக்களும் தெளிவாய் விளக்குகின்றன. இவ்வைம்பத்தாறு தேசங்களுள் கலிங்கதேசமும் ஒன்று. இத்தேசத்துத் தென்பாரிசத் தெல்லையானது கிருஷ்ணாஜில்லாவிலுள்ள பெஜவாடாவுக்கு அருகிலிருக்கும் ஸ்ரீகாகுளம் வரைதானென்று தொன்மையாராய்ச்சி வல்லவர் பலர் கூறியிருக்கிறார்; அவர்க

ளில் வேறுசிலர் 'தேலுங்கு' என்னும் பதமானது 'கலிங்கம்' என்னும் பதத்திலிருந்தும், 'தேலிங்கானு' என்னும் பதமானது 'த்ரிலிங்கம்' என்னும் பதத்திலிருந்தும் பிறந்தன வென்று சொல்லுகிறார்கள். சென்னைராஜதானி நிருவாகத்தைப்பற்றிய மான்யூலில் மிஸ்டர் மக்லீன் என்ற ஆங்கிலபாஷாநிபுணர்* மேற்சொன்ன விரண்டினையும் மறுத்துத் 'தேலுங்கு' (தெலுகு) என்ற பதத்திற்கு 'தேளிந்த பாஷை' என்று அர்த்தங்காட்டி யிருக்கின்றார். புராதன கலிங்க ராஜ்யத்தில் அடங்கியுள்ள தேசங்களை இப்போது குறிப்பிட்டுச் சொல்ல முடியாவிடினும், கிருஷ்ணாநதியை யோர் எல்லையாகவும் ஓரிஸ்ஸாவை மற்றோர் எல்லையாகவும் கொண்டு இவ்விரண்டுக்கும் மத்தியிலுள்ள ஊர்களனைத்துமே பண்டைக்காலக்கலிங்கதேசமென நிச்சயமாய்ச்சொல்லலாம். நெல்லூர் ஜில்லா மான்யூலில் தெலிங்கானு வென்னும் பதத்திற்கு த்ரிலிங்கம் அல்லது சாமானிய மக்கள் பயிலுந் தெலுங்கு என்றர்த்தமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் மிஸ்டர் ப்ரௌன் என்ற மற்றோராங்கிலபாஷா துரந்தரர் 'த்ரிலிங்க' வெனும் உரிச்சொல்லினின்றும் பொதுவிலக்கணவதிகாரத்தை யொட்டி 'திலிங்க' வெனும் பதம் ஏற்பட்டதென்றும், அதனையே ஜனசமூகத்தவர் 'தேலிங்கா' வென்று வழங்கிவருகிறார்களென்றும் குறிப்பிட்டுள்ளார். சிவபிரானைக்குறிக்கும் அடையாளமான மூன்று லிங்கங்கள் ஆவிர்ப்பவித்துள்ள தேசத்திற்கு த்ரிலிங்கமென்றார், ஆகவே நாம் மேலே காட்டிய எல்லைக்குட்பட்ட நாடே மூன்று குன்றுகளை ஒருமித்துச்சேர்த்து விளங்குகிற தென்றும், லிங்க ஸ்வரூபமாய் எழுந்தருளியிருக்கும் மூன்று குன்றுகளுக்கும் அவ்வவற்றைச் சுற்றி யுள்ள பக்கவட்டத்திற்கும் முறையே ஸ்ரீசைலம், காளேசுவரம், பீமேசுவரம் எனப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றன வென்றும் தெரியவருகிறது. இஃதுண்மையாயின் பாதிகர்நூல்ஜில்லாவுக்கும் கோதாவரி ஜில்லாவுக்கும் மத்தியிலுள்ள பிரதேசமே தெலுங்கு தேசமாக வேண்டும்; ஆனால் உண்மையுடன் இது கலந்ததாக விளங்கவில்லை. மேலும் பழைய ரிக்கார்டுகளிலிருந்து இப்பிரதேசத்துப் பெரும்பாகம் அடவியாயிருந்திருக்கவேண்

* Mr. Maclean in his "Madras Manual of Administration."

டுமெனவும் எஞ்சிய சொற்ப பாகத்தில் வசித்தோர் அக்காலத்திற் பேசிவந்த பாஷையிலிருந்து இப்பிரதேசத்திற்குப் பெயர்வந்திருக்க வேண்டுமென்றும் தெரிந்து கொள்ள இடமேற்படுகின்றது. பூர்வத்தில் மகததேசத்தை ஆண்டு வந்த மௌர்யவரசர்களே கலிங்கதேசத்தை யாண்டுவந்தனரென மிஸ்டர் மக்லீன் காட்டுகிறார். 'மௌர்ய, மகத' ஆகிய இவ்விரண்டும் ஒரே தேயத்தைக்குறிப்பிடலாமென்று சொல்வதற்கிணங்க, கிறிஸ்து பிறப்பதற்கு 250 வருடங்களுக்கு முன் அரசாண்ட மகததேசத்தரசனான அசோகன் பௌத்தமதத்தைப்புவியின்கண் ஸ்தாபித்தவனாவ னென்றும் அனேகமலைக்குன்றுகளில் 'மௌர்யஅசோகனு' லென்றும் 'மகதவசோகனு' லென்றும் பிரதிஷ்டிக்கப்பட்டதாக சிலாசாஸனங்கள் இன்றும் காணப்படுகின்றனவென்றும் தெரிகிறது.

மிஸ்டர் மக்லீன் என்ற ஆங்கிலநிபுணர் கூறுவதிவ்வாறாக, கிருஷ்ணா (குண்டூர்) மான்யூலில் மிஸ்டர் பர்னல் கூறுவதைக் கவனிப்போம். அசோகன் காலத்திலேற்பட்ட சிலாசாசனங்களில் தெலுங்கு ராஜ்யங்களை அறிவிக்கும் வாக்கியங்க ளொன்றுமில்லை யென்று அவர் கூறுகிறார். ஆனதால் அக்காலத்தில் ராஜ்யத்தைப்பற்றிய விவரமே யில்லை யென்று சொல்லப்படும் சிலாசாசனங்கள் கொண்ட அப்பாகம் நாகரிகமடையாதிருந்திருக்க வேண்டுமென்றும், ஆகவே அங்குக் காட்டுஜாதியர் அக்காலத்தில் பரவியிருந்திருக்கவேண்டுமென்றும் செவ்வனே அனைவர்க்கும் விளங்கக்கூடும். ஆன போதிலும் ஜக்கய்யபேட்டைக் கருகிலுள்ள பௌத்த ஸ்தூபத்தில் காணப்படும் லேகத்தினால் அமராவதி, தரணிகோடா என்னு மிவ்விரண்டிடங்களிலுமுள்ளமடங்கள் கிறிஸ்து பிறக்க இரண்டு நூற்றாண்டுகளுக்குமுன்னதாகவே ஏற்பட்டதாகுமெனக் கூறுதற்கியலும். இதைவிட்டுக் கோதாவரிஜில்லா மான்யூலில் இக்கலிங்கத்தினதிபத்தியத்தைப் பார்க்கின், அந்த ஜில்லாவில் பளிங்குக்கற்களினலாய பௌத்தச் சிலைகளும் கருங்கற் பீடங்களும் இருக்கும் போது அவையினைக் கொண்டு பௌத்தமானது கலிங்கதேசத்தில் ஆழமாய் ஊன்றப்பட்டிருந்ததாகவும், அக்காலத்தில் கோதாவரியைக் கலிங்கமென்று அழைத்ததாகவும், அப்பாகத்தில் பௌத்தமதமானது முன்

னரேயே ஸ்தாபகமாயிருந்ததனால் அங்கு அசோகன் பௌத்த சம்பந்தமான லேகங்களைச் செதுக்கும்படி உத்தரவு செய்வது அனாவசியமெனக் கருதியதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது; எனினும் கஞ்சம் ஜில்லாவிலுள்ள ஆஸ்கா என்னும் பட்டணத்தில் இப்போது பௌத்த சம்பந்தமான சிலாலேக மொன்றைக் காணலாம். அதிலிருந்து கலிங்கமானது மகததேச மென்று தெளிவாய் விளங்கலாயிற்று. ஆனபோதிலும் கிறிஸ்து பிறந்த முதல் நூற்றாண்டிலும், இரண்டாவது நூற்றாண்டிலும் முறையேயிருந்த ப்ளினி, டாலமி எனு மிருவர்களும், லேகத்திற்குறிப்பிட்டதை அர்த்தமாக்குவதில் மிகுந்த சிரமமெடுத்துக் கொண்டதாகத் தெரியவருகிறது.

அச்சிலாலேகத்து முதற்குறிப்புக்கு 1635-வது வருஷத்தில் மீல்மன் ஹாலெண்டென்பவர் பின்வருமாறு அர்த்தங்காட்டி யிருக்கிறார்:—"அனேக தேசத்தார்க்குப் பொதுவில் ப்ராஹ்மணீ" என்று பெயரிருந்தது; அத்தேசத்தார்களில் 'மக்கோகலிங்கி' என்றழைக்கப்பட்ட தேசத்தாரு மொருவர்; பிரிஞஸ், கெய்னஸ் எனுமிரண்டும் நதிகளில் முக்கியமானவை; இந்நதிகள் கங்காநதியிற் போய்ச்சேருவனவாகும். கப்பல்கள் அந்நதிகளிற் செல்லுவதற் குரித்தாய் அவை அதி ஆழத்துடனிருந்தன. மாலு மலையானது நாட்டில் சமுத்திர மட்டத்திற்கு உயரமானது. கங்காநதி முகத்துவாரத்திலிருந்து கலிங்கன் முனைவரையில் 625 மைல் தூரமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். அந்தலேகத்துப் பிற்பகுதியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது:— "அதிக விஸ்தீரணத்தோடும், கங்காரிதிகலிங்கியைச் சேர்ந்த 'மோடோகலிங்கா' வெனும் பெயர் கொண்ட ஒரேஜாதியரோடும் கங்காநதியில் ஒரு தீவு இருக்கின்றது." இக்குறிப்புக்களனைத்தையும் ப்ளினி, ஆதாரமாகக்கொண்டு கலிங்கதேசத்தின்கண் மக்கோகலிங்கி, மோடோகலிங்கி, கங்காரிதிகலிங்கி என்ற மூவகைச்சாதியர் இருந்தன ரென்றும், அவர்கள் 'மான்ஸ் மாலுஸ்' என்ற மலைக்குத் தென்பாரிசத்தில் தான் வெகுவாய் வாசஞ் செய்து வந்தன ரென்றும் வாதிக்கிறார். கஞ்சம் ஜில்லாவிலுள்ள மகேந்திரகிரியைத்தான் முன்னர் மான்ஸ்மாலுஸ் என்று பெயரிட்டழைத்ததாகவும், அதனைத்தான் இப்போது 'மலையா' வென்று ஜனங்கள்

சொல்லுவதாகவும் தெரிகிறது. கோதாவரி ஜில்லா மான்யூலேப்பார்க்குமிடத்து 'மோடோ கலிங்கம்' எனும் பதத்தை 'மூடோ கலிங்கம்' என்று படிப்பதே சரியாகு மென்று தோன்றுவதாகவும், 'மூடு' (தெலுங்கில் 'மூடு' என்றால் 'மூன்று' என்றருத்தம்) என்பது திரிந்து 'மோடோ' என்றேற்பட்டதனால் முதன் முதல் 'மூன்று கலிங்கம்' என்றிருந்திருக்கவேண்டு மென்பதாகவும், அதனாலேதான் த்ரிகலிங்கா அல்லது மூன்று கலிங்கங்கள் என்றது (சிலா லேகத்திற்கண்டபடி) தெலுங்கு தேசத்திற்குப் பெயராயமைந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ப்ளீனியினால் உதகரிக்கப்பட்ட இத்தேசத்தை டாலமியும், 'த்ரிக்லிபம்' அல்லது 'த்ரிலிங்கம்' என்று, இப்போது நம்மவர் அழைக்கும் தெலிங்கானா வென்னும் பெயருடனெவ்வுமாறு, கூறினர். ஆகவே சிலாலேகத்திற் குறிப்பிடப்பட்ட ப்ரினஸ், கெய்னஸ் ஆகிய இவ்விருநதிகளும் இப்போது நாமழைக்கும் கோதாவரி, கிருஷ்ணா எனும் இவ்விரண்டு நதிகளாகத்தானிருந்திருக்கவேண்டு மென்றேற்படுகின்றது. வெவ்வேறு ஜாதியாரைப்பற்றிப் பேசுகையில் மகாபாரதத்திலும் மும்முறை கலிங்கர்களைக்குறித்துப் பிரஸ்தாபம் வந்திருப்பதாக மிஸ்டர் மக்ளீன் காட்டுகிறார்.

கோதாவரி நதியையும் சிற்சில சமயங்களில் ஜனங்கள் கங்கையென்று கூறுவது முண்டு. ஆனதால் மேற்கூறியவற்றை ஊர்ஜிதப்படுத்த நாம் முன்வரின் முதன் முதல் துரைத்தனத்தார் ஆராய்ச்சி செய்து வரைந்து விடுத்த மான்யூல்களைப் பார்க்கவேண்டி வருகிறது. கோதாவரி, நெல்லூர் ஆகிய இவ்விருஜில்லா மான்யூல்களைப்பார்க்கு மிடத்து மேலே சொன்னபடி கோதாவரி, கங்கையென்று சிற்சில சமயங்களில் அழைக்கப்படுவதன் காரணமாக ப்ளீனி அவ்விரண்டுநதிகளைப்பற்றி யாராயுங்கால் ஒன்றுக்கொன்றாய்ச் சொல்லித்தடுமாறி யிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. மேலும் கலிங்கதேசமானது மகதவரசாட்சிக்குட்பட்டதை இப்போது ஞாபகப்படுத்துவோமானால், ப்ளீனி கூறும் மக்கோகலிங்கி மோடோகலிங்கி ஆகிய இவ்விரண்டும் 'மகதகலிங்கி' யின் திரிபுகளாயிருக்கவேண்டுமென்று ஊகிக்க இடந்தருகிற தல்லவா? ஆனால் பூர்வம் மகத

தேசத்துக்கு பாட்னு என்ற பாடலீபுரம் புராதன நகராயிருந்தது. டாலமி யே பார்தலிஸ், டொண்டகுலா எனு மிரண்டையும் கலிங்க தேசத்துப் பிரதான நகரங்களாய்க் குறிப்பிடுகிறார். தேசங்களைக் காட்டும் படத்தில் (Map) மிஸ்டர் மக்ளீன் கடற்கரையோரமாய்க் கலிங்கபட்டணத்திற்குக் கொஞ்சம் தெற்காக பார்தலிஸ் என்ற இடத்தைச் சுட்டிக்காட்டி யுள்ளார். எனினும் இப்பெயர் கங்காநதி தீரத்திலுள்ள பாட்னு வென்ற பாடலீபுரத்திற்கே ஏற்பட்டிருக்கின்றது. அவ்வாறாயின் 'கங்காரிதிகலிங்கி' அல்லது கங்காதீரத்துக் கலிங்க தேசமென்றும் சொல்லுதலியலு மென்று நிச்சயிக்கவேண்டிவருகிறது. இந்தப் பாட்னுவுக்கருகாய்க் கங்கையில் சோனுவென்னும் ஒரு நதி சேருகின்றது. இது கொப்னுஸ் நதியா யிருக்குமோ? ப்ளைநி குறிப்பிடும்நதி இதுதானோ? இதுவாயிருந்தால் கோதாவரி, கிருஷ்ணை ஆகிய இவ்விருநதிகளுக்குமே முன்னர் அப்பெயரிருந்ததென்பதற்கு அத்தாட்சியென்ன? வார்த்தையின் ஒலியைச் சேர்ந்த வரையில் கெய்னுஸ், சேஸ்நாத் ஆகிய இவ்விரண்டுநதிகளும் ஒத்திருந்தாலும் அவையிரண்டும் கோதாவரி, கிருஷ்ணை வென முறையே சொல்லுதற்கிடமின்றி சேஸ்நாத் நதியானது மஹா நதியிற் போய் விழுகின்றது. மஹாநதி சங்கமமாகுமிடத்திற்கும் கங்காநதி சங்கமமாகுமிடத்திற்கும் அதிகதூரமில்லை யாதலான் முன்னர்க்குறிப்பிட்டது கங்காநதியின் கிளையோ வெனப் பலர் சந்தேகிக்கக் கூடும். கோதாவரியாற்று உபநதிகள் பலவற்றுள் 'ப்ரண்ஹிதா' நதியானது முக்கியமானதாம். ஒரு வேளை இந்த 'ப்ரண்ஹிதா' நதிதான் ப்ரினுஸாயிருக்குமோ? அவ்வாறாயின் கங்கையின் ஒரு பகுதியா யிருக்கலாமென்று கருதப்படும் மஹாநதிக்கும் (முதலாவது கங்கை) சேஸ்நாத், ப்ரண்ஹிதா, கோதாவரி (இரண்டாவது கங்கை) ஆகிய இம்மூன்று நதிகளுக்கும் மத்தியிலுள்ள ஸ்தலம் ஒரு பெருந்தீவாகக் காணப்படவேண்டு மென்று செவ்வனே விளங்குகின்றது. இதனைக் கலிங்கதேசமென ஸ்தாபிப்பார் சிலருளரெனினும் கோதாவரி ஜில்லா மான்யூலை ஆராய்ந்து பார்க்கும் போது வேறுவிதமாகப் புலப்படுகின்றது.

அந்த ஜில்லாவிலுள்ள தந்தா, தந்தகூட, தந்தகுல என்று மூன்று விதங்களாய் அழைக்கப்படும் பட்டணமே பௌத்த சமயா

சாரியர் புகழ் பெற்றோங்கும் தந்தபுரமா மென்று வாய் கூசாமற் குறிப்பிடலாம். ஆனால் இந்தத் தந்தபுரம் எவ்விடத்திருந்த தென்பதைப்பற்றிச் சிறிது யோசிக்கவேண்டித்தான் வருகிறது. ஏனெனில் இப்போது கோதாவரி ஜில்லாவில் பெயர்போன பட்டணமாயிருக்கும் ராஜமஹேந்திரபுரத்தையே தந்தபுரமென்று கூறுவர் சிலர். தந்தபுரத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்படும் பௌத்தக்கோயில்களையும் மற்று மிருக்கவல்ல பௌத்த அடையாளங்களையும் மனதிற்கொண்டு இந்த ராஜமஹேந்திரபுரத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது தந்தபுரத்திற்கும் ராஜமஹேந்திரபுரத்திற்கும் அதிதூரமென்று கூறுவாரும் உளர். ஆனால் மக்ளினே தந்தகுலாவைத்தான் கலிங்கபட்டண மென்று குறிப்பிடுகின்றனர். ப்ரண்ஹிதாநதிக் கருகிலுள்ள புஸ்தரில் கந்தவாரா எனுமிட மிருக்கின்றது. பின்னும் ஜக்கய்யபேட்டையில் கிறிஸ்துபிறப்பதற்கு 200 வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டதாய் அடையாளமிருக்கும் பௌத்தசமயாசாரிய மடமொன்றைக்கண்டு பிடித்திருக்கிறார்கள். இதற்கு ஒரு மைல் தூரத்தில்தான் ஜயந்திபுரமிருக்கின்றது. இது தான் பௌத்தசமயிகள் புகழ்படைத்தோங்கும் தந்தபுரமாயிருக்கவேண்டும். ஆகவே கலிங்கனுடைய நிலயம் கலிங்கபட்டணம் அல்லது கொரிங்கா (Coringa) வாயிருக்கவேண்டும். வெகுவாய் முற்கூறிய கலிங்கபட்டணமாகத் தானிருக்கவேண்டு மென்பது எமது துணிபு. இது நிற்க, கோதாவரி நதிக்குத்தென்பாகமா யிருக்குமிடத்தைச் சிறிது கவனிப்போம். கிறிஸ்தவர் அப்பாகத்தைக் கைக்கொள்வதன் முன்னர் ஆந்திரர்கள் அங்கு (கலிங்க ராஜ்யத்து அப்பாகத்தில்) குடியேறி ஸ்தாபிதமானார்கள். ப்ளினி அவர்களை வேறுதனியான ஜாதியரென்று கூறுகிறார். ஆதலால் ப்ளினியினது காலத்தில் கலிங்கதேசத் தெல்லையானது பாட்னா முதல் கங்கை, வரதா, கோதாவரி இந்நதிகளின் முகத்துவாரம் வரையிலும் பரவியிருக்கவேண்டு மென்றும், பாட்னா, தந்தவாரா, கலிங்கபட்டணம் ஆகிய இப்பிரதானபட்டணங்களோடு கலிங்கதேசமானது வெவ்வேறு பகுதிகளாகப் பிரிந்து நின்றிருக்கவேண்டுமென்றும் தெரிகிறது. ஆனால் முதற் குறிப்பிட்ட பகுதிகளிரண்டும் மலைப்பிராந்தியங்களாலும் காடுகளாலும் சமுத்திரக்கரை விஸ்தீரணத்திலிருந்து பிரிக்கப்பட்டிருப்பதனாலும், முதலிலி

ருந்து இரண்டாவது மத்தியமாகாணக் காடுகளாலும் சோடா நாகப்பூர் (Chota-Nagpur) காடுகளாலும் பிரிக்கப்பட்டிருப்பதனாலும், அப்போதே கடற்கரையோரத்து விஸ்தீரணபூமி பிரிவுண்டு ஒரிஸ்ஸா அரசர்களின் ஆளுகைக்குட்பட்ட படியாலும் மேலே சொன்ன மூன்று வெவ்வேறான பகுதிகளும் மாக்கோகலிங்கி, மோடோகலிங்கி, கங்காரிதிகலிங்கி ஆகிய இம்மூன்றினையுஞ் சேர்ந்திருக்கலாமென்பதை எவராலும் நிச்சயித்துக் கூற முடியவில்லை.

ல. அனந்தய்யர்.

---

# பரியாயப் பெயர்.

ஒரு பாஷையின்கண்ணேயுள்ள சொல் வளங்கொண்டு அப்பாஷையாளரது விருத்தியும் நாகரிகமும் அளக்கப்படும். விருத்திப்பெருக்கால் செல்வமும், செல்வப்பெருக்கால் எல்லா நாகரிகங்களும் விருத்தியாவது நுண்ணறிவுடையார்க்கெல்லாம் பிரத்தியக்ஷமாம். நாகரிகம், உடைநடைஊண் முதலிய உலகபோகங்களுக்குமாத்திரமன்று: மனத்தின்கண்ணே கிடக்கும் கருத்துவகைச் சிறப்புக்குங் காரணமாம்.

காட்டில் வாழும் வேட்டுவமாக்கள் வழங்குஞ் சொற்கள் மிகச்சிலவினுஞ் சிலவேயாம். அவரினுங் குக்கிராமவாசிகள் வழங்குஞ் சொற்கள் அதிகம். அவரினும் பெருநாட்டில் வாழுமாந்தர் வழங்குஞ் சொற்கள் அதிகம். அவரினும் நகரவாசிகள் வழங்குஞ் சொற்கள் அதிகம். அவரினும் கற்றுவல்ல பண்டிதசிகாமணிகள் வழங்குஞ் சொற்களே பன்மடங்கதிகமாம்.

மற்றோரெல்லாம் ஒரு பொருளை ஒருசொல்லால்வழங்கக், கற்றுவல்ல நாகரிகரும் பண்டிதசிகாமணிகளும் ஒன்றை இயற்சொல்லால் வழங்குதலேயன்றிப் புனைந்துரைவகையானும் அதற்குரிய பலவேறுபட்ட இயல்பெடுத்துரைக்கு முகத்தானும் பலபெயரிட்டும் வழங்குவர்.

மாந்தருக்குள்ள உலகபோகமும் மனோவிருத்தியும் விவேகமும் எவ்வளவாக விரியுமோ அவ்வளவாகச் சொற்களும் பெருகும். அது பற்றியே காட்டுவேட்டுவமாக்கள் நுகர்வனவுங் கருதுவனவுஞ் சில வாதலின் அவர் வழங்குஞ் சொற்களுஞ் சிலவாயின.

ஒரு பொருளுக்கு ஆதியில் வந்த பெயரொன்றே. அது வழங்கலாறு குறித்து வந்தது. பின்னர் அப்பொருளுக்குக் காலந்தோறும் அதன் அகத்தியல்பு புறத்தியல்புகளை நோக்கி ஆய்ந்தோர் பல பெயரிட்டு அப்பல பெயராலும் அதனை வழங்குவாராயினர். ஒருபொருள் குறித்த பல சொல் எனினும் பரியாய மெனினும் ஒன்றே. இவ்வாறமைந்த சொற்கள் தமிழில் எண்ணிலவுள. மற்றெப்பாஷைக்கண்ணும் நாமாய்ந்த வரையில் அத்துணையில.

பரியாயம் ஒருபொருள்குறித்த பலசொல்லே யாயினும் அச்சொல்லெல்லாம் தனித்தனி ஒவ்வோருட்பொருளுடையனவாய்ச் சம்பந்தவாற்றலாற் பிறிது பொருளுணர்த்துவனவாம். ஆதலால் அவை ஒரு பொருள் குறித்த பலசொல்லே யன்றி ஒரு பொருட் சொற்களெனக் கொள்ளப்படா. ஒரு பொருட் பன்மொழி இல்லென்றலே சொன்னூல்வல்லார் துணிபாம்.

புஷ்பத்திற்கு ஆதியிலிடப்பட்ட தமிழ்ப் பெயர் பூ. அதற்குப் பின்னர்ப் போது என்றும் அலர் என்றும் மலர் என்றும் வீ என்றும் பல பெயர்கள் வழங்குவனவாயின. அற்றைப்போதில் மலரும் பூ போது எனப்பட்டது. அலரென்பது முறுக்கவிழும் பக்குவத்துப் புஷ்பம். மலரென்பது முற்றவிரிந்த பூ. வீ என்பது உதிரும்பக்குவத்து மலர். எனவே இச்சொல்லெல்லாம் பூவின் பெயராயினும் அவை ஒவ்வொரு காரணம்பற்றி வந்தனவேயாமென்பது நன்கு துணியப்படும்.

மற்றைப் பாஷையின்கண்ணேயுள்ள பரியாயங்களினும் தமிழின்கண்ணேயுள்ளன மிகப்பலவென்பது சிறிது காட்டுதும்.

குடைக்குத் தமிழிலேயுள்ள பரியாயம் குளிர், தொங்கல், கவிப்பு, பிச்சம், கவிகை என்பன. வடமொழியிலே குடைக்கு வரும்

பெயர்கள் சத்திரம், ஆதபத்திரம், சத்திரி என்பன. தமிழ்மக்கள் தம்மிடத்துள்ள குளிர் முதலிய வைந்தனோடுமமையாது வடமொழியிலுள்ள ஆதபத்திர முதலிய மூன்றையுமாதரிப்பாராய் எட்டுச் சொல்லையுந் தமது நிகண்டிற் சேர்த்துக்கொண்டார்கள். குளிர்வித்தலிற் குடை குளிரெனப்பட்டது; தூக்கங்களையுடைமையிற் றூங்கலெனப்பட்டது; கவிக்கப்படுதலிற் கவிப்பெனப்பட்டது; பிச்சமென்பது முடி: அதனையுடைமையாற் பிச்சமெனப்பட்டது; வளைந்து மூடலிற் கவிகை யெனப்பட்டது. ஆதபம் வெய்யில்; அதினின்றுங் காப்பது ஆதபத்திரம். சத்திரம் என்பதன் பொருளுமதுவே.

சாவின் பெயர் துஞ்சல், இறத்தல் முதலிய பதினேழு. அவற்றுள் துஞ்சல் என்பது நித்திரை செய்தல். சாதல் அதுபோலுதலின் துஞ்சல் என்னும் பெயர்கொள்வதாயிற்று. இஃதொப்புமை பற்றிவந்தது. இறத்தல் என்பது கடத்தல். சாதல் இவ்வுலகங் கடத்தலாதலின் இறத்தலெனப்பட்டது. இஃதுபசாரப்பொருள். இவ்வாறு வரும் பரியாயங்களும் அநந்தம்.

துஞ்சல் என்பது "செத்தானெனப் பெரும்பான்மை வழங்கப்பட்டன தகுதிநோக்கித் துஞ்சினானெனச் சிறுபான்மை வழங்கப்பட்டுநிற்கும்" என்றலிற் றகுதிபற்றிய வழக்கென்பர் நச்சினார்க்கினியர். இவ்வாற்றால், தமிழிலேயுள்ள ஒரு பொருள் குறித்த பல சொற்களை நோக்குமிடத்துப் பொருள்களினியல்பு பலவற்றையும் பண்டைத் தமிழ்மக்கள் நன்குணர்ந்தவர்களென்பதூம் இனிது துணியப்படும்.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

# பாண்டிய-சாஸனங்கள்.

அடியில் வரைந்துள்ள சாஸனங்கள் பாண்டிய சரித்திரத்தை விளக்குவதற்கு வெகு அவசியமாயிருத்தலோடுங்கூடத்தமிழ்ப்பாக்க ளாயிருப்பதால் தமிழபிமானிகளுக் குதவுமென்று பதிக்கலானேன். இத்தலைப்பின் கீழ் மற்றும் பல பாக்களாலமைந்த சாஸனங்களும் அவ்வப்போது பிரசுரிக்க யத்தனப்படுவேன்.

தென்காசியில் விசுவநாதசுவாமி கோயில் விஷயம், முற்ற முழுதும் அவ்வூர்ச் சாஸனங்களின் முதல் ஏழு சாஸனங்களினும், 13-ம் சாஸனத்திலும் குறித்துள்ளது. இக்கோயிலை, அரிகேசரி பராக்கிரம பாண்டியன் கட்டவெண்ணி, சகவருஷம் 1368-ல் வைகாசி மாதம் பத்தாந்தியதி, பூர்வபக்ஷம், தசமி, வெள்ளிக்கிழமை, உத்தரநட்சத்திரம் மீனராசியில் ஆரம்பித்து, அடுத்த வருஷத்தில் சர்ப்பக்கிரகம் அர்த்தமண்டபம் மகாமண்டபங்கள் முடித்து, அவ் வருஷமாகிய சக. 1369-ல் மிதுனஞாயற்று 17-அல்லது 18-ம் தியதி ..............சனிவாரம்..............த்தில் "உடையவரைத் தென் காசிச் சிவாலயத்துள்ளமைத்துத் தெள்ளமுத மூட்டினனே."

இத்திருப்பணிகள் முடிவுபெற்றதும் ஒன்பதுநிலைக் கோபுர மொன்று கட்ட நினைத்து, கலி 4558-க்குச் சரியான சக 1379-இல் கார்த்திகை மாதம் 5-ம் தியதி குருவாரம், சிங்கமுகூர்த்தம், மிருகசீர்ஷத்தில் "திருக்கோபுரமுங்காண உபானமுதல் துடக்கினன்." இத்திருப்பணி முடியவும் இக்காசிகண்ட பராக்கிரம பாண்டியன் ஆயுள் முடியவும் சரியாயிருந்ததென்றும், கோபுரமாரம்பித்த ஆறாண்டில் அரசனிறந்து கயிலை சேர்ந்தானென்றும் III-ம் சாஸனத்தால் தெரியவருகிறது.

இவ்வரசன் பட்டந்தரித்தது கி-பி. 1422-ல் ஜூன்மாதம் 18-வது தியதிக்கும் ஜூலை மாதம் 19-ம் தியதிக்கும் இடையிலாக வேண்டும் என்று கீல்ஹார்ன் துரையவர்கள் கணித்திருக்கிறார். அதாவது சக 1344-ல் முடிசூடினவனாகிறான். ஆதலால் இவன் உத்தேசம் 41-வருஷம் அரசுபுரிந்திருத்தல் வேண்டும்.

இவ்வரசனுக்குப்பின் பட்டந்தரித்தவன் ஜடிலவர்மனான குலசேகர தேவனென்று இவ்வூர் XIII-ம் சாஸனத்தால் விளங்குகிறது. இவன் பராக்கிரமனுக்குத்தம்பி (?) யாகவேண்டுமென்று "அண்ணாழ்வி பராக்கிரம பாண்டியன்" என்பதினால் தோன்றுகிறது. இதுகாறும் சாஸனபரிக்ஷகர்கள், சாஸனங்களில் அரசர் யாண்டுகளைக் குறித்து "இரண்டாவதின் எதிர் நாற்பத்திரண்டு" என்றிருக்குமிடத்து 2+42 என்று கொண்டுவந்தார்கள். இக்குலசேகரன் சாஸனத்தை யுற்றுநோக்குமிடத்து இவன் ஆட்சியின் இரண்டாம் வருஷம் இறந்துபோன பராக்கிரமனுடைய 42-என்று தெரிதலோடு, இவ்வாறு குறிப்பதினாலேயே அடியில் வருமாறு ஊகிக்கவும்வேண்டியிருக்கிறது. அதாவது இச்சாஸனம் வரைந்துள்ளகாலத்துக் குலசேகரனுக்குப் பட்டாபிஷேகம் இன்னுமாகவில்லை. பட்டாபிஷேகமாகாதவரசனை ஒருவாறு இளவரசனாக வெண்ணவேண்டியதே யொழிய அரசனாகப்பாவிக்கக்கூடாது. முடிசூடினவனதரசாட்சியின் யாண்டுக்கணக்கிலேயே சாஸனங்கள் எழுதவேண்டும்; ஆதலால் இவ்வாறு முடிசூடிய வரசன் ஒருவனிறந்து, பட்டந்தரிக்காத இளவரசன் ஆண்டுகொண்டிருக்குங் காலத்தில் அவ்விருவர்கள் ஆட்சியின் ஆண்டுகளையும் பிணைத்து எழுதுவது என்னும் இத்தகைய வழக்கமிருந்ததென்று ஒருவாறு தோற்றுகிறது.

எட்டாவது சாஸனம் திருநெல்வேலி மாறனாகிய வீரவேற்குலசேகரன் முடிசூட்டு மகோற்சவத்தின் சரியான காலத்தைக் கூறுகிறது. இவன் சக.1474 பரிதாபியில், சித்திரைமாதம்29-திபதி இரண்டாம் பட்சம், திங்களுரோகணியில் நாள் மிதுனத்து "மவுலிதரித்தான்." இவன் "எடியல்மாலை யணிந்தாலும் வாடுமெனப் புலவர் பாடிய வீரவெண்பாமாலை" யணிந்தான் என்று கூறப்பட்டுள்ளான். சற்றேறக்குறைய இக்காலத்துத்தான் வித்தியாநகரத்து மகாராஜன் அச்சுததேவராயரால் தென்றிசை படையெடுத்துத் தாக்கப்பட்ப் பாண்டிய சேர ராஜாக்கள் ஜயிக்கப்பட்டார்கள். அக்காலத்துப்பிற் கூறிய அரசர்களின் சார்வபௌமத்துவம் போய்விட்டதென்பது தோன்ற இப்பாண்டியன் தன்னை "வேள்" என்று குறித்துக்கொள்வது கவனிக்கத்தக்கது. இவன் மகன் அழகன் அதிவீரராமபாண்டியன் என்னும் ஸ்ரீவல்லபதேவன்.

இச்சிரீவல்லபன் சக. 1486 ரக்தாக்ஷி வருஷத்தில் சித்திரை மாதத்தில் 20-தியதி பூர்வபக்ஷத்தில் திதியாறில் முதல்வாரம் புனர்பூசத்தில் "சீவலவேளென மகுடன்சூடினன்." இவன் வல்லமெறிந்தான் என்று X-ம் சாஸனத்துச்சொல்லியிருக்கிறது. உத்தேசம் இக்காலத்துத் திருமாலிருஞ்சோலைமலைப்பக்கத்து வாணவம்சத்தார் சிலர் பாண்டியர்களிடம் சிற்றரசர்களாய் ஆண்டுவந்தார்கள். இவ்வாணர்களில் ஒருவனாயிருக்கக்கூடிய "தஞ்சைவாணனை" க்குறித்து இவனைப்பற்றிப்பொய்யாமொழிப்புலவரால் பாடப்பட்ட தஞ்சைவாணன் கோவையில் "வல்லமெறிந்தான்" என்றும், பாண்டியர்களுக்காகச்சோழர்களின்மேற் படையெடுத்து வெற்றிபெற்றானென்றும் பலவாறுங்கூறியிருத்தலால் இத்தஞ்சைவாணன் இச்சிரீவலவேள் காலத்தவனாயிருப்பனோவென்று ஐயுற இடங்கொடுக்கிறது.

இவ்வரசனுக்குப்பின் அபிராமன் என்னும் வீரபாண்டியன் பட்டந்தரித்தானென்று பத்தாம் சாஸனத்தாலும், அது கலி-4689 ல் நடந்ததென்று பதினோராஞ்சாஸனத்தாலும் விளங்குகின்றன. இவ்வரசன் பட்டாபிஷேககாலத்தையும், இவன் பராக்கிரமத்தையும் பற்றிப்பாடினவன் தென்காசியிலிருந்த "காசிக்கலியன் கவிராயன்" என்னும் புலவனென்றும் ஏற்படுகிறது.

## தென்காசி சாஸனங்கள்.

### [I] விசுவநாதஸ்வாமி கோயில் பெரியகோபுரத்துத் தென் சுவரில் எழுதியுள்ளது.

[எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்*].

1. பவ்வலேஸல அன்பினுடன் சகாத்தமாயிரத்து முன்[1]னூற்
   த
   றறுபத்—
2. செட்டதன்மேல்லைவய் காசித்திங்கள்[2], மன்தியதியீரைந்
   திற்பூறு[3]—
3. வபக்க, மருவுதெசமியில்வெள்ளிவாரந்தன்னில்[4], மின்
   திகழுத்தரநாள்[5]
4. மீனத்தில்வாகை வேலரிகேசரி பராக்கிற[5a]ம மகீபன்,
   தென்திசையிற்கா—

---

1 முந்நூற்றறுபம 2 திங்கண்ம 3 பூர்வம 4 தன்னின்ம 5 நாண்ம 5a பராக்கிரம.

5. சிநகர்க்கோயில்காணச்சென்றுநின்றுதரிழ்சணை[6]தான்செ ய்வித்—
6. தானைடஅடைவுதிகழ்சகாத்தமாயிரத்துமுன்னூற்[7]றறுபத்
7. தொன்பதின்மேற்செல்[8]மிதுனஞாயற், றிடைமருவுதியதி பதினெ—
8. ..................விற்சனிவார[மதனில்யிராச]..............
9. [உ]டையவனாத்தென்காசிச் சிவாலயத்தினுள்ளமைத்துத் தெள்ளமுத மூட்—
10. டினனை.

[II] மேற்படி கோபுரத்து வடசுவரில் எழுதியுள்ளது.

[கட்டளைக்கலித்துறை.*]

1. ஆராயினுமிந்தத்தென்காசி[மேவும்]பொன்னாலயத்து, வா—
2. ராததோர்குற்றம்வந்தாலப்போதங்குவந்ததனை, நேராகவே-
3. யொழித்துப்புரப்பார்களைநீதியுடன், பாராரறியப்பணிந்தேன்
4. பராக்கிரமபாண்டியனைவ அரிகேசரிமன்பராக்கிரமமாற [னர]னருளால்,
5. வரிசேர்பொழிலணிதென்காசிக்கோயில்வகுத்துவலம், புரி சேர்கடற்புவி—
6. போற்றவைத்தேனன்புபூண்டிதனைத், திரிசேர்விளக்கென க்காப்பார்பொற்—
7. பாதமென்சென்னியதே. சாத்திரப்பார்த்திங்கியான்கண் டபூசை—
8. கள்தாம்நடத்தி, யேத்தியன்பால்விசுவ[9]நாதன்பொற்கோ யிலெ—
9. ன்றும்புரக்கப், பா[ர்*]த்திபன்கொற்கைப்பராக்கிரமமா றன்பரிவு
10. டனங், கோத்திரந்தன்னிலுள்ளார்க்குமடைக்கலங்கூறி னனை

[III] மேற்படி சுவரிலேயே எழுதியுள்ளது.

1. சேலேறியவயற்[10] தென்காசியாலயந்தெய்வ[ச்]செய, [லா]லே சமைந்ததிங்கென் —
2. செயலல்லவதனையின்ன, [மே] லேவிரிவுசெய்தேபுரப்பார —டிவீழ்ந்தவர்—
3. தம், பாலேவல்செய்துபணிவன்பராக்கிரமபாண்டியனை மனத்தால்—

---

6 தரிசனை 7 முந்நூற்ற ப 8 சென் ப 9 விசுவநாதன்.
10 வயற்றென் ப

4. வருக்கவுமெட்டாதகோயில்வருக்கமுன்னின், றெனைத்தா ன்பணிகொண்ட—
5. நாதன்தென்காசியையென்றுமண்மேல், நினைத்தாதரஞ்செய் தங் காவல்—
6. புனையும்நிருபர்பதங், தனைத்தா(ன்)ங்கின்றஞ்சித் தலைமீதி யானுந்தரித்தனனே—
7. [பூங்] தண்பொழி[ல்] புடைசூழும்தென் காசியைப்பூதலத் திற், [11] தாங்கங்கிளையுட—
8. னேபுரப்பார்கள்செந்தாமரை [யாள், காங்] தன்பராக்கிற மக் கைத—
9. வன்மானகவசன்கொற்கை, வேந்தன்பணிபவராகியென் [12] னுளும்விளங்கு—
10. வரோடகாண்டகுசீர்புனைதென்காசிக்கோபுரக்கற்பணியா, ருண்டில்முடி—
11. த்துக்கயிலைசென்றுனகிலேசர்பதம், பூண்டுறைசிந்தையரி கேசரிவிந்தை—
12. ப்போர்கடந்த, பாண்டியன்பொன்னின்பெருமாள்பராக் கிறம பாண்டியனே—

[IV] மேற்படி கோபுரத்துத் தென்சுவரில் எழுதியுள்ளது.

[எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்*.]

1. பன்னுகலியுகநாலாயிரத்தைஞ்னூற்றைம்பத்தெட்டின்மே லெவரும் பணிந்து போற்ற[ர்*],
2. சேன் னெல்வயற் [14] தென்காசிநகரில் [15] நற்கா[ர்*] த்திகைத்திங்கள் [16] [த்] தியதியைந்திற் செம்பொன் வார, ம—
3. ன்னிய மார்கழிநாளில் [17] மதுரைவேந்தன்வடிவெழுதொ ணுதபராக்கிறமமகிபன், சொன்னவரை—
4. போற் [18] திருக்கோபுரமுங்காணத்துடியிடையாயுபானமு தல் துடக்கினனே ஏரா ருஞ்சகா—
5. த்தமாயிரத்துமுன்னூற் [19] ற்றெழுபத்தொன்பதின் மேற் கா[ர்*] த்திகைபாதத்திற், சீராருங்—
6. தியதியைந்திற்குருவாரத்திற்சிங்கமுகுர்த்தத்தில்மிறுகசிரி டிசத் [20]
7. [தி]ன், னிலரனருளால்வழுதிபராக்கிறமமகிபன் [கூரு]—
8. பான முதல் கோட்டினனே

11 தலத்திற்றுந்தங்ப 12 யென்னாளும்ப 13 செங்நெல் 14 வயற்றென் ப 15 நகரினற் ப 16 திங்கட்டியதி ப 17 நாளின் ப 18 போற்றிரு ப 19 முந்நூற்றெ ப 20 மிருகசீரிஷ ப

[V] மேற்படி கோபுரத்துத் தென்சுவரில் எழுதியுள்ளது.

1. மென்காசைமாமலரன்னமெய்யோர்க்கும்விரிஞ்சனுக்கு
2. ம், வன்காசுதீர்த்திடும்விச்சுவநாதன்மகிழ்ந்திருக்கப்—
3. பொன்காசை மே[ற்] சென்று........கைக்குமிப்பூதல—
4. த்துத், தென்காசி..............
5. 6. 7,[21]
8. கோதற்றபத்தியறுபத்துமூவர்தங் கூட்டத்திலோ, தீதற்[ற] வெள்ளிச்சிலம்—
9. பகத்தோசெம்பொனம்பலத்தோ, வேதத்திலோசிவலோக கத்திலோ—
10. விசுவநாதனிரு, பாதத்திலோசென்றுபுக்கான்பராக்கிரம பாண்டியனே.

[VI] மேற்படிசுவரிலேயே எழுதியுள்ளது:—

[வெண்பா*]

1. ஓங்குநிலையொன்ப துற்றதிருக்கோபுரமும்,
2. பாங்குபதினொன்றுபயில்தூணுந், தேங்குபு—
3. கழ், மன்னர்பெருமான்வழுதிகண்டதென்—
4. காசி, தன்னிலன்றியுண்டோதலத்துள.

[VII] மேற்படிகோபுரத்து வடசுவர்க்காலில் எழுதியுள்ளது.

[கட்டளைக்கலித்துறை*]

1. அணிகொண்டவிந்தவணங்கு[செ]மா—
2. ன்றேயடியேற்குனக்கு, மணி—
3. கொண்டவாசல்மணியும்—
4. மூன்றேபகைமன்னரை
5. யும், பிணிகொண்டகாரை[யு]—
6. முன்னீரையும்[22] பெரும்பூதத்
7. தையும், பணிகொண்டசெண்ப—
8. க[த்*]தென்னபராக்கிரமபாண்டியனே.

[VIII.] மேற்படி கோபுரத்துத்தென்சுவர்க்காலில் எழுதியுள்ளது.

[எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்*]

1. ஏறியசகாத்தமாயிரத்துநானூற்றெ—
2. ழுபத்தின் ௬௩ னிலில்வரிழ்சம்பரி—

---

[21] நான்காம் வரியினிறுதியும், 5 முதல் 7-வது வரி வரையும் உடைந்து போய்விட்டன. 22. முந்நீரையும் 23 எழுபத்துநாலில்—வருஷம்

3. தாபித[24]னில் (மாதம்), தேறியசித்திரா—
4. யிருபத்தொன்பதாகுந்தேதியிரண்—
5. டாம்பக்கந்திங்களுரோகணிநாள்,
6. வீறுயர்ந்தமிதுனத்துநெல்வேலி
7. மாறன்வீரவேள்குலசேகரச்செழிய
8. னென்று (சுர), ராறுபுனையகிலேசர்
9. காசியிலேவிளங்கவணிமவுலித—
10. ரித்தனன்பரராசர்பணிந்தனரே

[கட்டளைக்கலித்துறை*]

11. ஏடியல்[25]மாலையணிந்தாலும்வாடுமெ—
12. னப்புலவோர், பாடியவீரவெண்பாமாலை—
13. யைப்பொன்னின்பாண்டியன்போர், தே—
14. டியவேற்செழியன்குலசேகரத்தென்னனை—
15. ப்போற், சூடியவேந்தருண்டோவொருவேந்—
16. தரைச்சொல்லுகிலே நன்றாகவே

(IX) மேற்படி சுவர்க்காலிலேயே எழுதியுள்ளது:

[அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்*]

1. சகன்காலமாயிரத்துநானூற்றெ—
2. ண்பத்தாறிற்சலதிசூழ்ந்த, சேக—
3. ங்காவிரத்தாக்ஷிசித்திரை—
4. யிலிருபதாந்தேதிவேந்தர்,—
5. புகழ்ந்தேவல்செய்ப்பூறுவ
6. திதியாறில்முதல்வாரம்புணர்—
7. பூசத்திற், சுகந்ததிபுனையழகன்
8. சீவலவேளெனமகுடஞ்சூடினனே

(X) மேற்படி வடசுவரின் மற்றோர் காலில் எழுதியுள்ளது.

[வெண்பா*]

1. சீர்கொண்டசெங்கமலை—
2. வாழத்திரையாடைப்,—
3. பார்கொண்டவாள்—
4. வீரபாண்டியனென்,—
5. றேர்கொண்ட, கானுலா—
6. மாலைகனகமகுடம்
7. புனைந்தான், மாநவேலா—

---

24 ௦தன்னில்௦ 25. ஏடியன்மாலை.

8. னபிராமன்உ சேனுலவு—
9. வெண்டிங்கட்செல்வ—
10. னெனத்தண்ணென்று, ரீணில—
11. மோரேழுநிழற்றுமே, பேணி
12. வந்து, பூவேந்தரேத்தும்
13. புகழ்வீரபாண்டியனங்,—
14. கோவேந்தன்கொற்றக்குடைஉ
15. பற்றலர்மண்கொள்ளும்—
16. பணிந்தார்க்கரசளிக்கு—
17. ங், கோற்றமுயர்க்குமறங்—
18. கூருமே, விற்றுவசம், வில்—
19. லவனைவென்றுகொண்ட
20. வீரமாறன்செழியன், வல்ல—
21. மெறிந்தானேந்துவாள்உ

(XI) மேற்படி கோபுரத்து வடசுவரில் எழுதியுள்ளது.

1. நண்புற்றெதிர்ங்(த)கலிநாலாயிரத்தறுநூற்,—
2. றெண்பத்தொன்பானிலிருங்கடல்சூழ், மண்—
3. பெற்று, மின்னுமகுடம்புனைந்தான்வெல்
4. வீரமாறனெ[னு] மன்னவர்கோமானபிராமன்உ
5. கற்றுணர்ந்தோன்காசிக்கலியன்கவிராயன்,
6. மற்றடந்தோள்வேல்வீரமாறனுக்குச், சோற்
7. புனைந்தா, ஞண்மங்கலமு நவிற்றுதுடை
8. மங்கலமும், வாண்மங்கலமும் வகுத்து

(XII) மேற்படி கோபுரத்தின் வடசுவரில் எழுதியுள்ளது:—

(இரட்டை ஆசிரியவிருத்தம் *)

1. அத்தர்தென்காசிகண்டோன்கண்டவாலைய—
2. முமடியாரும்வாழ்வுபெறவங், தழகனதிவீரராமன்
3. சறுவமானியபா(த*)ரகக்கொடுத்தபடிதான், சித்திரை—
4. ப்பாரணியூர்த்தெண்டதோஷப்பொன்திரும்ப—
5. க்கொடுத்தவ்வூரிற், செங்கோட்டையார்கொ—
6. ண்டபகுதியுநிறுத்தித்திருக்கோயிலிற்பகுதி—
7. யாய், வைத்ததையறக்கழித்தாயங்கணக்குடன்
8. மகாநவமிதிருநாளிடை, வந்தகாணிக்கை—
9. பாட்டப்பகுதிகாணம்ப(ல்)வரியிவையெ(ல்)லா—
10. ங்கழித்துப், பத்திறமாய்க்குணராமநாதற்குமே—
11. ற்படிபணங்கழித்தடியாவீட்டுப், பணமுங்கழி...
12. த்திப்படிச்சறுவமானியப்பட்டையமுமருளினனேஉ

## XIII. விசுவநாதர் கோயில் மஹாமண்டபத்தின் தென்சுவரில் எழுதியுள்ளது.

1. ஸ்வஸ்திஸ்ரீ கோஜடிலவர்மரான த்ரிபுவனசக்ரவர்த்திகள் ஸ்ரீகுலசேகரதேவற்கு யாண்டு இரண்டாவதின் எதிர்நாற்பத்து இரண்டாவது வ்ருஸ்சிக நாயற்று இருபத்து ஆறுந்தியதி வெள பௌர்ணமியும் ப்ருஹஸ்பதிவாரமும் பெற்ற கார்த்திகைநாள் தென்

2. ஆரிநாட்டு சித்ராநதீஉத்தரதீரத்து தக்ஷிணகாஸியில் முன்னாள் அண்ணழ்வி பராக்ரமபாண்ட்யதேவர் திருவுள்ளம்பற்றி உடையார் விஸ்வநாதனையும் ப்ரதிஷ்டிப்பித்து இக்கோவில் உபா (ஐ) நாதிஸ்தஸ்ரீவிமானந்தம் மஹாமண்டபம்ஸ்நாநமண்டபம் இடைநாழிகை

ஸ்நாபனமண்டபம் ப்ரவேஸவாஹநம் இவையுங்குறைவறத் திருப்பணியுஞ்செய்வித்து ஆவரணகோபுராதிகள் செய்வித்து பஞ்சகாலநித்யநைமித்திகங்களுக்கு [வேண்டும்] தேவதானமும்விட்டு உத்ஸவபர்யந்தமாயுள்ளகாரியங்களையுநடத்தி ...அனை [4] த்துக்கொடுத்து

... ... ... ...

து. அ. கோபிநாதராவ்.

தென்மொழியில்

# தன்மை முன்னிலைகளாமாறு.

——:(०):——

தமிழ்மொழியின் பழைமையையும் புதுமையையும் ஆராய்ச்சியொடு கண்டுவருகிறவர்கள் அதில் தன்மைக்கு நான், யான், என், நாம், யாம், எம், நம், நாங்கள் முதலியனவும், முன்னிலைக்கு நீ, நின், உன், நீர், நீயிர், நீவிர், நும், உம், நீங்கள் முதலியனவும் வழங்குமெனத் தெரிவிப்பார். இதுவுமன்றி, வினைச்சொல்லுருபுகளை விசாரிக்குமளவில், அவைகள், தன்மைக்கு ஏன், என், அன், அல், ஆம், எம், ஓம், அம், எம் எனவும், முன்னிலைக்கு ஆய், ஐ, இ, ஏ, ஈர், இர் எனவும் அகப்படுவனவாம்.

தெலுங்கு மொழியில் அவற்றிற்கு நே, நேனு, ஏனு, ஏ, நா, நன், நு, நி, மேமு, மனமு, ஏமு, மா, மன, மு, மி-யும்; நீ, நீவு, நின்னு, நினு, மீரு, மிமு, வு, வி-யும்; எனச் சொல்லுவர். கன்னட மொழியில் அம்மொழிகளுருபுகள் நா, நானு, நன், ஆன், யான், ஆம், என், எனு, ஏனு, எனெ, என்; நாவு, ஆவு, ஆம், நம், எம், எவு, ஏவு, எரிவு; நீ, நீனு, நின், நின், நீவு, நீம், நிம்; இ, ஈ, ஈயெ, ஏ, அய், இரி, ஈரி, அரி, இர் எனவரும்.

மற்றத் தென்மொழிகளெல்லாவற்றையும் ஒத்துப்பார்த்தால், பெரும்பாலும், தன்மைக்கு அவ்வு மெவ்வும், முன்னிலைக்கு இவ்வும் குறிப்பாக வெளிப்படும்.

இப்படியிருக்கையில், பூர்வகாலத்தில், தன்மை முன்னிலைச் சொற்கள் எவ்வகை எவ்வியல் கொண்டிருந்தனவோ வென்று கேட்டால் முதற்கு அகரம், இரண்டாவதுக்கு இகரம் குறிப்பாக வழங்குமென்று ஐயமில்லாமல் நிச்சயித்துக்கொள்வோம. அவற்றின் வலம் யாதோவென்றால், அவை சுட்டுச் சொற்களாதலால், இ-சுட்டுச்சொல் நன்றாய்த் தெரிந்த சமீபத்திலிருக்கிறதையும், அ-சுட்டுச்சொல் தூரமாய்த் தெளிவுடன் றெரியாத நிலத்திலிருக்கிறதையும் காண்பிக்கும் என்று முன்னிலைக்கு இகரம் வழங்கிவருதல் சரியாக

உணர்ந்ததொன்றும். ஆனால் அகரம் தன்மைக்குதவலின் காரணம் வெளிப்படவில்லை. அதுவெனினும், தன்மையாமாண் பெண்பிள்ளை முதலியோர் அல்லது முதனிலையிலிருக்கிறவன் பேசும்பொழுது, தன்னை இவ்விடத்திலுமன்றி அவ்விடத்திலுமன்றி எவ்விடத்திலும் இருக்க நினைக்கும். இதுநிற்க ; முன்னிலைக்குத் தன்மை எதிர்த்து வருகிறதுபோல் இச்சுட்டுச் சொல்லாம் இகரத்திற்கு அகரம் எதிராய் வழங்குகிறதுக்குக் காரணம்.

*Prof.* **Julian Vinson, Paris.**

---

# நூலாராய்ச்சி.

(இத்தொகுதி ௬௪ ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐம்புலனுணர்ச்சியாதிய அறிவின் வருவாய்களில் ஒன்றேனும் முழுநம்பிக்கைக் குரியதன்று என்பதுவும்; தாம் அறிந்தவற்றை, அறிந்த அளவு, பின்னோர்க்கு முன்னோர் நூன்முகமாய் உதவிப் போதல், மாந்தரது அபிவிர்த்திக்கு இன்றியமையாப் பெருந்துணை என்பதுவும்; அறிவு நாளுக்கு நாள் மேன்மேலும் பெருகுதலே இயற்கை முறையாதலின், அத்தகைய தொன்னூல்களை ஆராயப்புகுவார், எவ்விதமயக்கையும் துறந்து, உண்மை யறிதலையே உயர்முறையாய்க் கைப்பற்றிப், பல்வேறு போலியபிமானங்களானும் தற்பற்றுக்களானும் விளையும் பொய்க்கோள்களையெல்லாம் அறிந்து கடிதல் அவசியம் என்பதுவும் இது காறும் கூறப்பட்டன. இனிச் சில குறிப்பிட்ட கிரந்த விசேஷங்களை ஆராயுமுறையைச் சிறிது கவனித்து, முன்னினைப்பைக் கடந்து மிகப்பெருகிவிட்ட இவ்வியாசத்தை முடிப்பாம்.

இலக்கணங்கள்:—இவை, பாஷை என்னும் ஆற்றினது இடு கரைகளாம். மனிதனோடு அனாதியாய் வழங்கிவருவது அவ்யாறு; இக்கரைகளோ, அவ்வாற்றினது போக்கையும், சுருக்குப் பெருக்குகளையும், அது செல்லும் நெறியின்கண் உள்ள ஏற்றத்தாழ்வுகளையும் பன்னாட் பழக்கத்தாற் கண்டறிந்த மனிதன், அவ்வாறு தனக்கு

இனிது பயன்றருதற்பொருட்டு, அதன் போக்கை யனுசரித்தே இட்டுக்கொண்ட கரைகளாம். ஆறே தலையது, கரைகள் மிகப்பிற்பட்டன என்பது மறக்கற்பாலதன்று; அன்றியும், ஆற்றினது இயற்கைச் செலவைத் தடுத்திடப்பட்ட கரைகள், நெடுநாள் நிலைத்திரா; யாதானுமோர் காரணத்தால் மற்றோர் சிற்றாறேனும் பேராறேனும் இஃதுடன்கலக்க நேரிடின், கரைகளைத் தக்கபடி அகற்றியிட வேண்டிவரும். வரம்பின்றி யொழுகும் ஆறு நன்குபயன்படாதாயினும், ஆற்றின் பொருட்டே கரை, கரையின் பொருட்டன்று ஆறு என்பது, இலக்கணிகள் கைக்கோடற்குரியதோர் உண்மை. இலக்கியங்கண்டதற் கிலக்கணமேயன்றி, இலக்கணத்துக்கேற்க இலக்கியம் அமைக்கப்புகுதலும், இலக்கணவரம்புகளைச் சிறிதேனும் மீறிப்போதரும் இலக்கியங்களை முற்றுங்கடிந்து இகழ்தலும் பேரறிவாகா. ஒப்புயர்வற்ற மெய்ப்புலவர்சிகாமணி யென்று கொண்டாடப்படும் நாடககவீந்திரராகிய ஷேக்ஸ்பியரது நாடகங்கள், அவர் காலத்தே நடை பெற்று வழங்கி வந்த நாடகவிலக்கண விதிகளால் ஆராயப்படின், எவ்வாற்றானும் பொருந்தாவாய், மிக அசங்கியமாகவே தோன்றும்: ஆயின், இலக்கணத்தையே பெரிது மதித்து, அந்நாடகங்களை இகழ்ந்து கடிவாரை இதுகாறும் எங்கணும் காணேம். தமிழிலக்கணிகளும், இத்தன்மையன கருதியே, இலக்கியங் கண்டதற் கிலக்கணமியம்பலே முறை யென்றும், காலவகையினானே பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவாகா என்றும் விதிக்கலாயினர். இவ்விருவிதிகளையும் இலக்கணிகள் மறவா தொழுகுவராக; யாப்பிலக்கணங்களையும் பொருளிலக்கணங்களையும்பற்றி இலக்கியங்களை யாராயப்புகுங்கால், இவ்விதிகளை முக்கியமாய் நினைந்தொழுகக்கடவர். இலக்கணங்கள் அவசியமன்றென்றும், நூலாசிரியர்பொதுவாய் அவற்றை யறிந்தடங்கி நூலியற்றுதல் அவசியமன்றென்றும் யாம் கூறிலம்; இலக்கணத்தினும் இலக்கியமே பற்றமாதலின், இலக்கியத்தின்பொருட்டே இலக்கணம் பிறந்ததாதலின், அவற்றின் தாரதம்மியத்தை ஒருபொழுதும் மறவாது, பதக்கக்கூட்டுள் அமையாததோர் மாணிக்கத்தை மோதிரமாகவும், மோதிரக்கூட்டை மீறியதைக் கடுக்கனாகவும், கடுக்கனளவைக் கடந்தமணியைக் கிரீடத்திலும் பதித்துக் கோடல் நன்மதியாமேயன்றிக் குறித்த அளவை மிஞ்சிய தென

மாணிக்கத்தை யெறிந்து விடுதல் நன்மதியாகாதென்பதை நினைந்து இலக்கணிகள் ஒழுகுமாறே வேண்டுகின்றேன்.

சுருதிமிருதி இதிகாசபுராணங்கள்:—நம்மவர் மதக்கோட்பாடுகளுக்கெல்லாம் இவைகளே உறையுளாதலின், மற்றவற்றைப்போல இவற்றை ஆராய்தலும் பாவமென்பார், நம்மவருட் பெரும்பாலார். கீர்த்திபெற்ற கிறிஸ்துமதபோதகர் ஒருவர், பிஷப் ஸ்தானம் வகித்தவர் ஒருநாள் பிரசங்கம் செய்தனராம். கேட்டிருந்தவருள் ஒரு கிமாட்டி பிரசங்க நிகழ்ச்சியில் அடிக்கடி தன் அளப்பரிய பக்தியையும் மகிழ்ச்சியையும் வெளியிட்டனளாக, அவள் துணைவி யொருத்தி பிரசங்கமுடிவில், "அவர் கூறியவற்றையெல்லாம் நீ நன்கு தெரிந்து கொண்டனையோ?" என்று வினவினள். அதற்கிவள் "நான் அவ்வளவு கர்வியா!" என்றனளாம்; நம்மவருட் பெரும்பாலாரும் நம் மதநூல்களை இவ்வாறே பூசிக்கின்றனர். ஓதியுணர்வார் மிகச்சிலர்; ஓருப்பட்டொழுகுவார் அவரினுஞ் சிலர்: கர்ணபரம்பரையான அபிப்பிராயங்களைத் தழுவிக் கண்மூடித்தனமாய்ப் போலிப்பூசனை செய்து கழிபவரோ கணக்கிலடங்கார். இந்நூல்களையாராயும் முறைகளை விரித்துரைக்கப்புகின் மிகப்பெருகும். அவ்வாராய்ச்சியில் முக்கியமாய்க் கைப்பற்றுதற்குரியன இரண்டு நியாயங்களேயாம். உண்மையினும் உயர்ந்ததொன்றில்லையென்பது ஒன்று; நம்முள் ஒவ்வொருவருக்கும் பிரத்தியேகமாக அறிவையும் புத்தியையும் அளித்திருக்கும் கடவுள், நாம் அவற்றை உபயோகித்து உண்மையை அறிந்து, தனித்தனியே மனந்தெளியும் சுதந்தரத்தை அநுபவிக்குமாறு அப்பெருந்துணைக்கருவிகளைக் கொடுத்திருக்கின்றாரேயன்றி, அவற்றை எறிந்துவிட்டுச் சுவாதீனத்தை யிழந்து, குருட்டுத்தனமாய்ப் பிறர் வழிப்பட்டொழுகுதற்கன்றென்பது மற்றொன்று. உதாரணமாக:— கிறிஸ்துவவேதமாகிய விவிலிய நூலிலே, சிருஷ்டிகாண்டத்திலே, கடவுள் இப்பிரபஞ்சத்தையும் அதில் வாழும் சராசரங்களனைத்தையும் ஆறுநாள்களில் தனித்தனியே உண்டாக்கினாரென்றும், இது நடந்தது இற்றைக்குச் சுமார் ஆறாயிரவருஷங்களுக்கு முன்னென்றும் விவரமாயும் தெளிவாயும் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாறே கிறிஸ்தவர் யாவரும் நம்பிவந்தனர். சாஸ்திரவாராய்ச்சியிலும் பயிற்சி

யிலும் சிறப்புற்றிலங்கிய சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய காலத்திலே, அதாவது இற்றைக்கு ஐம்பது அறுபது வருஷங்களுக்குமுன்னர், இப்பூகோளமேனும் அதிலுள்ள சராசரப்பொருள்களேனும் தனித்தனியாய் சிருஷ்டிக்கப்பட்டனவல்ல என்பதும் அவை தோன்றி ஆறாயிரமல்ல, அறுபதினாயிரமல்ல, ஆறு நூறாயிரமல்ல, இன்னும் மிகப்பலவாண்டுகள் ஆயின என்பதும் இத்தகைய காரணங்களால் மேற்குறித்த விவிலியநூற்கூற்றுக் கேவலம் பொய் என்பதும் சாத்திரப்பயிற்சிவிளைவாக வெளியாயிற்று. இவ்வாறுலக்கிய கலைஞர், மதாபிமானிகள் வாயிற்பட்டபாடு தெய்வமே அறியும். அக்காலத்தே இவ்விஷயங்களை ஆராய்ந்து தெளியுமாறு கூடிய சபைகளில் ஒருமகாசபையிலே, மதாசாரியரும் கலைவாணரும் மற்றோரும் செறிந்து விளங்கிய சமயத்திலே யாவராலும் சிறந்த மேதாவியென்று கொண்டாடப்பெற்ற பிஷப் வில்பர்போர்ஸ் என்னும் மதாசாரியார், தமது நண்பர் டார்வின்கலைஞர் கொள்கைப்படி உலகிற் காணும் பிராணிகளெல்லாம் சங்கிலித்தொடராய்த் தோன்றினவென்றும் அத்தொடரில் மனிதனுக்கு முந்தியது குரங்கென்றும், பிராணிகள் பிரத்தியேக சிருஷ்டிகளல்லவென்றும் எடுத்துப்பேசிய பரிணாமவாதியாகிய ஹக்ஸ்லி என்பவரை நோக்கி, மிக எளனமாயும் பரிகாசமாயும், “உமது பாட்டனாரோ, பாட்டியாரோ குரங்கின்வழிப்பிறந்தவர்?” என்று வினவினார். சபையோரெல்லாம் கொல்லென்று நகைத்தனர். அதைக்கேட்ட ஹக்ஸ்லி எழுந்து, மதாசாரியாரை நோக்கி, “என் வம்சத்துக்குப் பூர்வபுருஷன் ஒரு குரங்காயிருப்பது எனக்கு அவமானமாகத்தோன்றவில்லை; ஆயின், சிறந்த புத்திவிலாசத்தைப் பெற்றுள்ளொருவன், தன்மதிவலியால் உண்மையை ஒளிக்க முயல்வானாயின், அன்னான்வழித்தோன்றலாயிருத்தல் எனக்கு வெட்கமாகவேயிருக்கும். தாழ்ந்த அறிவும், கூனியவுடலும் வாய்ந்து, நம்மைக் கண்டபொழுதெல்லாம் பற்காட்டிக் கிச்சிடும் ஏழைப்பிராணியாகிய குரங்கின்வழித் தோன்றலாயிருத்தல் உனக்குப் பிரியமோ; அல்லது, சிறந்த புத்திசாதுரியமும் உயர்ந்த பதவியும் அமையப்பெற்றுத், தன் சாமர்த்தியத்தையும் செல்வாக்கையும், தாழ்ந்த பதவியிலுள்ள சத்தியவிரதிகளை அவமானஞ்செய்து நொறுக்குவதிற் பிரயோகிக்கும் ஒருமனிதன் வழித்தோன்றலாயிருத்தல்

உனக்குப் பிரியமோ, என்று என்னைக் கேட்டால், நான் பதிற்சொல்லத் திகைப்பேன்" என்று விடையளித்தனர். இவ்வாறு பரிகசிக்கப்பட்ட சாஸ்திரவுண்மைகளெல்லாம் இப்பொழுது கிறிஸ்துவரிற் பெரும்பாலராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. விவிலிய நூன் முழுவதும் தெய்வாநுக்கிரகத்தால் இயற்றப்பட்டது, அதில் இம்மியும் பொய்யன்று, என்னும் பழைய அபிப்பிராயம் இப்பொழுது மாறிவிட்டது. மற்ற நூல்களைப்போலவே அதையும் ஆராய்ந்து, உண்மை அன்மைகளை வெளிப்படுத்துகின்றனர். நம்மவர்க்குள்ளும் இவ்விஷயத்தில் நன்மதியும் சத்தியவிரதமும் கடவுள் கிருபையால் விரைவில் வளர்ந்தேறுவதாக: மதாபிமானிகள் யாவரும் தமக்குரிய சுதந்தரத்தை நன்குமதித்து, உண்மைகடைப்பிடிப்பாராக.

காவியங்கள் :— இவற்றையாராயுங்கால், இவை, கற்பனை, அதிசயோக்தி முதலிய அலங்காரங்கள் செறிந்த நூல்கள், நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறுரைக்கும் நூல்களல்ல என்பதே நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது. இக்காலத்திலே, கவிகள் பலர், தாங்கள் அணுகியேற்கும் ஜமீந்தார்கள், பிரபுக்கள் பலரைப் புகழ்ந்து கூறும் உலா, விலாசம், காதல் முதலியபிரபந்தங்களையும், அன்னார் ஏவற்படியியற்றும் கலம்பகம், தலப்புராணம் ஆதியபிரபந்தங்களையும் படித்து, பிரபந்தநாயகர்களின் தினசரி ஒழுக்கத்தையும் கண்ணாரக்காணும் யாம், முற்காலத்தில்மட்டும் வேறுவிதமாயிருந்ததாயும், பிராசீன கவிகள்மட்டும் உள்ளதை யுள்ளவாறு கூறியதாயும் எவ்வாறு கொள்வது? காவியக் கூற்றுக்களைச் சரித்திரவுண்மைகளாக வேறுதாரமின்றிக் கொள்ளுதல் சிறிதும் பொருந்தாது. இத்தகைய மயக்கம் இப்பொழுது அதிகமாய்ப் பரவியிருக்கின்றது; இம்மயக்கவழிப்பட்டார் கட்டும் ஆகாசக்கோட்டைகள் அளப்பரிய; அவர்கள் ஒன்றினும் ஐயமுறார். என்னே மாந்தரது பேதைமை! அரிய பெரிய மதிவாணரும் தம்மனமிசைந்ததொன்றாயின் எவ்வளவு எளிதில் நம்பி இணங்கிவிடுகின்றனர்!

சரித்திரங்கள்:—மேனாட்டார் ஒப்புதற்கேற்ற சரித்திரங்கள் நமக்குள் மிகச்சில: இல்லையென்றே சொல்லலாம். சரித்திரங்கள்

இருபாலன: விஷயம் நிகழ்ந்த காலத்திலேயே அனைதக்கண்ணுற்ற றிந்தோரால் எழுதப்பட்டன; பிற்காலத்தோரால் எழுதப்பட்டன. இவ்விருவகை நூல்களிலும் கேவலம் உண்மையே கூறப்பட்டிருத்தல் அரிது. என்னை? நிகழ்கால வர்த்தமானங்கள் எழுதுவோரது தற்பற்ருல் உண்மையினின்றும் மாறுபடத்தக்கன; பிற்கால வர்த்தமானங்கள் தற்பற்ருலும் விஷயஞானக்குறையினுலும் மாறுபடத்தக்கன. உதாரணமாக: இராசாங்கவர்த்தமானங்களைப்பற்றி யெழுதப்படும் பத்திரிகைகளில், ஒரேவிஷயம், குடிகளுக்கு நன்மை பயப்பதாக ஒருசாராரால் கொண்டாடப்படுவதையும், மிகத்தீயதாக மற்ருேர் சாராரால் இகழ்ந்து கடியப்படுவதையும் நாம் தினமும் காண்கின்ருேம். பழையதோர் விஷயம் எதைப்பற்றியும் மாறுபட்டகொள்கையினர் இருவர் எழுதியுள்ள சரித்திரங்களை எடுத்துப்பார்க்கினும் இது நன்கு விளங்கும். ஆதலின், சரித்திரநூல்களை யாராயப்புகுவார், எவ்விதத்தற்பற்றையும் துறந்து, தமக்குக் கிடைக்கக்கூடிய அவ்விஷயத்தைப்பற்றிய நூல்களையெல்லாம் சமன் தூக்கிப்பார்ப்பதுமன்றி, நூலாசிரியரது அபிமான பேதங்களுக்கும் அறிவு நுட்பத்துக்கும் போதுமானபடி கூட்டிக்கழித்து, அவர் கூற்றை மதிப்பிட்டு, உண்மையறியக்கடவர். அன்றேல், பொய்மை வாய்ப்பட்டு மயங்குவரென்பது திண்ணம்.

யாமிதுகாறும் கூறியவற்றுள், பிறசிலர் செவிகட்குக் கசப்பான மொழிகள் வெளிப்பட்டிருக்கலாம்: எம் சிற்றறிவுக்கேற்றபடி உண்மையைத் துலக்குமாறு அவை நிகழ்ந்தனவேயன்றி, எம் அபிப்பிராய விரோதிகளை இகழுமாறேனும் கடியுமாறேனும் அவை வரையப்பட்டில; ஆதலின், அவர் எம்மைப் பொறுத்தருள வேண்டுகின்ருேம்.

அ. மாதவையர்.

# பாலமுது

(சஎ௬-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நமது நாட்டில் வெண்ணெயைச் சுபமாகக்காப்பாற்றுவது கஷ்டமுமன்றி வெண்ணெயானது வெகு சீக்கிரத்தில் அழிவடைகின்றதாகையால் வெண்ணெயைக் காய்ச்சி நெய்யைப் பெறுகின்றோம். வெண்ணெயைவிட நெய் அதிககாலங் கெடாமற்றங்குமியல்புடையது. மற்றும் வெண்ணெயின்கணுள்ள நீரைநீக்கி வெண்ணெயினது சத்தை நெய்யில் திரட்டி யெடுக்கின்றோம். கெடுதலடைந்ததோர் வெண்ணெயை ஆங்கிலேயத்தில் (Rancid butter) என்பர். மேலும் கெடுதலடைவதையே (Rancidity) வெண்ணெய்க்கு ஓர் இயல்பாகவுங்கொண்டிருக்கின்றனர். பழம் அழுகுவதைப்போலவும், காய் முதிர்வையடைவதுபோலவுங் கொண்டு வெண்ணெயை நாட்பட முதிர்வதாகக் கூறுவதுண்டு (Ripening of the butter). ஆனால் வெகு முதிர்வையடைந்து (Ripened) கடையில் அழுகின (become rancid) வெண்ணெயை உவர்நீரினால் சுத்தஞ்செய்து நாற்றத்தை நீக்கிவிடுகின்றனர். வெண்ணெயைக் காய்ச்சி அதினின்றும் யாம் பெறும் நெய்யை ஆங்கிலேயத்தில் (clarified butter) சுத்தமான வெண்ணெயென்று பொருள்படக் கூறுவர். மற்றும் நமது நாட்டில் வைதீகங்களுக்குவேண்டி நடத்தும் ஆகுதிகளுக்கு (Sacrifices) நெய் உபயோகமாவதேயன்றி வெண்ணெய் பயன்படுவதில்லை.

சுத்தமான பாலை நன்றாகக் காய்ச்சி அதினின்றும் பெறவல்ல சுத்தமான வெண்ணெயைப்பின்னும் காய்ச்ச வெகுசுத்தமான நெய்யைப் பெறுகிறோம். ஆதலாற்றான் ஆன்றோர்கள் ஆகுங்காரியங்களுக்கானதாக ஆவின்வெண்ணெயை அவாவுகின்றனர். ஆவின்பாலை அவாவுதல் ஆவினுஞ் சிறந்ததென்பதற்கையமில்லை. பாலினின்று வெண்ணெயை யெடுக்கும்முறையை அடியில்வருமாறு காண்போம்.

**வெண்ணெயைக் கடைதல்** (Collecting the butter):— பாலில் அதன் ஊனமாகிய வெண்ணெய்க்காதாரப்பொருள் எங்கும் வி

ரவியிருப்பதால், அதினின்றும் சூரியவொளி பிரதிபலிக்கப்பாலுக்கு வெண்ணிறம் பொருந்தியுள்ளது. அவ்வூனம் அதில் பரவியிருத்தலை, ஓர் தெளிவுபெற்ற கண்ணாடிப்புட்டியில் நீரைவார்த்து அதனுள் சற்று நல்லெண்ணெயைச் சேர்த்து நன்றாகக்கலக்கினால் எவ்வாறு எண்ணெய் சிறுசிறு தூள்களாய் உருளைவடிவத்துடன் நீரெங்கும் பரவக்காணலாகுமோ அவ்வாறே காணலாம். இதை இங்கிலீஷில் பாலின் வெண்ணிறத்திற்காதாரமான ஊனமென்னும்பொருள்பட (Emulsified fat) என்பர்.

எண்ணெயை நீரில் விட்டக்கால் அது மிதக்கின்றது. ஆதலால் நீரைவிட எண்ணெய் இலேசென்றறிகிறோம். ஆதலாற்றான் கலக்கியவுடன் எண்ணெய்த்தூள்கள் நீரிலெங்கும் மிதக்கின்றன. அவ்வாறே பாலின்கணுள்ள ஊனம் இலேசானபடியினால் அது பாலில் மிதக்கின்றது. நமது வீடுகளில் பாலைக் காய்ச்சி அதன்பின் அதனுள் சற்று மோரை விட்டக்கால் பாலின் தர்க்கியசப்பொருள் இறுகிப்போய் பாலின் நீரில் ஊனத்தை அதாவது வெண்ணெயைச் சயமாகத் தங்கவிடுகின்றது. இவ்வாறு வெண்ணெய் நிற்கக் காலவடவில் இலேசான வெண்ணெய் மேலெழும்பி மிதக்குவதாயுள்ளது. ஆதலாற்றான் இடையர்கள் தயிர்ப்பாத்திரத்தினின்றும் மேலேபடிந்துள்ள ஆடையை (ஏடென்றுங் கூறுவர்) கூடியமட்டும் வெகுவாய் நீக்கி அதனின்று வெண்ணெயைக் கடைந்தெடுப்பார்கள். கடையுங்கால் நீரைச்சேர்ப்பின் இலேசான வெண்ணெய்மாத்திரம் மேலெழும்பிக் கடைகோலிற்படியவும் நீரில் மிதக்கவும் பார்த்துவருகிறோம்.

இறுகின்ற தர்க்கியசப்பொருள் (casein), வெண்ணெய், நீர் இவை பலவுஞ்சேர்ந்துள்ளதைச் சாதாரணமாய்த் தயிரென்று நாம் கூறிவருகிறோம். ஆனால் உண்மையில் தயிரென்பது இறுகின்ற தர்க்கியசப்பொருளேயல்லது வேறல்ல. அவ்வாறே வெண்ணெய் என்பது உண்மையில் தர்க்கியசப்பொருள் முற்றும் நீங்கப்பெற்றுள்ள ஊனமேயல்லது வேறன்று. ஆதலால் பாலமுதின் இரசாயனத் தோற்றத்தை முதன்மையாகக்கொண்டு அடியில் வருமாறு பொருள்களைப்பேதிக்கலாம்.

1. பால் (Milk):—தர்க்கியசப்பொருள், வெண்ணெய், நீர், பாற்சர்க்கரை முதலியவை பலவுங் கலந்துள்ளது.

2 வெண்ணெய் (Butter):—பாலின் ஊனம் மட்டும் சிறப்பாக வெகுவளவிற்றோன்றி மற்றவையில் வெகுகுறைவாகவிருத்தல்.

3. தயிர் (Curd):—தர்க்கியசப்பொருள் இறுகி வெகுவளவில் புலப்படுவது.

4. மோர் (Butter Milk):—வெண்ணெயைக் கடைந்த பிறகு வேறுபட்டுநின்ற நீர். இறுகிப்போன தர்க்கியசப்பொருள் கரைந்துள்ள நீரை மோரென்பது இரசாயனத்திற்குப் பொருந்தாது.

5. பாற்சர்க்கரை (Lactose or Milk Sugar):—இதைப் பார்க்கின் ஓர்விதக் கற்கண்டைப் போற் புலப்படும். கடித்தால் அது பல்லில் ஒட்டும். இனிப்பில் கற்கண்டைப் போலில்லை.

6. பாற்புளி (Lactic acid):—தயிர் அல்லது மோர் அல்லது பால் புளிப்பதற்கிதுவே காரணமாம். பாற்சர்க்கரையினின்றும் இஃதுண்டாகியது. காற்றிலெங்கும் பரவியுள்ள கண்ணுக்குப் புலப்படவொண்ணாத சிறுகிருமிகள் பாற்சர்க்கரையைத்தாக்கப் பாற்புளி யுண்டாகின்றது. கள்ளும், காடியும் புளிப்படைவதற்கிதுவே காரணம்.

7. பாலினுப்பு (Salts):—பாலில் சில தாதுப்பொருள்கள் கலந்திருக்க இரசாயனத்தால், கண்டிருக்கின்றனர். அவை யனைத்தையும் பாற்சாம்பலென்று பொருள்பட 'Mineral ashes' என்று இங்கிலீஷில் கூறுவர். இவற்றுள் நாம் உபயோகிக்கும் உப்புக் கலந்திருத்தல் கூர்மையான உருசியினாலுங் காணலாம். மேலும் பால் சற்று உப்பாக வுருசிக்கும் பொருட்டு பசு வுண்டுவரும் ஆகாரத்திற் சற்று உப்பைக்கலந்தும் வருவர். தேர்ந்தவளவிற் பாலில் உப்பிருப்பதைச் சிரேஷ்டமாகக் கொள்வர். ஏனெனில் பண்டங்களைக் கெடவொண்ணாமல் காக்கு மியல்பு உப்பிற்குண்டு.

(இன்னும் வரும்.)

செ. வீ. இராஜகோபாலாசாரி,
நார்மல் ஸ்கூல், மதுரை.

# புத்தகக் குறிப்பு.

சநாதனதர்மம்:—ஸ்ரீ காசி, "பிரதானவித்தியாசாலை"ச் சபையோரால் ஆரியமதத்தின் பொதுவான கொள்கைகளைத் திரட்டி, நம் நாட்டுமாணவர்க்குப் பெரிதும் பயன்படுமாறு ஆங்கிலத்தில் வெளியிடப்பெற்ற அரியபெரிய இந்நூலின் மூன்றும் பாகத்தை, மதுரை பிருஹ்மஞான சபைத்தலைவரும் ஹைகோர்ட்வக்கீலுமாகிய ப்ருஹ்மஸ்ரீ ப. நாராயணையரவர்கள் தமிழில் மொழிபெயர்த்துச் சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார்கள்; இந்நூல், ஒவ்வொன்றும் பல உட்பிரிவுடைய மூன்று அதிகாரங்களுடையது. நம் புராதன ஆரியமதத்தின் அருமை பெருமைகளை ஆரியமாணவர்க்கு அங்கை நெல்லிக்கனிபோல விளங்கவைத்து, அவர்களை நல்வழிப்படுத்துஞ் சிறந்த கருவியாவது. "தமக்கென முயலா நோன்றாட், பிறர்க்கென முயலும்" பெரியோர்களது சீரியகருத்துக்கள் நிரம்பிய இந்நூலைத்தமிழ் மக்களும் அறிந்துய்ய மொழிபெயர்த்துதவிய ஐயரவர்கட்கு நம்மவர் பெருங்கடமை பூண்டுள்ளார்கள். இந்நூலின் நடைப்போக்கு யாவரும் படித்துவக்குமாறு இனிமையும் எளிமையும் வாய்ந்துள்ளது. நம் நாட்டின் எதிர்கால நன்மையை அவாவும் ஆரிய நன்மக்களெல்லாம் இதனைப்பெற்றுப்படித்து, படித்தபடி ஒழுக முயலுதல் இன்றியமையாததாம். இப்புத்தகம் 460-பக்கங்களுடைத்தாய், நல்ல காகிதத்தில் சிறந்த எழுத்தில் அமைந்து ஒளிர்கின்றது. இதன் விலை ரூபா ஒன்றே.

அருணகிரிநாதர் அற்புதசரிதம்:—திருவருட் செல்வராகிய இச்சுவாமிகளைக் குறித்து, அவர் இன்னார் இனையரென்று தமிழர்க்குக் கூறுதல் வேண்டாததாம். இம்மகானுடைய அழகிய சரிதத்தை முன்னரும் சிலர்பலர் வெளியிட்டுள்ளனராயினும், அதனைத் தனியாக ஆராய்ந்து, ஸ்ரீமணமங்களரென்பார் இனிய நடையில் ஒரு சிறு நூல் வெளியிட்டிருக்கின்றார். இவர் அச்சுவாமிகளது வரலாறுகளை எழுதிச் செல்லுந் திறன் புகழத்தக்கதாம். இச்சரிதத்தின் இடையிடையே சிறந்தபல நீதிகளையும், உலகரீதியில் தம் அபிப்பிராயங்கள் சிலவற்றையும் காட்டியிருத்தலும் படிக்கத்தக்கதே. அருணகிரிநாதர்பால் பத்திமிக்குடையாரெல்லாம் இவ்வரலாற்று நூலைப் பெற்றுப்படித்து மகிழக்கடவர். இதன் விலை அணு இரண்டு.

ஸ்ரீ:

கடவுள் துணை

மூவாதியார் செய்த

# ஐந்திணையெழுபது

## மூலமும் உரையும்.

## க.—குறிஞ்சி.

க *அவரை பொருந்திய பைங்குர லேனல்
கவரி மடமா கதூஉம் படர்சாரற்
கானக நாட மறவல் வயங்கிழைக்
கியானிடை நின்ற புணை.

என்றது தோழி தலைமகனை வரைவுகடாயது.

(இதன்பொருள்.)—அவரை பொருந்திய கதிரையுடைய பசுந்தினையைக் கவரிமடமா கதுவாநின்ற படர்ந்த சாரலினையுடைய கானகநாடனே! மறவாது நினைப்பாயாக; வயங்காநின்ற அணியினையுடையாட்கு யானவேநின்ற புணை; என்றவாறு. (க)

உ †கொல்லைப் புனத்த வகில்சுமந்து கற்பாய்ந்து
வானி னருவி ததும்பக் கவினிய
நாட னயமுடைய னென்பதனா னீப்பினும்
வாடன் மறந்தன தோள்.

(இ-ள்.) கொல்லைப்புனத்த அகிலைச்சுமந்து கற்கள்மேற் பாய்ந்து மழையானுளதாய அருவி முழங்குதலான் அழகுபெற்ற நாடன் தன்னைய டைந்தார்க்கீரமுடையனென்பதனான் அவன் பிரிந்தானாயினும் வாடுதலை மறந்தன என்றோள்கள்; எ-று. (உ)

---

* இதனை "பாங்கி தலைவியை நீங்கித் தலைவற்கு ஓம்படை சாற்றற்குச் செய்யுள்" என்பர் அகப்பொருள்விளக்கவுரைகாரர். (சூத். கசகூ)

† "இதனை நச்சினார்க்கினியர் "வரைவுதலைவரினும்" (தொல், பொ, கள, உ0) என்பதற்கெடுத்தோதி, இதன்கண் "நயனுடையன்' என்பதனால் வரைவுதலைவந்தமையும் 'நீப்பினும்' என்பதனால், அவன்வயிற்பரத்தமையுங் கூறினாள்" என்றார்.

௩ இலையமர் தண்குளவி யேய்ந்த பொதும்பிற்
குலையுடைக் காந்த ளினவண் டிமிரும்
வரையக நாடனும் வந்தான்மற் றன்னை
யலையு மலைபோயிற் றின்று.*

**எ-து தோழி தலைமகன் வரைவுமலிந்தமை தலைமகட்குச் சொல்லியது.**

(இ - ள்.) இலைபயின்று தண்குளவிக்கொடிகள் படர்ந்துமூடிய பொதும்பின்கட் பூங்கொத்தையுடைய காந்தளின் இனவண்டுகளொலிக்கும் வரையகநாடனும் வரைவொடு வந்தானாதலான் இன்று நமக்கு அன்னையலைக்கும் அலைபோயிற்று; எ-று. (௩)

௪ †மன்றப் பலவின் சுளைவிளை தீம்பழ
முண்டுவந்து மந்தி முலைவருடக் கன்றமர்ந்
தாமா சுரக்கு மணிமலை நாடனை
யாமாப் பிரிவ திலம்.

**எ-து தலைமகன் சிறைப்புறத்தானாக இயற்பழித்த தோழிக்குத் தலைமகளியற்படமொழிந்தது.**

(இ - ள்.) மன்றின்கணின்ற பலவின் சுளைமுதிர்ந்த இனிய பழத்தைத்தின்றின்புற்றுவந்து ஆமாவின்முலையை மந்திவருட அவ்வாமாத் தன்கன்றிற்குப்போல அன்புபட்டுப் பாலைச்சுரக்கும் அணிமலைநாடனை யாமுளேமாப் பிரிவதிலம்; எ-று. (௪)

௫ சான்றவர் கேண்மை சிதைவின்றா யூன்றி
வலியாகிப் பின்னும் பயக்கு மெலிவில்
கயந்திகழ் சோலை மலைநாடன் கேண்மை
நயந்திகழு மென்னுமென் னெஞ்சு.

**இதுவுமது.**

(இ - ள்). அமைந்தாருடையநட்புச் சிதைவின்றி நிலைபெற்று அடைந்தார்க்குவலியாகி மறுமையின்கண்ணும் பயனைச்செய்யும்; அதுபோல, நீராற்றிகழாநின்றசோலையையுடைய மலைநாடனுடையநட்பு மெலிவின்றியின்பத்தைத்திகழாநிற்குமென்றுநின்றது என்னெஞ்சு; எ-று. (௫)

---

* இது "தலைமகள் உவகையாற்றாதுளத்தொடு கிளத்தற்குச் செய்யுள்" என்பர் அகப்பொருள்விளக்கவுரைகாரர் (சூ. கஎ௪.).

† தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், சூத்திரம்-உ௦, நச்சினார்க்கினியருரை மேற்கோள்.

௬ பொன்னிணர் வேங்கை கமழு நளிர்சோலை
நன்மலை நாட மறவல் வயங்கிழைக்கு
நின்னல்ல தில்லையா லீயாயோ கண்ணோட்டத்
தின்னுயிர் தாங்கு மருந்து.

எ-து புணர்ந்துநீங்குந் தலைமகனைக்கண்டு தோழி வரைவுகடாயது.

(இ - ள்). பொன்போன்ற பூங்கொத்தையுடைய வேங்கைகமழாநின்ற குளிர்ந்தசோலையையுடைய நன்மலைநாடனே! மறவாதொழிவாயாக: வயங்கிழைக்கு நின்னல்லதோராரணில்லையாதலால் நின்கண்ணோட்டத்தால் இன்னுயிரைத்தாங்குமருந்து நல்காயோ? எ-று. (௬)

௭ காய்ந்தீயே லன்னை யிவளோ தவறிலை
ளோங்கிய செந்நீ ரிழிதருங் கான்யாற்றுட்
டேங்கலந்து வந்த வருவி குடைந்தாடத்
தாஞ்சிவப் புற்றன கண்.

எ-து பகற்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகப் படைத்து மொழிகிளவியாற் றோழி வரைவுகடாயது.

(இ - ள்). வெகுளவேண்டா: அன்னாய்! குற்றமிலளிவள்; மிக்க சிவந்தநீர் தாழ்ந்தோடுங் கான்யாற்றுட் டேனோடுகலந்துவந்த அருவிநீரைக் குடைந்தாடினளாதலான் இவள் கண்தாஞ் சிவப்புற்றன: ஆதலான்; எ-று. (௭)

௮ வெறிகமழ் தண்சுனைத் தெண்ணீர் துளும்பக்
கறிவளர் தேமா நறுங்கனி வீழும்
வெறிகமழ் தண்சோலை நாடவொன் றுண்டோ
வறிவின்க ணின்ற மடம்.

எ-து புணர்ந்து நீங்குந்தலைமகனைக்கண்டு தோழி வரைவுகடாயது.

(இ - ள்). விரைகமழாநின்ற குளிர்ந்தசுனையின்கண் தெளிந்தநீர்துளும்ப மிளகுபடர்ந்துவளராநின்ற இனியமாவினது நறியகனிவீழும் வெறிகமழ் தண்சோலைநாடனே! நின்னறிவின்கணின்றதொரு பேதைமையுண்டோ? எ-று. (௮)

௯ மன்றத் துறுகற் கருங்கண் முசுவுகளுங்
குன்றக நாடன் றெளிந்த தெளியினை
நன்றென்று தேறித் தெளிந்தேன் றலையளி
யொன்றுமற் றென்று மனைத்து.

### எ-து தலைமகன்சிறைப்புறத்தானாக இயற்பழித்த தோழிக்குத் தலைமகளியற்பட மொழிந்தது.

(இ - ள்). மன்றங்களிலே நெருங்கியகல்லின்கண் கருங்கண்முசுக்கள் குதிபாயுங் குன்றகநாடன் என் மனத்தைத் தெளிவித்த தெளிவினைப் பிழையாதென்று தேறினேற்கு அவன்செய்த தலையளியொன்று: அவ்வொன்றுமப் பெற்றித்தாய்ப் பழுதாகாது; எ-று. (௯)

௧௦ பிரசங் கொளவீழ்ந்த தீந்தேனிறாஅன்
மரையான் குழவி குளப்பிற் றுகைக்கும்
வரையக நாட வரையா வரினெந்
நிரைதொடி வாழ்த லிலள்.*

### எ-து தோழி தலைமகனைக் கண்டு வரைவுகடாயது.

(இ - ள்.) தேறலைப் பிறர்கொள்ள வீழ்ந்த தீந்தேனிறால்களை மரையான்கன்று குளம்பாலுழக்கும் வரையகநாடனே! நீ வரையாது வருவையாயின் எங்கணிரைதொடி யுயிர்வாழாள்; எ-று. (௧௦)

௧௧ கேழ லுழுத கரிபுனக் கொல்லையுள்
வாழை முதுகாய் கடுவன் புதைத்தயருந்
தாழருவி நாடன் றெளிகொடுத்தா னென்றோழி
நேர்வளை நெஞ்சூன்று கோல்.

### எ-து தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் கேட்ப இயற்பட மொழிந்தது.

(இ - ள்) பன்றிகள் கொம்பினாலுழுத சுட்டுக்கரிந்த புனக்கொல்லையுள் வாழையின் முதிர்ந்த காயைக் குரங்கினுட்கடுவன் களட்புழுதியுட் புதைத்தயருந் தாழ்ந்த அருவிகளையுடைய நாடன், என்றோழியாகிய நேர்வளைக்கு நெஞ்சூன்றுகோலாகத் தெள்ளிய வஞ்சினங் கூறினான்; எ-று. (௧௧)

௧௨ பெருங்கை யிருங்களி றைவன மாந்திக்
கருங்கான் மராம்பொழிற் பாசடைத் துஞ்சுஞ்
சுரும்பிமிர் சோலை மலைநாடன் கேண்மை
பொருந்தினார்க் கேமாப் புடைத்து.

---

* இது "தலைமகனோடு ஊருங் குலனும் மரபும் புகழும் வாய்மையும் கூறற்குச் செய்யுள்" என்பர் அகப்பொருள்விளக்கவுரைகாரர் (சூத்-௧௬௬).

### எ-து தலைமகன் சிறைப்புறத்தானாக இயற்பழித்த தோழிக்குத் தலைமக ளியற்படமொழிந்தது.

(இ - ள்.) பெருங்கையையுடைய இருங்களிறு ஐவனநெல்லைத் தின்று கருங்காலையுடைய மராம்பொழிலிற் பச்சிலைநிழலிற் றுயிலும் வண்டுகளொலிக்குஞ் சோலைமலைநாடன் கேண்மையைப் பொருந்தினார்க்கு ஏமாப்புடைத்து; எ-று. (கஉ)

கந. *... ... ... ...
... ... ... ...
யார்வத்தி னார முயங்கினேன் வேலனு
மீர வலித்தான் மறி.

### எ-து வெறியாட்டெடுத்துக்கொண்டவிடத்துத் தோழிக்குத் தலைமகள் அறத்தோடுநின்றது.

(இ - ள்.) நீண்ட கதிரினையுடைய பசுந்தினையை வளைவாய்க்கிளியினங் கவருநீரானே தெளிந்து திகழாநின்ற சோலைகளையுடைய நாடன் கேண்மையைக் காதலினானிரம்ப மேவினேன்; பிரிதலாற்றேனாயினேன்; அவ்வாற்றாமை தெய்வத்தினாயதென்று முருகற்கு மறியையறுக்கத் துணிந்தான் வேலோன்; தோழி! இதனை விலக்குவாயாக; எ-று. (கந)

கச † குறையொன் றுடையேன்மற் றோழி நிறையில்லா
மன்னுயிர்க் கேமஞ் செயல்வேண்டு மின்னே
யராவழங்கு நீள்சோலை நாடனை நம்மி
லிராவார லென்ப துரை.‡

### எ-து தலைமகன் வரும்வழியின் ஏதத்துக்குக் கவன்ற தலைமகள் வரைவுவேட்டுத் தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்.) நின்னாலொருகாரியமுடையேன்: தோழி! நிலைமையில்லாதவென் மன்னுயிர்க்கு அரணஞ்செய்யவேண்டும்; இப்பொழுதே பாம்புகளான் வழங்கப்படுகின்ற நீண்ட சோலையையுடைய நாடனை நம்மனையின்கணிரவு வரவேண்டாவென்பதனைச் சொல்; எ-று. (கச)

## குறிஞ்சி முற்றும்.

---

* இவ்வீரடியும் பிரதிகளிலில்லை.
† தொல், பொரு, கள, சூத்-உ0, நச்சினார்க்கினியருரை மேற்கோள்.
‡ இது "தலைமகள் நெறிவிலக்குவித்தற்குச் செய்யுள்" என்பர் அகப்பொருள்விளக்கவுரைகாரர். (சூத். ககசு)

# உ—முல்லை.

கசு செங்கதிர்ச் செல்வன் சினங்கரந்த போழ்திறற்
பைங்கொடி முல்லை மணங்கமழ வண்டிமிர்
காரோ டலம்வருங் கார்வானங் காண்டொறு
நீரோ டலம்வருங் கண்.

**எ-து பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.**

(இ - ள்). செய்ய கதிரினையுடைய செல்வன் சீற்றமடங்கிய காலத்தின்கட் பசுங்கொடியையுடைய முல்லைகள் பூத்து மணங்கமழ்தலான் வண்டுகள் ஆலிக்கக் கார்ப்பருவத்தோடு தடுமாறுகின்ற முகில்களையுடைய வானங் காணுந்தோறும் நீரோடுகூடத் தடுமாறுகின்றன கண்கள்; எ-று. (க)

கஎ தடமென் பணைத்தோளி நீத்தாரோ வாரார்
மடநடை மஞ்ஞை யகவக்—கடன்முகந்து
மின்னோடு வந்த தெழில்வானம் வந்தென்னை
யென்னாதி யென்பாரு மில்.

**இதுவுமது.**

(இ - ள்.) பெரியவாய் மெல்லியவாய் மூங்கில்போன்றிருந்த தோளினையுடையாய்! நம்மைத்துறந்தா ரிக்காலத்து வருகின்றிலர்; மெல்லிய நடையினையுடைய மயில்களழைக்கக் கடன்முகந்து மின்னுடனேவந்தது எழிலினையுடைய வானம்; ஆதலால், பின்னையும் என்னை வந்து நீயென்செயக்கடவா யென்றிரங்கி யொன்றைச் சொல்லுவாருமில்லை; எ-று. (உ)

கஎ தண்ணறுங் கோட றுடுப்பெடுப்பக் காரெதிரி
விண்ணுயர் வானத் துருமுரற்றத்—திண்ணிதிற்
புல்லுந ரில்லார் நடுங்கச் சிறுமாலை
கொல்லுநர் போல வரும்.

**இதுவுமது.**

(இ - ள்.) குளிர்நறுங்கோடல் துடுப்புப்போலப் பூங்குலைகளை யேந்த கார்காலத்தை யேன்றுகொண்டு முகில்கண்மிக்க வானத்தின்கணுருமேற்றொலிப்பத் திண்ணிதாக முயங்குவாரையில்லாதார் நடுங்கும்வகை துன்பத்தைச் செய்யும் மாலை கொல்வாரைப்போல வராநின்றது; எ-று. (ங)

கஅ கதழுறை வானஞ் சிதற விதழகத்துத்
தாதிணர்க் கொன்றை யெரிவளரப் பாஅ
யிடிப்பது போலு மெழில்வான நோக்கித்
துடிப்பது போலு முயிர்.

இதுவுமது.

(இ-ள்.) விரைந்து துளிகளை முகில்கள் இதழகத்தே சிதறத் தாதினையுடைய பூங்கொத்துக்களையுடைய கொன்றைகள் எரிநிறத்தை மிகுப்பப்படர்ந்து கழறுவதுபோலும் எழில்விசும்பைக் காணுந்தோறும் வருந்தித் துடிப்பதுபோலாநின்றது என்னுடலம்; எ-று. (ச)

கசூ ஆலி விருப்புற் றகவிப் புறவெல்லாம்
பீலி பரப்பி மயிலாலச்—சூலி
*விரிவது போலுமிக் காரதிர வாவி
யுருகுவது போலு மெனக்கு.

இதுவுமது.

(இ-ள்.) மழைத்துளிகளைக் காதலித்தழைத்துக் காடெலாந் தோகைகளைப் பரப்பி மயிலினங்களாடக் கருக்கொண்டு விரிவதுபோலுமிக்கார் முழங்க எனக்கு என்னுயிருருகுவதுபோலாநின்றது; எ-று. (ரு)

உ0 இனத்த வருங்கலை பொங்கப் புனத்த
கொடிமயங்கு முல்லை தளிர்ப்ப விடிமயங்கி
யானு மவரும் வருந்தச் சிறுமாலை
தானும் புயலும் வரும்.

இதுவுமது.

(இ - ள்.) இனங்களையுடைய கலைகள் களித்துமிகப், புனங்களிலுள்ள கொடிமிடைந்த முல்லை தளிர்ப்ப, இடியோடுகூடமிடைந்து யானுமென்காதலரும் வருந்தத் துன்பத்தைச் செய்யும் மாலைதானும் மழைப்பெயலும் மேன்மேல் வாராநின்றன; எ-று. (சு)

உக காரிகை வாடத் துறந்தாரும் வாராமுன்
கார்கொடி முல்லை யெயிறீனக்—காரோ
டுடன்பட்டு வந்தலைக்கு மாலைக்கோ வெம்மின்
மடம்வாழ கிற்பா ரிலர்.

* ‘வருவது’ எனவும் பிரதிபேதமுண்டு.

இதுவுமது.

(இ - ள்.) எம்மழகு சுருங்க எம்மை நீங்கினரும் வருவதற்கு முன்னே கருங்கொடியையுடைய முல்லைகள் நல்லாரெயிறுபோலவரும்பக் காரோடேயுளதாய் வந்து எம்மை நலிகின்ற மாலைக்கு எம்மைப்போல வலியிழந்துமெலிவாற்றியிருந்து வாழ்வாரில்லை; எ-று. (எ)

உஉ கொன்றைக் குழலூதிக் கோவலர் பின்னிரைத்துக்
கன்றமர் ராயம் புகுதர—வின்று
வழங்கிய வந்தது மாலையாங் காண
முழங்கிவிற் கோலிற்று வான்.

இதுவுமது.

(இ - ள்.) கொன்றை யென்னுநின்ற குழலூதிக் கோவலர்பின்னே நிரைத்துக் கன்றைவிரும்பிய நிரையாயங்களூர்தோறும்புக, இவ்விடத்தின்கண் வழங்கவேண்டி வந்தது மாலை: யாமிறந்துபடாதிருந்து காணும்படி முழங்கி வில்லைக்கோலிற்று மழை; எ-று. (அ)

உங தேரைத் தழங்குரற் றார்மணி வாய்திறப்ப
வார்கலி வானம் பெயறொடங்கிக்—கார்கொள
வின்றூற்ற வாரா விடுவார்கொல் காதல
ரொன்றானு நில்லா வளை.

இதுவுமது.

(இ—ள்.) ஓசையையுடைய முகில்கள் பெயலைத் தொடங்கிக் கார்ப்பருவத்தைக் கொள்ள, நம் காதலர், தேரைபோன்ற தழங்கு குரலையுடைய குதிரைத்தார்மணிகள் வாய்திறப்ப, இன்று நாம் ஆற்றியுளமாம்வகை வாராது விடுவார்கொல்லோ: தோழி! நம்வளை ஒன்றாகிலும் நிற்கின்றதில்லையால்; எ-று. (கூ)

உச கல்லேர் புறவிற் கவினிப் புதன்மிசை
முல்லை தளவொடு போதவிழ—வெல்லி
யலைவற்று விட்டன்று வானமு முண்கண்
முலைவற்று விட்டன்று நீர்.

இதுவுமது.

(இ - ள்) கல்லெழுந்து கிடந்த கானத்தின்கண் அழகுபெற்றுப் புதல்கண்மிசை முல்லைகளும் செம்முல்லைகளும் பூக்கண்மலர இரவின்கண் முகிலும் அலைவற்று விட்டன; மையுண் கண்களும் முலைமறைய நீர் வார்ந்தன; எ-று. (௧0)

பாதிரி மேவுசீர் நன்னாணுப் பூமருது, மாசெல்வா யொன்பான் முதலாக வாறு, காருருமு மாவருவா யீரைந்து முதலா, வொரோவொன் றைந்தா மு ற்றெதுகை வெள்ளைக், காரெரு பஃது மொன்று மாகும்" ௬௰௧. "வா கிரு நான்கும் புளிமா வொன்பான், முதலா வொரோவொன் றெருநான் காக, வெள்ளை பெற்ற முற்றெதுகைதா, மீரா றக வியலு மென்ப" ௧௨. ஆக வெள்ளைக்கு முற்றெதுகை ௭௩. நிரையீ ராறுற் கலிக்குமுற் றெதுகை, நாலொரு பஃது மெட்டு மாகும்" ௪௮.

"மூவகைப் பாவிற்கு மொழிந்தமுற் றெதுகை, மூன்றுதலை யிட்ட விருநூ றாகும்" ௨௱௩. "எதுகையென் பதனை னியன்ற பெருந்தொகை, மூவா யிரத்தோ டிருநூற்று முப்பது" ஆகவே யெதுகைத்தொடை ௩௲௨௱௩௰.

"மோனைக்கு மெதுகைக்கு மொழிந்த தொடைத்தொகை, யிருபத் திரண்டு முடியி னிடட, வறுநூற் றுடனே மூாயிர மாகும்". ஆகமோனைக்கு மெதுகைக்கும் ௬௲௬௱௨௰௨.

இனி முரண்வருமாறு.

"அகவற் கிருநூற் றெழுபத்து மூன்றும், வெள்ளைக் கொருநூற் றைம்பத் தாறுங், கலிக்கு நூற்றிரு பஃது மாகும்." "மூவகைப் பாவிற்கு மொழிந்த வடிமுரண், ஐஞ்ஞாற்று நாற்பத் தொன்ப தாகுப" ருடு௱௪௰௯.

"நேரா திச்சீர் பதின்மூன் றானு, மொரோவொன்று பத்தாக வகவற் கிணைமுர, ணீரைம் பஃது முப்பது மாகும்." ௱௩௰. "நிரையா திச்சீர் பதின் மூன் றானு, மொரோவொன்று பத்து மொனறு மாக, வகவல் பெற்ற விணை முரண் டொடைதா, மீரைம் பஃதொடு நாற்பத்து மூனறே" ௱௪௰௩. ஆக வகவற்கு ௨௱௭௰௩. "வண்டு ஞாயிறு போதுபூப் போரே, றெட்டுமுத லா வொரோவொன் றேழுந், தேமா மின்னுப் பாதிரி மேவுசீர், நன்னாணுப் பூமருது மாசெல் வாயிவை, யொன்பான் முதலா வொரோவொன் றானுங், காருருமு மாவருவா யீரைந்து முதலா, வொரோவொன் றைந்து மாக வெள்ளைக், கிணைமுர ணெண்பஃ தாகுமென்ப." ௮௰. "வரகு வலியது கடியாறு விறகுதீ, யெட்டுக் கணவிரி பெருநாணுப் புலிசெல்வாய், மழகளி றுருமுத் தீப் புளிமா வரவொன்பான், முதலா வொரோவொன் றிருமூன் றாக, நரை யுருமுப் புலிவருவா யீரைந்து முதலா, வொரோவொன் றைந்தாக வெள்ளைக் கிணைமுர, ணேழொரு பஃது மாறு மாகும்," ௭௰௬. ஆக வெள்ளைக்கு ௱௫௰௬. "நேரு நிரையு மாகிய சீர்க,ளிருபத்து நான்காற கலிக்கிணை முரண்டொடை, யீரைம் பஃது மிருபது மாகும்." ௱௨௰.

"மூவகைப் பாவிற்கு மொழிந்த வியைமுரண், ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்பது மாகும்" ௫௱௪௰௯.

ஈண்டிணைமுரணிற்குக் கூறிய சூத்திரங்களைப் பொழிப்புமுரணுக்கு மொரூஉமுரணுக்குங் கூழைமுரணுக்கும் மேற்கதுவாய்முரணுக்குங் கீழ்க் கதுவாய்முரணுக்கும் முற்றுமுரணுக்குங் கூறி இணைமுரணுக்குத் தொடை கொண்டிவ்வாறேகொள்ள ஒரோவொன்று ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்ப தாம். ௫௪௯. "இணைமுரண் டொடையோ டேனைய கொள்ள, வொரோ வொன் றைஞ்ஞூற்று நாற்பத் தொன்பதே"

"எண்வகை முரணு ளியன்ற தொடைத்தொகை, முந்நூற்றுத் தொண் ணூற் றிரண்டு முடிவிட்ட நாலா யிரமா நவின்றனர் புலவர்." ஆக, ௪௲ ௩௱௯௰௨.

## இனியியைபு வருமாறு.

"அகவற் கிருநூற் றெழுபத்து மூன்றும், வெள்ளைக் கிருநூற் றைம் பத் தாறுங், கலிக்கு நூற்றிருபஃது மாக, மூவகைப் பாவிற்கு மெழுத்தடியி யையபே, யைஞ்ஞூற்று நாற்பத் தொன்ப தாகும்." ௫௱௪௰௯. "சொல்லடி யியைபு கொள்ளுங் காலு, மூவகை யானும் வந்த பெருந்தொகை, யைஞ்ஞூ ற்று நாற்பத் தொன்ப தாகும்" ௫௱௪௰௯.

"நேரா திச்சீர் பதின்மூன் றுறு, மொரோவொன்று பத்தாக வகவற்கி ணையியை, பீரைம் பஃது முப்பஃது மாகும்" ௱௩௰. இவ்வைந்தியைபு மூன்றுபா விற்கும் பகுக்குமாறு—"ஐந்து தொடையா னகவற்கு வருந்தொகை, யொ ரோவொன் றிருநூற் றெண்பத்து மூன்று, வாயிரத்து நானூற் றொருபத் தைந்தே" ௲௪௱௰௫. "ஐந்து தொடையான் வெள்ளைக்கு வந்ததொகை, யொ ரோவொன் றொருநூற்றுப் பத்து மூன்று, வெண்ணூற் றொருபத் தைந்தென மொழிப" ௫௱௬௰௫. "ஐந்து தொடையாற் கலிக்கு வருந்தொகை, யொரோ வொன் றொருநூற் றிருபஃ தாக, நூறு தலையிட்ட ஐஞ்ஞூ றாகும்" ௬௱.

"கூறிய மூன்றின் றொடைத்தொகை கூறின், ஈரைஞ்ஞூற் றுடனெண் ணூற்று முப்பது" ஆகவைந்து தொடையானும் பெற்றதொகை ௨௲ ௮௱௩௰.

இனி "ஐவகை முரணும் வருக்க மோனையும், வருக்க வெதுகையும் வழி மோனையும், உயிரெது கையு முரைத்தசெந் தொடையு, மறுநூற் றிருபத் தைந்தடி யோடெந், தொடைகொளும் வகையைத் தோன்றக் கூறி, னுந்தை

யெனுஞ்சீர் முதற்பா விரண்டிற்கு, முறழ்ந்த வடிக ளிருபது நீக்கி, யேனைச் சீரா னுறழ்ந்த வடித்தொகை, யறுநூற் றைந்தே யாகு மவற்றுள், வழுநிலை யைம்பத் தாறுங் களைய, வொரோவொன் றெய்திய தொடைத்தொகைகூறி, னைஞ்ஞூற்று நாற்பத் தொன்ப தாகப், பத்துத் தொடையும் பெற்ற தொகை தா,மையா யிரத்தொடு நானூற்றுத் தொண்ணூறு" ஆகப்பத்துத்தொடைக்கு மொரோவொன் றைஞ்ஞூற்றுநாற்பத்தொன்பஃதாகப் பெற்றதொகை ௫௲௪௱௯௰. நுந்தைக்கிரண்டு மரபிற்குமூன்றும் வழுப்போய் ஐம்பத்தாறு வழுவாயிற்று. இனி இத்தொகையை மூன்று பாவிற்கும் பகுக்குமாறு:— "ஒரோவொன் றிருநூற் றெழுபத்து மூன்றாய்ப், பத்தி னானு மகவல் பெறுந் தொகை, யீரா யிரத்தோ டெழுநூற்று முப்பது" "ஒரோ வொன்றொருநூற் றைம்பத்தாறாய்ப்,பத்தி னானும் வெள்ளை பெறுந்தொகை, யாயிரத் தைஞ்ஞூற் றறுபஃ தாகும்" "ஒரோவொன் றொருநூற் றிருபஃ தாகப், பத்தினானுந் துள்ளல் பெறுந்தொகை, யாயிரத் திருநூ றாகு மென்ப."

"தொடைமூ வைந்தா னியன்ற தொகைதா, மெண்ணா யிரத்தொடு முந்நூற் றிருபது."—முற்கூறியவைந்து மிதனாற்கூறிய பத்துமாகப் பதினைந்தானும் பெற்றதொகை ௮௲௩௱௨௰.

### இனி மூன்றாமெழுத்தொன்றெதுகை.

எழுத்தெண்ணப்படு மெழுத்துக்களிலும் எழுத்தாக வெண்ணாத வொற்றுக் குற்றுகரங்களிலுந் தொடைகொள்ளுமாறு:—

"வண்டு மின்னு நுந்தைசேற் றுக்கா, னீடுகொடி யிவ்வாற்றா னறுபது நீக்கி, யேனைச் சீரா னுறழ்ந்த வடிக, ளிருநூற் றறுபத்து நான்கா மவற்றுண், முப்பத் தொருவழுக் களைந்து கொள்ளப், பெற்ற வகவற் றொடைத் தொகை கூறி, னிருநூற்று முப்பத்து மூன்றா கும்மே"—இதனுட் களைந்த சீரைந்துநீக்கி யேனைநேராதியொன்பதிற்குப் பதினெட்டும் நிரையாதி பதின்மூன்றற்குப் பதின்மூன்றுமாக வழு முப்பத்தொன்றாயிற்று. "வண்டு மின்னு நுந்தைசேற் றுக்கா, லிவற்றான் முப்பத் தொன்று நீக்கி, யேனைச் சீரா னுறழ்ந்த வடிக, ணூற்றொ டைம்ப தாகு மவற்றுள், வழுப்பதி னான்குங் களைய வெள்ளை, பெறுந்தொடை நூற்று முப்பத் தாறே" இதனுட் களைந்த சீர் நான்குநீக்கி யேனைநேராதி பத்திற்குப் பத்தும், நிரையாதியுள் வரகு வலியது கடியாறு விறகுதீயென்னும் நான்கற்கு நான்குமாக வழுப்பதினான்காயிற்று. ஆக விரண்டற்கும் வழு நாற்பத்தைந்து. "சேற்றுக்கா னீடு கொடிச் சீரைந்து நீக்கி, யேனைச் சீராற் றுள்ளல் பெறுந்தொடை, யொருநூற் றொருபஃ தாகு மென்ப." ௱௰

"மூவகைப் பாவின் மூன்று மெழுத்தொன், றெதுகை நானூற் றெழுபத் தொன்பது" சாஎ௧௬. அகவற்கைந்தும் வெள்ளைக்கு நான்குங் கலிக்கிரண்டுமாக இவ்வகையாற் களைந்தசீர்களைந்து மிரண்டா மெழுத்தும் மூன்றுமெழுத்துஞ் சேரவொன்றிற் றலையாகெதுகைப்பாற்படுதலானும் பிறசீர் குறைந்து வேறுபடுத்திற் பிறதொடைசிறந்து இத்தொடை சிறந்து காட்டாமையானும் அங்ஙனங் களையவேண்டிற்றெனவுணர்க.

மெல்லினவெதுகை முதலியன.

இனி "மெல்லின வெதுகையு மிடையின வெதுகையு, மாசிடையெதுகையு நெடின்மோனையு, நிறைமுதற் சீரு நுந்தையு நீக்கி, நேர்முதற் சீர்கள் பதின்மூன் றானு, வொரோவொன் றறமு மடித்தொகை கூறி, னூற் றொடைம்பத் தாறு மவற்றுள், வழுநில மிருபத் தாறுங் களைய, வொரோவொன் றெய்துந் தொடைநூற்று முப்பஃது" "அந்நாற் றொடையா னகவல் பெறுந்தொகை, யைஞ்ஞூற் றிருபஃ தாகு மென்ப." "நேர்பதின் மூன்றுன் முன்னர்க் கூறிய, நால்வகைத் தொடைக்கு மொரோவொன் றுறழ்ந்த, வடித்தொகை தொண்ணூற்று மூன்ற னுள்ளும், வழுப்பதின் மூன்று களைய வொரோவொன், றெய்திய தொடைதா மெண்ப தென்ப, தாகநாற் றொடை பெற்றவெண் டொடைதா, னெழுநூற் றிருபஃ தெனமொழிந் தனரே." அவற்றுள் "நுந்தை வந்த மெல்லின வெதுகை, முதற்பா விரண்டற்குந் தளைவழுக் களைந்து, கொள்ளப் பெறுந்தொடை பதினே ழாகும்." "நுந்தை தேமாக் களைந்துநேர் முதற்சீர், பன்னிரண் டானு முன்னர்க் கூறிய, நாற்றொடை யொரோவொன் றெய்துந் தொடைதா, மறுபஃ தாகக் கலிக்கு வருந்தொடை, யிருநூற்று நாற்பஃ தென்றனர் புலவர்." நாற்றொடை யானும் பெற்ற தொடைதா, மாயிரத் தோடு தொண்ணூற் றேழே" ஆகவிந்நான்கு தொடைக்கும் பெற்ற தொகை சூகூஎ.

இனி வல்லினவெதுகை வருமாறு.

"வல்லின வெதுகை வகுக்குங் காலை, நிரைபதின் மூன்று மின்னு நுந்தையு, மேவு சீரு நானுத் தளையுங், களைய நேராதி பத்தா மவற்றிற், கிருபது வழுவுங் களைந்த பின்னர், அகவல் பெற்ற தொடைநூ றாகும்." "நிரைபதின் மூன்று மேவு சீரு, மின்னு நுந்தையுங் களைந்து நேராதி, பதினொன் றற்கும் பதினொரு வழுவுங், களைந்தபின் வெள்ளைக் கறுபத் தெட்டே, நிரையீ ராறு நானுத் தளையு, மேவு சீருங் களையநே ராதி, பத்தாற் கலித்தொடை யைம்பஃ தாகும்."

"மூவகைப் பாவிற்கும் வல்லின வெதுகை, யிருநூற் றொருபத் தெட்டென மொழிப." ௨ா௧௯.

பூமியதிர்ச்சியானது வெகு வேகத்துடன் பரவுங்கால் சில காலங்களில் பூமியின் மேலுள்ள பொருள்கள் அபாயத்தையும் அழிவையுமடைவதுண்டு. ஆனால் அவ்வகையான அபாயமும் அழிவும் விசேஷித்தில்லை. பூமியதிர்ச்சியினால் பெரும்பாறைகள் புரண்டும் பூமியானது மட்டத்தில் ஏற்றத்தாழ்வையடைந்தும் பூமியின் மேல் பெரிய உடைப்புக்களுண்டாயும் வரப்பார்த்திருக்கிறார்கள். நமது இந்துதேசத்தில் வடக்கேயுள்ள சிந்து (The Indus) நதிக்கருகிலுள்ள கட்ச் (Cutch) என்னுந் தேசத்தில் திரண்ட மேடும் பள்ளமும் பூமியதிர்ச்சியாலுண்டாகின்றன. கடலின் கீழ்ப்புறத்தில் இவ்வதிர்ச்சி உண்டானால் மிக்க மாறுதலை உண்டு பண்ணும். பூமியதிர்ச்சியினால் உண்டாகும் பூமியலையோட்டம் (Earth wave) கடலில் பருத்த அலைகளை உண்டு பண்ணி பூமியின்மேல் வெகுதூரம் பரவச்செய்யுமியல்புடைத்து. இவ்விதக் கடல் அலைகள் 30 அடி முதல் 60 அடி வரையும் உயரத்தைக்கொள்வன. ஆரம்பத்தில் பூமியின்மேலுள்ள கட்டடங்கள் முதலியவை அசைவுற்றுக்கீழே விழுந்து அழிந்தபின் சற்று நேரத்தில் கடலின் அலை பரவிப் பூமியையழிக்கக் கண்டிருக்கின்றனர். கடல் அலை திரண்டுபொங்கி முன்னே வருமுன் வெகுவளவு பின்னே செல்லும். தென் அமெரிக்காவின் மேற்கேயுள்ளவர்கள் இவ்விதம் கடல் நீர் பின் செல்வதைத் தகுந்த காலத்தில் இனி வரப்போகிற கடல் பொங்கி முன் செல்லத்தக்க அபாயத்திற்குக் குறியாக வறிந்து தங்கள் தங்கள் பிராணனைக் காப்பாற்றும் பொருட்டுமலைமேல் ஏறித்தங்குவது வழக்கமாம்.

பூமியதிர்ச்சியினாலுண்டாகும் கடலலையோட்டத்தின் வேகத்தைக் கொண்டு பொதுவாய்க் கடலின் ஆழத்தைத் தேர்ந்தறியக்கூடும்.

(e) **மணற்குன்று** (Sand dune.) மணற்குன்றைக் கடலோரங்களில் சிலவிடங்களில் காணலாம். சென்னையில் மைலாப்பூருக்கும் அடையாற்றிற்கும் நடுவில் கடற்கரை யோரத்தில் மணற்குன்றுகள் விசேஷித்துள்ளன. மற்றும் சென்னையில் மஹாபலி புரத்திலும் பக்கிங்காம் வாய்க்காலில் படகேறிச் செல்லும் பொழுதும் முகத்துவாரத்திற்கப்பால் கிழக்குப் புற ஓரமாக மணற் குன்றுகள் மிகுதியாயிருக்க நாம் பார்க்கக்கூடும். இதன் காரணமென்னவெனில் கடல் பின்னோக்கிச் செல்லச்செல்ல, நீரானது முன்னே தங்கியுள்ள விடங்களிலுள்ள மணற் பொடிகளுலர்ந்து காற்றினால் உட்புறமொதுங்க இக்குன்றுகளுண்டாகின்றன.

**நிலவகை முற்றிற்று.**

ஸ்ரீ:

# ஏழாவது பாடம்.

## நீர்ப்பாகம்.

## முதற்பிரிவு—நீரோட்டம்.

## Water Circulation.

நீரானது திரண்டுள்ளவிடங்கள் பலவாயினும் எல்லாவற்றினும் பெரிதாய்ப் பரவியுள்ள நீர்ப்பாங்கைக் கடலென்று கூறுகிறோம். கடலின் நீர் தன்மையில் மாறுபட்டு ஆவியாய்க்கிளம்பி ஆகாயத்தில் நீர்த்துளிகளைக்கொண்ட மேகமாகப் பரவி மழைத்துளிகளை நிலத்தில் வீழ்த்த அத்துளிகள் ஒன்றுசேர்ந்து பலவித நீர்ப்பெருக்குகளாக ஓடி முடிவில் நீராகவே கடலைத் திரும்ப அணுகிச்சேர்தல் நீரூடாட்டமென்னப்படும். கார்காலத்துப்பனியும் (Mist) குளிர்ச்சியுள்ள தேசங்களில்காணக்கூடிய உறைபனியும் (Snow) மற்றும் ஆலங்கட்டி (Hail) பனிக்கட்டி (Ice) முதலியனவும் நீரின் வெவ்வேறான உருவமாக ஆங்காங்குத் தோன்றிச் சூரியவெப்பத்தால் முடிவில் கரைந்து பின்னும் நீராய்ப்பூமிக்குள் ஊறவும் கடலைச் சேரவும் பார்த்தல்கூடும். இவ்விதம் நீரானது இடத்திற்கேற்றபடி மாறுதலையடைந்து இறுதியில் நீராய்ப் பின்னும் மாறுதலை மேற்கொண்டு மறுதரம் நீராய்ச் சுற்றிச் சுற்றி நீராகவும் நீரின் வேறுபாடுகளாகவும் பூமியின்மேல் கண்டுவருவது, நீரின் ஊடாட்டம் அல்லது நீரின்சுற்று அல்லது நீரின்பரிவர்த்தனம் என்னத்தகும். எவ்விதமெனில், ஒருவர் தமது வீட்டில் சுற்றத்தாருடனிருக்கையில் சுயேச்சையாயிருந்து வீட்டைவிட்டுவெளிப்பட்டக்கால் சமயத்திற்கேற்றபடி தமது ஒழுக்கங்களைச் சுயமாகவே சரிக்கட்டுவதுபோலவும், பிறகு அவரவர் தமது வீட்டில் வந்து வைகுங்கால் இல்லறத்திற்கேற்ப நடையுடை பாவனைகளை வேண்டுமென்றில்லாமல் சாதாரணமாக மேற்கொண்டு நடப்பதுபோலவும் அவ்வவ்விடத்திலுள்ள நீரானது சீதோஷ்ணஸ்திதியினாலும் தானத்திற்குரிய இயற்கையினாலும் ஆவியாகவும், பனியாகவும், உறைபனியாகவும் ஆலங்கட்டியாகவும் பனிக்கட்டியாகவும் நீர்த்துளிகளடர்ந்த மேகமாகவுந்தோன்றிக் கடைசியில் நீராய்ப் பூமியிற் றங்குகின்றது. மேலும் மழை பெய்தக்கால் பலவித நீரோட்டங்களாகவோடுஞ் ஜலந்தவிர பூமிக்குள் ஊறும் ஜலம் என்னவாகிறதென்பதையும் அந்த ஜலம் நீரோட்டத்தில் எவ்வாறு பொருந்துமென்பதையும் இனிச் சொல்லிவரும் நீர்ச்சுரங்கமென்னும் பாகத்திற் கண்டறியலாம்.

(1) மேகம் (cloud) :—ஆகாயம், வானம், மேகம் என்கிற பதங்களைப் பிழையின்றி அறியவேண்டும். ஆகாயமாவது (Space) வெற்றிடம். அவ்வெற்றிடம் உட்புறமிருந்தாலும் வெளிப்புறமிருந்தாலு மாகாயந்தான். இரக்கையைக்கொண்ட பிராணிகள் எங்கே பறக்கின்றனவென்றால் ஆகாயத்தில்பறக்கின்றனவென்று சொல்லல்வேண்டும். பெரியஇரக்கைகளைக்கொண்ட பக்ஷிகள் வெளிப்புறமாகாயத்திற் பறக்கப் பார்க்கின்றோம். வெகு சிறு இரக்கைகளைக்கொண்ட ஈயுங் கொசுவும் உட்புறவாகாயத்தில் பறக்கப்பார்க்கிறோம். நமது வீட்டினோர் அறையின்கண் யாதாயினுமோ ருடுப்பை யுதறினால் அதைவிட்டகலும் தூசிகள் எவ்விடம் பறக்கப் பார்க்கிறோம்? ஆகாயத்திற் பறக்கப் பார்க்கிறோம். அறைக்குள் விழும் சூரியகிரணத்தின் வழி வெகு சிறு தூள்கள் திரளாய்ப் பறக்கப் பார்க்கின்றோமல்லவா? அவை எங்கே பறக்கின்றனவென்றால் ஆகாயத்திற் பறக்கின்றனவெனல் வேண்டும். வெளிப்புறந்தானாகாயம் உட்புறமாகாயமல்லவென்று கருதுதல் பிழையாம். மூடப்பட்டுள்ளதோர் பெட்டியினுள்ளுமாகாயமுண்டு. ஆதலால் யாதோர் இடம் பொருளைக்கொள்ளாமல் வெற்றிடமாய்க் கிடக்கிறதோ அஃது ஆகாயமென்னப்படும்.

வானமாவது ஆகாயத்தின் ஓர் விதத்தோற்றம்.—அஃது எப்பொழுதும் மேலதாகியது. மலையடிவாரத்தின் கீழிருந்து பார்க்குங்கால் வானத்திற் பறப்பதாயுள்ளதோர் பறவை, மலையுச்சியிலிருந்து பார்க்குங்கால் கீழே ஆகாயத்திற் பறப்பதாய்ப் பார்க்கலாம். ஆதலால் மலையடிவாரத்தினின்று கருதத்தக்கதோ ராகாயம் மலையுச்சியின் கீழதாய்ப் பார்க்கலாகிறது. இதனால் ஆகாயத்திற்கும் வானத்திற்குமுள்ள பேதத்தைக் கண்டறியலாம். வானத்தை (firmament) வளைவுள்ளதாகவும் கூரைக்கொப்பிட்டுங் கூறுவர். மேலும் வானம் அடிவானமல்லது தொடுவானமென்றும் (horozon) உச்சிவானமென்றும் (zenith) பகுக்கப்பட்டுள்ளது. இவற்றின் விவரத்தை இனிவருங் ககோளசாஸ்திரப் படத்திற் கண்டறியலாம். ஆதலால் ஆகாயம், வானம் இவ்விரண்டையும் தேர்ந்தறிந்தபின், வானத்தின் கண் ஓடித்தோன்றும் மேகமின்னதென்றும், பூமிக்கருகில் ஆகாயத்திற் பரவியுள்ள பனி இன்னதென்றும் கற்பதோடு அவற்றின் நிலை வேறுபாட்டின் காரணத்தைத் தெளிவுற வறியவும் முயல்வோம்.

பொருள்கள் மூன்று ஸ்திதியிலிருக்கக்கூடியவை யென்பதை முன் பாடத்தில் படித்தோம். ஜலஸ்திதியிலுள்ள நீரை வாயுஸ்திதியில் நீராவியென்பர். நீராவியுண்டாவதற்குக் காரணம் உஷ்ணமும் காற்றின் பாரங்குறைதலுமேயாம். உஷ்ணமதிகரிக்கவும், காற்றின் பாரமதிகமாய்க் குறையவும்

ஜலஸ்திதியிலுள்ள நீரானது வாயு ஸ்திதியாகிய ஆவியாய் வெகு வேகத்துடன் கிளம்பும். ஆதலால் பூமியின்கண் எவ்வெவ்விடங்களில் சூரியவெப்பம் மிகுதியாகவுள்ளதோ அவ்விடங்களில் நீராவி அதிகமாய்க் கிளம்பவல்லதென்று அநுமானிக்கத் தக்கதாயுள்ளது. மேலும் சூரிய வெப்பத்தினால் காற்றானது மெலிவு அடையத்தக்கதாயுள்ளது. யாதொரு பதார்த்தத்தின்மேல் உஷ்ணம் பொருந்துகின்றதோ அப்பதார்த்தம் இளகுவதென்பதை முன்னமேயே அறிந்தோம். நமது பரிசத்திற்குப் பொருந்துவதாகிய காற்றுமோர்விதப் பொருளாதலால் அப்பொருள் மற்றவை போலவே உஷ்ணத்தின் பயனாகிய விகாசமடையுந்தன்மையை மேற்கொண்டு பரவுமியல்புடையது. இதற்கோர்வகை உதாரணமாகப் பருத்தியைக் கொண்டு காணத்தகும். பருத்தியானது (பஞ்சு) அதன் நுட்ப நாரினாலாகியது. அதின் நாரானது வெகுமெலியதாயுள்ள நூலாம். நார்களொன்றாகச்சேர்ந்து பந்துபோலிருந்தால் பருத்தி நெருக்கமடைந்து கனத்தைக்கொள்ளும். நார்களைச் சிறிதளவு கையினால் விலக்கினால் பருத்தியானது பரவி, வாயினாலூதுங்கால் பரக்கக்கூடிய அவ்வளவு இலேசாந்தன்மையையடைகிறது. அதுபோலவே வெப்பம் குறைந்திருந்தால் காற்றானது சற்றுகனமடைந்திருக்க வெப்பம் மிகுந்தால் மெலிவையடைகிறது. மெலிவையடையுங்கால் பஞ்சுபோல் காற்றும் ஆகாயத்தில் மேல்நோக்கிப்பறக்க வல்லது. ஆதலால் காற்றின்பாரம் குறைகிறதென்கிறோம். இவ்விதம் வெப்பம் மிகுதியாயுள்ளவிடங்களில் நீராவி யதிகமாய் வெளிக்கிளம்புவதுடன் காற்றின்பாரம் குறைகிறதென்றறிகிறோம். சாதாரணமாய் சூரியவெப்ப மோரிடத்தி லதிகரித்தால் அவ்விடத்தில் காற்றானது உஷ்ணமாயும் ஈரந்தாக்கியுமுளது. சூரியவெப்பத்தாலாகும் நீராவியானது காற்றில் பரவுவதாகையால் நீராவியைக் கொண்ட காற்று ஈரந்தாக்கியுள்ளதாய்க் கருதலாகிறது. அக்காரணம்பற்றியே சூரியவெப்பங்குறைந்துள்ள விடங்களில் நீர் ஆவியாந்தன்மை குறைவதால் அவ்விடங்களின் காற்றைக் குளிர்ச்சியாகவும் உலர்ந்த காற்றாகவும் (ஈரமற்றதாகவும்) கூறலாம். ஆதலால் காற்றின் சீதோஷ்ணஸ்திதிக்கேற்றபடி (1) உஷ்ணமும் ஈரமுங்கொண்டுள்ள காற்றாகவும், (2) குளிர்ச்சியும் வறண்டதன்மையுமடைந்துள்ள காற்றாகவுங் கூறுவதுண்டு. பூமியின்கண் வடக்குத்திக்கிற்கும் தெற்குத் திக்கிற்கும் நடுவில் பூமியை இரண்டு சமபாகங்களாகப் பிரிக்கவல்ல சரிமத்திய ரேகை (Eqator) யென்னும் பெயர்கொள்ளத்தக்க வளைகோட்டின்கண்ணும் அக்கோட்டிற்கிரு புறமும் சற்றுதூரம் வரையும் சூரியவெப்பம் மிகுதியையடைவதாகையால் இடைவிடாமல் நீராவி திரளாய் உண்டாகிவருகிறது. இத்தகைய நீராவிப்பெருக்கானது அவ்விடத்தில் பாஸிபிக் (Pasific Ocean) மகாசமுத்திரத்திலிருக்கவேண்டுமென்

பதை, பூமியினியற்கையமைப்பை மேற்கூறிய காரணங்களுடன் பொருந்த ப் படத்திற் (Map) பார்த்துத் தெளியவேண்டும். பாஸிபிக் மகாசமுத்திரத்தில் சரிமத்தியரேகையின் கண்ணும் அதற்கருகிலும் யாதாயினும் சில தீவுகளிருப்பின் அத்தீவுகளிலுள்ளவர்க்குக் காற்றானது கடலருகிலேயிருப்பதால் குளிர்காற்றாகப் புலப்பட்டாலும் உண்மையில் அக்காற்றுத் தீக்காற்றென்றும் ஆதலால் அவ்விடத்தில் காற்றின் பாரம் குறையவேண்டுமென்றும் மற்றும் அதிக வெப்பத்தினால் நீராவி வெகுபெருந்திரளாய்க் கிளம்பவேண்டுமென்றும் மேற்சொல்லிய காரணங்களைக்கொண்டு நிச்சயிக்கத்தக்கது. இனிச்சொல்லிவரும் முறைப்படி மழைக்கு நீராவியானது முக்கியவாதாரமாகையால் நீராவி விசேஷித்துள்ள இடமாகிய பாஸிபிக்மகாசமுத்திரத்தில் சரிமத்தியரேகையின்கண்ணுள்ள விடங்களில் மழையானது தினந்தோறும் சூரியன் உச்சிவானத்தையடையுங்கால் தவறாமல் பெய்துவருவதால் பூமியைச் சுற்றியுள்ள அவ்விடத்திற்கு "மழை இடைவிடாமற் பெய்யப்பெற்ற பூமிபாகம்" (The belt of constant precipitation) என்று சொல்லுவர்.

## மேகமாந்தன்மை (Formation of Cloud).

வெப்பமதிகரித்துள்ள விடத்து நீரானது ஆவியாய், வெப்பத்தினால் மெலிவடைந்து காற்றுடன்கலக்க, மெலிவடைந்தகாற்றும் அதனுடன் கலந்திருக்கும் நீராவியும் ஒன்று சேர்ந்து பாரத்தில் குறைவுபட்டு மேலெழும்புகின்றன. அவ்வாறு இவை மேல்நோக்கிச் செல்லுங்கால் பூமியின்மேல் பரவியுள்ள காற்றின் மேற்பாகம் கீழ்ப்பாகத்தைவிட வெப்பத்திற் குறைவுபட்டுக் குளிர்ச்சியடைந்திருப்பதால் மேலெழும்பிச் செல்லும் மெல்லிய காற்றின் நீராவி குளிர்ச்சியடையச் சிறுநீர்த்துளிகளாய் இறுகிப்போய் ஒன்று சேர்ந்து மேகமாகப் பரவுகின்றன. மேலும் சிற்சிலவிடங்களில் வெப்பத்தால் மெலிவடைந்தகாற்றானது நீராவியைக்கொண்டு குளிர்ச்சியடைந்துள்ள பருத்த மலைச்சாரல்களைத் தாக்குவதினால் நீராவி கனமடைந்து நீர்த்துளிகளாய் ஒன்றுசேர்ந்து மலைச்சாரல்களில் மேகமாகப்படிவதுமுண்டு. இம்மேகம் காற்றினால் பரவிப் பலவிடங்களில் மழையாகப் பொழியும். இதற்கோர் தகுந்தவுதாரணமாக நாம் வருஷந்தோறும் பார்த்து வரவல்ல கோடைமழையைக் கொள்ளலாம். நமது இந்துதேசத்திற்கு மேற்கேயுள்ள அரபிக்கடலினின்று கோடைக்காலத்துத் திரளாயெழும்பிவரும் நீராவியானது மெல்லிய காற்றுடன் கலந்து சென்னை இராஜதானிக்கு மேற்கும் அரபிக்கடலுக்குக் கிழக்குமான விடங்களில் வடக்குத் தெற்காயோடும் மேற்குமலைத்தொடர்ச்சியின் (Western Ghats) மேற்குச் சாரலை வந்தடைய நீராவியானது மேகமாய் அவ்விடத்தில் மழையை மிகுதியாகப் பொழிகிறது. ஆத

லாற்முன் சென்னைஇராஜதானிக்கு மேற்கேயுள்ளவிடங்களில் கோடைக்கா காலத்தில் மழை அதிகமாய்ப் பொழிவதாகக்கேட்டுவருகிறோம். இவ்விதமுண்டாகுமேகமானதுமேற்குமலைத்தொடர்ச்சியைத் தாண்டிப்பற்பலசமயங்களில் சென்னை இராஜதானியில் தென்மேற்கிலிருந்து வடகிழக்காய் ஓடவல்லதாகையால் நமது நாடுகளில் கோடைக்காலத்து மழையென்று ஆவலுடன் எதிர்பார்க்கவல்லதோர் மழையை அப்போதைக்கப்போது அடைகிறோம். இம்மழையின் வரலாறனது இனிவரும் காலவிசேஷணப் பாடத்திற் கோடைக்காலமென்னும் பாங்கின்கண் விஸ்தரிக்கப்படும்.

## மேகத்தின் வகை (Kinds of Cloud.)

காலாகாலத்தில் சீதோஷ்ணஸ்திதிக்குத்தக்கபடி பலவித அழகானதும் பயங்கரமானதுமான மேகத்தின் தோற்றங்களை நாம் பார்த்துவருகிறோம். பனிக்காலமென்று சொல்லிவரும் தை, மாசி, பங்குனி மாதங்களில் மேகமானது அவ்வவ்விடத்தில் வெகு மெலிவுள்ளது போலவும் பஞ்சுபோல் பரவியுள்ளதுபோலவும் காணப்படுகிறது. கோடைக்காலத்தில் அதாவது சித்திரை வைகாசி மாதங்களில் வானத்தின்கண் மேகமானது வெண்மை நிறங்கொண்டு வட்டவடிவத்துடன் வெகு பெரிதாயும் கண்கூசத்தக்க பளபளப்புடனும் மேலேறுகின்றது. மற்றும் கோடைக்காலத்துக்கடையில் மேகம் கருநிறங்கொண்டு திரளாக மேலெழும்புகிறது. மழைக்காலத்திலோ மேகமானது கருநிறத்துடன் நீலவர்ணமுங்கொண்டு ஓர் பருத்த கூடகாரம் இட்டது போலாகின்றது. ஓர்காலத்திலுண்டாகும் மேகமானது சூரியகிரணத்தினால் அழகுபெற்ற பலவிதவர்ணங்கொண்ட வானமாக விளங்குகின்றது. மற்றோர்காலத்தில் அடிவானத்தில் கருநிறம்பொருந்திய மேகம் பரவியிருக்க அதன்மேலதாகிய ஓரத்தின் வழி சூரியகிரணம் செல்ல அவ்வோரமெல்லாம் வெண்மைபூண்டு வெள்ளியினும் மேம்பட்ட பளபளப்புடன் பிரகாசிக்கின்றது. இவ்வகை மேகமானது நானாவிதமாக நமது மெய்யுணர்விற்கு புலப்படுதலால் அவ்வக்காலத்திற்கேற்ற மேகம் ஒவ்வோர் காரணத்தாலுண்டாகிறதென்று தேறுதல் கூடும். ஆயினும் முக்கியமாய் மேகத்தில் நான்குவிதமுண்டு. அவ்விதங்களை அடியில்வருமாறு கூறி அவற்றின் கலப்பினாலாம் வேறுபாடுகளையும் பரிசோதித்து ஒருவாறு மேகத்தினியற்கையைக் கண்டறிய முயல்வோம்.

### (i) கூந்தல் மேகம் (cirrus cloud).

இதற்கு இங்கிலீஷ் பாஷையிலுள்ள பெயர் சுருளைமயிரென்று பொருள்படும். ஏனெனில் இவ்வகை மேகமானது வெகு இலேசாகவும் மெலிவுள்ளதாகவும் மயிரிழையைப் போற் காணப்படும். இதை நரைத்த மயி

ருக் கொப்பிட்டு எண்ணத்தகும். இம்மேகம் வெண்மையாயும் வானத்தில் வெகு உயரத்துள்ளதாயும் தோன்றுகிறது. அவ்விடத்தில் குளிர்ச்சி அதிகமாகையால் நீராவியானது கனத்தையடையத்தக்கது. ஆதலால் அம்மேகமானது பனிக்கட்டியென்றே கருதத்தக்கதாயுள்ளது. அது தோன்றியபோது காற்று மாறுதலடையலாமென்று கொள்ளலாம்.

### (ii) குவியல் மேகம் (cumulus cloud).

குவியலாவது கூட்டம். இவ்வகை மேகமானது திரண்ட கூட்டமாய் அடிவானத்தை விட்டு மேலெழவல்லது. இதை வெயிற்காலத்தில் காலை வேளையிற் காணலாம். வெப்பங்கொண்ட காற்றானது மேலெழும்ப அக்காற்றின் நீராவி வெகு சடுதியில் கனத்தையடைந்துமேகமாகிறது. மாலையில் இம்மேகம் முழுதும் மறைந்துவிடும். இதன் மேற்புறத்தில் கூந்தல் வானம் படிந்திருப்பின் மேகத்திரளைக் கண்டு பெருமழையை எதிர்பார்க்கலாகும்.

### (iii) அடுக்கு மேகம் (stratus cloud).

ஓர் புத்தகத்தைத் திறந்தால் அதன் பக்கங்கள் ஒன்றன் மேலொன்றாய் அடுக்காக அதன் ஓரத்தின்கண் எவ்விதம் புலப்படுகிறதோ அவ்விதமே சிற்சிலசமயங்களில் காலைமாலை வேளைகளில் அடிவானத்தைச் சார்ந்து மேகமொன்றின்மேல் மற்றொன்றாய்ப் பரவியிருக்கக்காணலாம். காற்றுமட்டுப்பட்டு நமக்கோர்வித ஆனந்தத்தைக் கொடுக்குங் காலங்களில் இம்மேகம் காணப்படும்.

### (iv) கருமேகம் (Nimbus cloud.)

இம்மேகமானது மழைக் காலத்தில் வெகுவாய் வானமெல்லாம் பரவியுள்ளது. மேற்கூறியவகைகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து இஃது உண்டாகியதென்பர். ஆனால் கூந்தல்மேகமும் குவியல்மேகமுமாத்திரமொன்று சேர்ந்து ஓர் வகை மேகமாவதுமுண்டு. இதுபோலவே நானாவிதமாக மேகமானது சேர்க்கையால் உண்டாகி வரும்.

### (2) மழை.

மேகமில்லாவிடில் மழையில்லை யென்பது எல்லோருக்குந்தெரிந்ததேயாம். ஆனால் மேகமிருந்தும் ஒவ்வோர் காலத்தில் மழை பெய்வதில்லை. மேலும் நாம் பார்த்துவரும் மேகத்திரளுக்குத்தக்கபடி மழை பெய்வதுமில்லை. இங்கு மங்குமாய் மேகம் பரவிக்கிடக்க நாம் சாதாரணமாய் மழையிராது என்று நிச்சயிக்கும்போதும் சிற்சில சமயங்களில் மழையைப் பெறுகிறோம். இவற்றின் காரணங்களை ஒருவாறு தேர்ந்து வருவோம்.

மேகமானது எவ்விதம் மழையாய்ப் பொழிகிறதென்பதைப் பொது வாக ஆரம்பத்தில் காண்போம். மேகம் பலநீர்த்துளிகளாலும் பனிக்கட்டியின் தூள்களாலுமானதாக முன்னமேயே படித்து வந்தோம். "பலதுளி பெருவெள்ள"மென்பதற்கேற்ப நீர்த்துளிகள் பலசேர்ந்தால்பெருநீர்த்துளிகளாய் விடுவன. இனிவரும் பாடங்களொன்றில் விவரித்துச் சொல்லிவரும் பூமியதிழுப்பு அல்லது ஆகர்ஷணம் என்னும் காரணத்தினால் கனமடைந்த பதார்த்தமாகிய நீர்ப்பெருந்துளியானது பூமியின்மேல் விழத்தக்கதாயுள்ளது. இவ்வாறு மேகங்கரைந்து பலநீர்ப் பெருந்துளிகளாய் பூமியின்கண் இடைவிடாமல்விழ நீர்ப்பெருக்கு அதிகமாகிறது. இவ்வகைக் காட்சியைத்தான் மழையென்பர்.

ஆனால் மேகமிருந்தும் மழை பெய்யாமல்விடுவதற்குக் காரணமென்ன? மழையாகக் கீழே நீர்த்துளிகள் விழுவதற்கு நீர்த்துளிகளில் ஒவ்வொன்றும் தக்க கனத்தையடையவேண்டும். ஓர்தரம் ஆகாயத்தின் மேற்பாங்கில் நீர்த்துளியானது கீழே வீழத்தக்க கனத்தையடைந்து அவ்வாறு விழுங்கால் பூமிக்கருகில் ஆகாயத்தின்கண் வெப்பமிகுதியால் அந்நீர்த்துளியானது விரைவில் ஆவியாகக்கூடுமாயின் அது பூமியின்மேல் விழுமுன்னமே ஆவியாய்விடும். ஆதலால் வானத்தினின்று மழைபெய்தபோதிலும் பூமியின்கண் மழையிருப்பதில்லை. பூமிக்கருகில் வெப்பந்தணிந்தால் பெய்யும் மழை பூமியையடையத் தவறுவதில்லை.

## மழையளக்குங் கருவி. (Rain Guage.)

நமது நாட்டில் சாதாரணமாய் மழையை ஓர்வகை உத்தேசமாக அளந்துசொல்வது வழக்கமுண்டு. மழை கனத்த மழையாயிருப்பின் ஒரு சொழி இரண்டு சொழி என்று கூறுவர். மழை சாமானிய மழையாயிருந்தால் அரைச் சொழி, காற்சொழி, அரைக்காற்சொழி யென்றுசொல்லிவருவர். ஒரு சொழியாவது ஒரு மரக்காலை நிரப்பவல்ல மழைத்துளிகளின் அளவு. எவ்விதத்திலும் வேற்று நீர்த்துளிகள் அணுகவொண்ணாத தோரிடத்தில் ஓர் மரக்காலை வைத்து வானத்தினின்றும் பொழியும் மழைநீர்த்தாரைகளினால் மரக்கால் நிரம்பப்பெற்றால் நிரம்பியவளவுமழையை ஓர் சொழி மழையாகத் தேர்ந்து வருகிறோம். ஆனால் மழையை யளக்க வேறொருவழியுமுண்டு. அதாவது யாதாயினுமோர் வெள்ளிக்கண்ணாடிப் புட்டியை மரஞ்செடி முதலானவையில்லாவிடத்துப் பூமியினின்று சற்று உயரத்தில்வைத்து அந்தப் புட்டியின் வெளிப்புறத்தில் அதினடிவாரத்திலிருந்து வாய்வரையில் பலவெண்ணைக்கொண்ட அங்குலமாகப் பகுத்தால் அதனுள்விழும் மழைநீர்த்துளிகள் சேர்ந்து மழைகின்றதன்பின் அங்குலவளவைக் காட்டுபவையாம். இவ்

திருச்சிற்றம்பலம்.

# மதுரைத் தமிழ்ச்சங்கம்.

## இச்சங்கத்தார் 1905௵ நவம்பர்மீ 18 ம் தேதியில் நடாத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷையில் தேறிப்பரிசும் யோக்கியதாபத்திரமும் பெறும் மாணாக்கர்களின் விவரம்

### பீ. ஏ. பரீக்ஷை.

### II. வகுப்பு.

*1. 237 S. D. சற்குணர், கிறிஸ்தியன்காலேஜ், சென்னை. (பரிசு ரூ 30)

2. 238 V. நஞ்சுண்டன், ஷை ஷை

3. 115 L. N. இராமசந்திரன், சென்ற்ஜோசப்காலேஜ், திருச்சி.

### யப். ஏ. பரீக்ஷை.

### II. வகுப்பு.

*1. 165 N. ரெகுநாதன், பின்லேகாலேஜ், மன்னார்குடி. (பரிசு ரூ 20)

2. 210 M. குமாரசுவாமி பிள்ளை, ஊர்ஹீஸ்காலேஜ், வேலூர்.

3. 59 A. சீனிவாசன், இந்துகாலேஜ், திருநெல்வேலி.

4. 107 M. மதுரைநாயகம், S. P. G. காலேஜ், திருச்சி.

5. 109 P. V. குப்புசாமி, ஷை ஷை.

6. 153 R. இராமசாமி, பின்லேகாலேஜ், மன்னார்குடி.

---

* முதல் வகுப்பிற்றேறும் முதல் ஐவர்க்கே பரிசென்பது இச்சங்கத்தின் விதியாயினும் இம்முறை பி. ஏ., எப். ஏ. பரீக்ஷைகளில் முதல்வகுப்பிலொருவரும் தேறாமைபற்றி அவ்விருபரீக்ஷைகளிலும் இரண்டாவது வகுப்பில் முதன்மையாயத் தேறிய மேற்காட்டியுள்ள இருவர்க்கும் இவ்வருடத்திற்கே உரியசிறப்பாக குறித்துள்ளபரிசுக்கள் அளிக்கலாயின.

7. 179 S. இராமசாமிநாயுடு, முன்சிபல் காலேஜ், சேலம்.
8. 54 V. M. சுப்பையா, C. M. S. காலேஜ், திருநெல்வேலி.
9. 38 G. P. ஜேம்ஸ், அமெரிக்கன்மிஷன்காலேஜ், மதுரை.
10. 56. S. N. பாண்டிப்பெருமாள்பிள்ளை, இந்துகாலேஜ், திரு
நெல்வேலி.
11. 162 N. ஜகநாதன், கவர்ன்மெண்டு காலேஜ், கும்பகோணம்.

## மெற்றிக்குலேஷன்.

### I வது வகுப்பு.

1. 213 P. R. சிங்கராச்சாரி, கிறிஸ்தியன்காலேஜ், சென்னை.
1-வது பரிசு ரூ 30, (வெள்ளிப்பதக்கமும் மீதரூபாவும்.)
2. 228 சிறுகரும்பூர். R. வேங்கிடகிருஷ்ணன், இந்து ஹைஸ்
[கூல், திருவல்லிக்கேணி. 2-வது பரிசு. ரூ 25.
3. 76 A. R. இராமசுப்பு, இந்துஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்
[தூர். 3-வது பரிசு. ரூ 20.
4. 224 காஞ்சிவிசுவனாதசந்திரசேகரன், முத்தியாலுப் பேட்
[டை ஹைஸ்கூல், சென்னை. 4-வது பரிசு ரூ 15.
5. 226 S. சச்சிதானந்தம், வெஸ்லி காலேஜ், இராயபேட்டை
[சென்னை, 5-வது பரிசு. ரூ 12.
6. 173 S. இராமசாமி, முன்சிபல் காலேஜ், சேலம்.
7. 75 A. R. கணபதி ஐயர், இந்துஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்
[தூர்.

### II வது வகுப்பு.

1. 1 A. இராமசாமி, சேதுபதிஹைஸ்கூல், மதுரை.
2. 42 G. R. இராமசுப்பன், C. M. S. காலேஜ், திருநெல்
[வேலி.
3. { 156 A. ரெத்னசபாபதி. சபாநாயகமுதலியார்இந்துஹைற
[ஸ்கூல், சீகாழி.
39 T. K. சுப்பிரமண்யன், C. M. S. காலேஜ், திருநெல்
[வேலி. }
4. 144 S. K. கிருஷ்ணசாமி, கலியாணசுந்தரம்ஹைஸ்கூல்,
தஞ்சை. [கேணி.

5. 230 A. C. கிருஷ்ணசாமி, இந்துஹைஸ்கூல், திருவல்லிக்

6. 184 K. வெங்கட்டராமையர், ஊர்ஹிஸ் காலேஜ், வேலூர்.

7. 45 T. K. ஐயாத்துரை, C. M. S. காலேஜ், திருநெல் [வேலி.

8. 41 P. C. புன்னைவனநாதன், ௸ ௸
51 S. வையாபுரி, இந்துகாலேஜ், திருநெல்வேலி. [தூர்.
77 V. வெங்கடசுப்பன், இந்துஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்

9. 106 L. R. சாமிநாதன், போர்ட் ஹைஸ்கூல், லால்குடி.

10. 176 T. V. கோபால ராவ், முன்சிபல் காலேஜ், சேலம்.

11. 227 ஜேம்ஸ்ஜெஷிராஜ்பால், வெஸ்லிகாலேஜ், சென்னை.
25 R. அந்தோனி, அமெரிக்கன் மிஷன் ஹைஸ்கூல், [பசுமலை.

12. 187 ஆக்கூர் நரசிம்மாச்சாரி, ஊர்ஹிஸ் காலேஜ், வேலூர்.

13. 94 K. வகுளாபரணன், டவுண் ஹைஸ்கூல், திருவனந்த புரம். [தஞ்சை.
141 V. வெங்கட்டராமன், கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல்,
183 T. S. ராஜையை, ஊர்ஹிஸ்காலேஜ், வேலூர்.

14. 48 V. நமசிவாயம், இந்துகாலேஜ், திருநெல்வேலி. [தூர்
78 C. V. ரெங்காச்சாரி, இந்துஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்

15. 177 N. K. விசுவநாதையர், முன்சிபல் காலேஜ், சேலம்.

16. 67 மதுரவாசகம் தாமஸ், ஸ்காட்கிறிஸ்தியன்காலேஜ், நா [கர்கோவில்.
166 P. C. வரதராஜையங்கார், கடலூர் ஹைஸ்கூல்.

17. 223 வாயலூர் கோவிந்தசாமிபிள்ளை, தொண்டைமண்டலம் ஹைஸ்கூல், சென்னை. [வேலூர்.

18. 195 A. R. விசுவநாதமுதலியார், மகந்துஇந்துஹைஸ்கூல்,
102 M. K. வரதராஜன், நாஷனல்ஹைஸ்கூல், திருச்சி.

19. 190 V. T. அரங்கநாதன், ஊர்ஹிஸ் காலேஜ், வேலூர்.

20. 105 L. N. குருநமசிவாயம், போர்ட் ஹைஸ்கூல், லால்குடி.

21. 101 R. ஐயாசாமி, நாஷனல் ஹைஸ்கூல், திருச்சி.

22. 168 R. மாணிக்கம், கடலூர் ஹைஸ்கூல்.
188 V. J. பலராமசிங், ஊர்ஹிஸ் காலேஜ், வேலூர். [சை
140 T. P. சீனிவாசன், கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்

23 { 61 A. பாக்கியநாதன், ஸ்காட் கிறிஸ்தியன் காலேஜ், [நாகர்கோவில்.
72 V. தேவசிகாமணி ஷை ஷை

24. { 86. P. சுப்ரமணிய ஐயர், கவர்ன்மெண்டு காலேஜ், [திருவனந்தபுரம்.
98. M. S. கிருஷ்ணசாமி, S. P. G. ஹைஸ்கூல், திருச்சி.
157. S. இரத்னம், சபாநாயகமுதலியார் ஹைஸ்கூல், சிதம்பரம் [டி.

25. 229 சேந்தமங்கலம் கோவிந்தராஜ ரெங்கராமானுஜம், இந்து ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி.

26. 87 R. சிவராமகிருஷ்ணையர், டவுண் ஹைஸ்கூல், திருவனந்தபுரம்.

27. 131 S. சாமிநாதன், மகாராஜாஸ்காலேஜ், புதுக்கோட்டை

28. 133 M. S. இராமச்சந்திரன், லூதர்ண் மிஷன் ஹைஸ்கூல் [புதுக்கோட்டை.

29. { 50 R. ஆழ்வார், இந்து காலேஜ், திருநெல்வேலி.
169 P. அம்பலவாணன், கலவைகாலேஜ், புதுச்சேரி:

30. 92 S. ஆண்டிப்பிள்ளை, டவுண் ஹைஸ்கூல், திருவனந்த [புரம்.

31. { 18 M. R. சுப்பராமன், A. M. காலேஜ், மதுரை.
143 V. S. கிருஷ்ணசாமி, கல்யாணசுந்தரம்ஹைஸ்கூல், [தஞ்சை.

32. 186 G. புண்யகோடி, வூர்ஹிஸ்காலேஜ், வேலூர்.

33. { 19 P. D. துரைராஜ், A. M. காலேஜ், மதுரை.
134 R. இராஜராமநாயக, லூதர்ண் M. H. ஸ்கூல், புதுக [கோட்டை.

34. 99 P. K. நடேசன், S. P. G. ஹைஸ்கூல், திருச்சிரா [பள்ளி.

35. 125 S. நாராயணசாமி, மஹாராஜாஸ் காலேஜ், புதுக்கோ [ட்டை.

36. { 66 D. ஞானசிகாமணி, ஸ்காட் கிறிஸ்தியன் காலேஜ். நாகர் கோயில்
91 V. S. விசுவநாதையர், டவுண் ஹைஸ்கூல், திருவனந்த [புரம்,
137 P. சுப்ரமணியன், கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சை
199 V. A. நாகேசுவரஐயர், மஹந்து இந்துஹைஸ்கூல், [வேலூர்.

37. 69 M. D. மோட்சக்கண், ஸ்காட்கிறிஸ்தியன்காலேஜ்,
[நாகர் கோயில்.

38. 7 S. லட்சுமிநாராயணன், சேதுபதிஹைஸ்கூல், மதுரை.
30 P. சிவசாமி, S. P. G. ஹைஸ்கூல், இராமநாதபுரம்.

39. 132 V. சுந்தரம், லூதர்ன்மிஷன்ஹைஸ்கூல், புதுக்கோ
[ட்டை.

40. 225 மாரம்பேட்டைவீராசாமிசெட்டி, முத்தியாலுப்பேட்
[டை ஹைஸ்கூல், சென்னை.
127 A. கோகர்ணம், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை

41. 16 M. D. பாலசுந்தரம், சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.
71 P. D. ஜேம்ஸ், ஸ்காட்கிறிஸ்தியன் காலேஜ், நாகர்கோ
[வில்.
136 P. வைத்தியநாதசுவாமி, கல்யாணசுந்தரமஹைஸ்கூல்,
[தஞ்சை.

42. 46 T. S. முத்தையன், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.
49 S. கந்தசாமி, இந்து காலேஜ், ஷை. [லிபுத்தூர்.

43. 80 A. சங்கரநாராயணபிள்ளை, இந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்
185 V. N. ரெங்கசாமி ஐயங்கார், ஊர்ஹீஸ்காலேஜ்,
[வேலூர்.

44. 73 A. Z. சாமுவேல், ஸ்காட் மிஷன் காலேஜ், நாகர்கோ
[வில்.

20—2—06
தமிழ்ச்சங்கம்,
மதுரை.

இங்ஙனம்,
பொ. பாண்டித்துரை,
அக்கிராசனாதிபதி.

உ

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீமீனாக்ஷி ஜனோபகார சங்கம்

[லிமிடெட்].

மதுரை.

# நோட்டீஸ்.



மதுரைத் தமிழ்ச் சங்கம் பவர்ப் பிரஸில்
பதிப்பிக்கலாயிற்று.

1906.

உ

திருச்சிற்றம்பலம்.

# NOTICE.

## SRI MEENAKSHI JANOPAKARA SANGAM (LIMITED), MADURA.

## ஸ்ரீ மீனாக்ஷி ஜனோபகார சங்கம் [லிமிட்டெட்], மதுரை.

# நோட்டீஸ்.

பெயர்.

1. ஸ்ரீமீனாக்ஷியின் திருவருளையே பிரார்த்தித்து ஜனோபகாரஞ் செய்தற்கென்றே இச்சங்கம் ஸ்தாபிக்கப் பெற்றுள்ளமையால் இச்சங்கத்திற்கு ஸ்ரீ மீனாக்ஷி ஜனோபகார சங்கம் (லிமிட்டெட்) என்று பெயர்.

இடம்.

2. இச்சங்கம் மதுரை வடக்கு வெளிவீதியில் பாலவனத்தம் ஜமீந்தார் ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத் தேவரவர்களுக்குப் பாத்தியமானதும் இப்பொழுது மதுரைத் தமிழ்ச்சங்கம் ஸ்தாபிக்கப் பெற்றுநடைபெற்று வருவதும் 1062-வது நிம்பர் கதவிலக்கமுள்ளதுமான கட்டிடத்தின் மேல்மெத்தையில் ஸ்தாபிக்கப்பெற்றுள்ளது.

நோக்கம்.

3. இச்சங்கத்தில் சேர்ந்து டிப்ளோமாப் பெற்றுக்கொள்ளும் எல்லோருக்கும் அவர்களேனும் அவர்களுக்குப் பிற்காலத்து அவர்களால் குறிப்பிடப்படும் குடும்பத்தோரேனும் அபிமானிகளேனும் தருமமேனும் திரவிய சகாயம் பெறும்பொருட்டு இச்சங்கம் ஸ்தாபிக்கப்பெற்றுள்ளது.

## சங்கை.

4. இச்சங்கத்தில் தற்காலம் 12000 மெம்பர்கள் சேர்ப்பதாக உத்தேசித்து ரிஜிஸ்டர் செய்யப்பெற்றிருக்கிறது. பின்னும் வேண்டும்போது மெம்பர்களை விர்த்திசெய்துகொள்ளவும் கூடும்.

5. 18-வயதுக்கு மேல் 65-வயதிற்குட்பட்ட திடசரீரமுள்ள யாவரும் ஆண், பெண், ஜாதி, மத வித்தியாசமின்றி இச்சங்கத்தில் சேரலாம்.

6. ஒவ்வொரு மெம்பரும் இச்சங்கத்தினின்று கொடுக்கப்படும் முதல் நம்பர் பாரத்தைப் பூர்த்திசெய்து அட்மிஷன் பி ரூபாய் ஒன்றுடன் பிரவேசக்கட்டணம் ரூபாய் ஒன்றும் மானேஜருக்கனுப்பவேண்டும். ஷை விண்ணப்பத்தை அங்கீகரித்தவுடன் சங்கத்தின் முகருடன் ஒரு அணா ஸ்டாம்பு ஒட்டி, மானேஜர் அல்லது சிக்ரட்டேரி கையொப்பமிட்ட 2-நிர். டிப்ளோமாக் கொடுக்கப்பெறும்.

7. மேற்கண்ட அட்மிஷன்பி. ரூபாய் ஒன்றையும் ஒரே மொத்தமாகவாவது, மாதம் ஒன்றுக்கு ரூபாய் கால் வீதம் நான்கு மாதங்களிலாவது செலுத்தலாம். அதனுடன் மாதமொன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் 1-வது, 2-வது மாதமிரண்டிலும் பிரவேசக்கட்டணத் தொகையும் 3-வது மாதம் முதல் சந்தாத்தொகையுமாகச் செலுத்தி வரவேண்டும். மேற்கண்ட தொகைகளை ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் ஆகையருக்குள் ஆபீசுக்கு வந்துசேரத்தக்கதாக அனுப்பவேண்டும். தவறினல் அடுத்தமீ 20உக்குள் ஒரு அணா வட்டியுடன் செலுத்தவேண்டும்.

8. சந்தாதார்களிடம் வசூலாகும் மூன்றிலிரண்டு பங்கு சந்தாத்தொகையில், லாயக்காகி இறந்தவர்களின் வாரிஸ்களுக்கு அட்வான்ஸ் கொடுத்ததுபோக, பாக்கித்தொகையையும், ரிஸர்வ்பண்டையும், சரியான பாங்கியில் டிப்பாசிட்டில் வைக்கப்பெறும். ஒவ்வொரு வருஷமும் கணக்குகள் பரிசோதனையாகி இறந்தவர்களின் வாரிஸ்களுக்குக் கொடுபடவேண்டிய தொகைக்கு ஸ்டேட்டுமெண்டுகள் த

யாராகி, வருஷாந்தர ஜெனரல் மீட்டிங்கில் அங்கீகாரமானதின்பேரில் பட்டுவாடாச் செய்தற்குரிய தொகையை பாங்கிலிருந்து வாங்கப் படும்.

9. மெம்பர் இறந்தமாதமுதல் சந்தாத்தொகை செலுத்தவேண்டியதில்லை. ரசீது பெற்றுக்கொள்ளாமல் தொகை செலுத்தியதாகச் சொல்லும் எவ்வித முகாந்திரமும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

10. (a) மெம்பராகச் சேர்ந்து நாலு மாதம் அதாவது 120 நாளைக்குள் இறந்தவர்கள் லாயக்காகாதவர்கள். அவர்கள் செலுத்திய தொகையில் பாதி அவர்களின் வார்ஸ்களுக்குக்கொடுக்கப்பெறும்.

(b) அட்மிஷன் பீ ரூபா ஒன்றும், பிரவேசக்கட்டணம் ரூ 2-ம், சந்தாத்தொகை ரூ 2-ம் செலுத்தி 5-வது மாதந்தொடங்கி இறக்கிற சந்தாதார்கள் தான், வாரிசுகள் மரணசகாயத் தொகை பெறுதற்கு லாயக்கானவர்கள்.

11. லாயக்குச்சந்தாதார்களான பின்பு மெம்பர்களிறந்தவுடன் திருப்திகரமான ருஜுவுடன் தாங்கள் பெற்றிருக்கும் டிப்ளோமாவுடன் 5-வது நம்பர் மரண அறிக்கைப் பாரத்தை பூர்த்திசெய்து மானேஜர் அல்லது சிக்ரட்டேரிக்குத் தபாலில் ரிஜிஸ்டர் செய்தனுப்பவேண்டும். உடனே அவர்களின் வார்ஸ்களுக்கு ரூ 50 அட்வான்ஸ் கொடுக்கப்படும்.

12. வருஷந்தோறும் வசூலாகும் சந்தாத்தொகையினின்று பாங்கில் டிப்பாசிட்டுச் செய்யப்பட்டிருக்கிற தொகையில் ரிஸர்வ்பண்டுக்கு ஏற்படுத்தியதுபோக மீதத்தொகையை லாயக்காகி இறந்தவர்களின் வார்ஸ்தார்களுக்கு அவரவர்கள் செலுத்தியிருக்கும் தொகைக்குத் தக்கபடி ஈவித்துக்கொடுக்கப்படும். அவ்விதங் கொடுக்குந் தொகை ரூ 500-க்குமேல் போகாது.

13. மெம்பர்களில் இரண்டு வருஷம்வரை ஒழுங்காய் சந்தாத்தொகை செலுத்திவந்த யாராவது தகுதியான சொத்து ஜாமீன் கொடுத்துக் கடன்கேட்டால் இக்கம்பேனியின் 41-வது ரூலின்படி ரிசர்வ்பண்டுத் தொகையிலிருந்து கடன் கொடுக்கப்படும்.

14. ரூல்ஸ்புஸ்தகம் வேண்டியவர்கள் அணா ஒன்று விலையனுப்பி இவ்வாபீஸ்மூலமேனும் ஏஜண்டுகள் மூலமேனும் பெற்றுக்கொள்ளலாம்.

15. நிகழும் 1905ஷு நவம்பர்மீ 1உ முதல் இச்சங்கம் நடத்தப்பெறுவதாகும்.

16. இச்சங்கம் இந்தியன் கம்பெனிஸ் 1882-ஷு 6-வது ஆக்ட்டுப்படி ஏற்படுத்தி 41-நம்பராக ரிஜிஸ்டர் செய்யப் பெற்றிருக்கிறது.

17. இன்னும் வேண்டிய சங்கதிகளை மானேஜர் அல்லது சிக்ரட்டேரிக்கு எழுதியும், ரூல்ஸ் புஸ்தகத்தைப் பார்த்தும் தெரிந்து கொள்ளலாம்.

இங்ஙனம்

பொ. பாண்டித்துரை,

பிரஸிடெண்டு அண்டு டிரஷரர்.

## இச்சங்கத்தைப் பொறுப்பாய் நடத்துகிற பங்காளிகள்.

1. பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள்
   பிரஸிடெண்டு அண்டு டிரஷரர் (*President & Treasurer.*)
2. கான் பஹதூர் H. அப்துல்சுப்ஹான் சாகிபவர்கள்
   மானேஜர் (*Manager.*)
3. திரு. நாராயண ஐயங்காரவர்கள்
   ஸிக்ரிட்டேரி (*Secretary.*)
4. வே. திருமலை ஐயங்காரவர்கள்
   ஆடிட்டர் (*Auditor.*)
5. எஸ். சாமாவையர் அவர்கள்
   அஸிஸ்டெண்ட் டிரஷரர் (*Assistant Treasurer.*)
6. ப. துரைஸாமி சேருவையவர்கள்
   இனிஸ்பெக்டர் (*Inspector.*)
7. அ. சு. லோககுரு சேருவையவர்கள்
   இனிஸ்பெக்டர் (*Inspector.*)

# இந்தக் கம்பேனியில் சேருகிற மெம்பர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டியன.

ஸ்ரீ மீனாக்ஷியின் திருவருளைப் பிரார்த்தித்து மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் தர்மத்தையே முக்கிய நோக்கமாகக்கொண்டு இச்சங்கத்திற் சேரும் சந்தாதார்கள் யாவரும் பலவகையினும் நன்மையடைய வேண்டுமென்ற நல்லெண்ணத்தை மேற்கொண்டு இக்கம்பேனி ஸ்தாபிக்கப்பெற்றுள்ளது.

இக்கம்பேனி ரூல்கள் பிரஸிடெண்டு அவர்கள் பல அறிவாளிகளோடும் சேர்ந்து இக்கம்பேனியின் லாபநஷ்டங்களை நன்றாய் ஆலோசித்து இக்கம்பேனி என்றும் குறைவின்றி நடைபெற்றுவரவும், இக்கம்பேனியிற் சேர்ந்து நீண்ட நாள் சந்தாத்தொகை செலுத்துபவர்கட்கும் நஷ்டம் நேரிடாதிருக்கவும் வேண்டிய தீர்க்காலோசனை செய்து எழுதியுள்ளமையால் இக்கம்பெனி ரிஜிஸ்டராகவும் ரூல்புக் வெளியாகவும் தாமதம் நேர்ந்தது. இக்கம்பேனியிற் சேர்வோருக்கு உண்டாகும் பல நலங்களுட் சிலவற்றை அடியிற் காட்டுதும்.

அவையாவன:—

இச்சங்கத்தில் சேர்ந்த மெம்பர்கள் லாயக்குச் சந்தாதாரானது முதல் 5-வருஷத்திற்கு மேலும், 10-வருஷத்திற்கு மேலும், 15-வருஷத்திற்கு மேலும், சந்தாத்தொகை செலுத்துவதை நிறுத்திக்கொள்ள இஷ்டப்பட்டால் மானேஜர் உத்தரவு பெற்றுக்கொண்டு நிறுத்திவிடலாம். அப்படி நிறுத்திக்கொள்பவர்களுக்குத் தொகைக்கு மோசமன்றி ஜாஸ்தி வருஷங்களுக்குத் தக்கபடி அவர்களுக்கேனும் வார்சுகளுக்கேனும் தொகை கொடுக்கப்பெறும் என்பதும், ஸர்ப்பளஸ் பண்டிலிருந்து ஜீவதெசையிலுள்ள மெம்பர்களுக்கு போனஸ் கொடுக்கப்பெறும் என்பதும், லாயக்குச் சந்தாதார்களின் வார்சுகளுக்கு 19-வது ரூலிற் சொல்லியபடி மெம்பர் இறந்தவுடன் நிச்சயமாக ரூ 50. அட்வான்ஸ் கொடுக்கப்பெறும் என்பதும், 41-வது ரூலிற் சொல்லியபடி கடன்வாங்க அநுகூலமிருக்கிறதென்பதும், 5-வது மாசம் முதல் அல்லாது, 3-வது மாசம் முதற்செலுத்தும் தொகைகள் யாவும் கணக்கில் சேர்த்துப் பங்கு பிரித்துக்கொடுக்கப் பெறுவதென்பதும் இக்கம்பேனியில் 65-வயதுக்கு மேற்பட்டவர்களை மெம்பராகச் சேர்ப்பதில்லை யாதலால் மரணம் சொற்பமே (நூற்றுக்கு 2-க்கு அதிகப்படாது) நேரக்கூடுமென்பதும் அதனால் மரண ஈவுத்தொகை அதிகமே கிடைக்கக் கூடுமென்பதும் யாவரும் எளிதின் அறியக்கூடிய உண்மையே; ஆயினும் எதிர்பாராத எந்தக் காரணத்தினாலாவது மரணம் அதிகப்பட்டகாலத்தும், 24-மாதங்களுக்கு மேற்பட்டவர்களுக்கும் குறைந்தபக்ஷம் போட்ட தொகைக்கு இரட்டிப்புக்கொடுக்க உத்தரவாதம் செய்கிறோமென்பதுமாம். இன்னுமுள்ள பல சௌகரியங்களும் இக்கம்பேனி ரூல் புக்கைப் பார்த்தால் இனிது விளங்கும்.

# T. R. Tawker & Sons,

## Mount Road, Madras.

வைரம், பச்சை, கெம்பு முதலிய ரத்தினங்களும், நகைகளும், எங்களிடம் சரசமாய் விலைக்கு தயப்படும். தவிர நூதனமாய் வேண்டிய நகைகள் உத்திரவின்பேரில் செய்யப்படும். எங்களிடம் தயாராயிருக்கும் நகைகளுக்கு அற்புதமான காட்லாக்கு லெட்டரின் பேரில் அனுப்பப்படும். உயர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு வேலைத்திறமாயும் உத்திரவாதமாயும் செய்தனுப்பப்படும். ஒரு முறை பார்த்தால் அனுபோகம் தெரியவரும்.



B. 106 கெடியார கொலுசு சாவரின் பொன்னில் செய்தது ரூ 165, 138, 118 வரையில். ஷ வெள்ளி ரூ 8.



B. 510. பொன் கைகெடியாரம் ஸெட்டிங் முக்கால் மூடியுடையாதும் (லீவர்) தலையில் சாவியுடையது துர் ... யான காலங் காட்டுவதுமானது ரூ 140. ஷூ வெள்ளிக் கெடியாரம் ரூ 25 முதல் 60-வரையில்.



B. 107 கெடியார கொலுசு சாவரின் பொன் ரூ 170. 8-மாத்துப் பொன் 145. 6-மாத்துப் பொன் ரூ 125. ஷை வெள்ளிக்கொலுசு ரூ 10.




J. 1053. காசிமாலை. பலவிதமான காசுகள்வைத்த காசிமாலை மாதிரிகள் எங்களிடம் தயாராயிருக்கிறது. அதின் விலையும் மாதிரியும் தேவையானவர்களுக்கு மனுவின்பேரில் தெரிவிக்கப்படும். மாதிரி பிளானும் அனுப்பப்படும்.

# THE TEST OF TIME

## FOR OVER THIRTY SEVEN YEARS

# SCOTT'S EMULSION

*has stood every rigid test that learned Physicians could suggest.*

As a result, to-day, it is used the world over, as the Standard Remedy for

LUNG TROUBLES,
COUGHS,
COLDS,
LOSS OF FLESH,
POOR APPETITE.

**and as a Tonic and Tissue Builder for both Father and Son.**



**Always get the Emulsion with this mark—the Fishman—the mark of the "Scott" process!**

NOT TOUCHED BY HAND.

*FOR SALE AT ALL CHEMISTS.*

SCOTT & BOWNE, LTD.,
MANUFACTURING
CHEMISTS,
LONDON, ENGLAND.

# மதுரைத் தமிழ்ச்சங்கத்தில்

## விற்கப்பெறும் புத்தகங்கள்.

"செந்தமிழ்" இரண்டு, மூன்றாந் தொகுதிகள் பைண்ட் செய்யப்பெற்று இப்போது விலைக்குத்தயாராகவுள்ளன. கையிருப்பிற் சிலபிரதிகளேயிருத்தலால், வேண்டியோர் உரியபோதே எழுதி வி. பி-தபால் வாயிலாகப் பெற்றுக்கொள்ளக்கடவர். ஒருதொகுதி விலை ரூ 5. 'பைண்ட்' இல்லாதது ரூ 4—8—0.

### சங்கப்பதிப்பு.

| | | ரூ | அ | பை |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்தமூலமும்உரையும் | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி | 1 | 8 | 0 |
| 3. | ஐந்திணையைம்பதுரை | 0 | 3 | 0 |
| 4. | இனியது நாற்பதுரை, களநூல் | 0 | 3 | 0 |
| 5. | புலவராற்றுப்படை (பழையது) | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் உரையுடன் | 0 | 10 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி உரையுடன் | 0 | 4 | 0 |
| 8. | பன்னிரு பாட்டியல் | 0 | 4 | 0 |
| 9. | அநுமான விளக்கம் | 0 | 4 | 0 |
| 10. | சங்கப்புலவராற்றுப்படையுரை | 0 | 4 | 0 |
| 11. | விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் | 0 | 6 | 0 |
| 12. | திணைமாலை நூற்றைம்பது உரை | 0 | 4 | 0 |
| 13. | அட்டாங்க யோகக்குறள் | 0 | 1 | 0 |
| 14. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | 0 | 3 | 0 |
| 15. | யாப்பு அணியிலக்கணங்கள் [விசாகப்பெருமாளையரது பஞ்சலக்ஷண வினாவிடையினின்று எடுத்தது.] | 0 | 8 | 0 |
| 16. | வில்லிபுத்தூரர் பாரதம்—(ஆதிபர்வம், சபாபர்வம் பலபிரதிகளைக்கொண்டு ஆராய்ச்சி செய்யப்பட்டது) | 1 | 0 | 0 |
| 17. | திருச்செந்திற்கலம்பகம் | 0 | 3 | 0 |
| 18. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் (சபரு) | 0 | 1 | 0 |

### மற்றப்பதிப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| 19. | தருககாமிர்தம் | 0 | 8 | 0 |
| 20. | அத்துவித வாக்கியத் தெளிவுரை (ஸ்ரீசிவஞானசுவாமிகள் செய்தது.) | 0 | 4 | 0 |
| 21. | விதானமாலை [சோதிடம்] | 0 | 8 | 0 |

☞ விலாசம்:—மதுரைத்தமிழ்ச்சங்கம் மானேஜ்மெண்டு ஆபீஸ், மதுரை.

# வீ. ஷேக்பரீத் அண்டு கோ.

## மவுண்டுரோட், சென்னை.

### முன்விலை 18 ரூபாய், தற்காலம் ரூபாய் 6.



நெ. 1. 6 ரூபாய் கிரயத்துக்கு ஸிஸ்டம் ருஸ்கோப்பேடண்டு லீவர்ஜர்மன் வெள்ளி கெடியாரம் 7-வருஷம் உத்திரவாத ஸ்டாம்பு கியாரண்டியுடன் 24 வித இனாம் சாமான்களும் சேர்த்துக் கொடுக்கப்படும்.

மிக இலட்சணமும், நாணயமும், சரியான காலத்தைக் காட்டக்கூடியதும் ஸிஸ்டம் ராஸ்கோப் பேடண்டு லீவர் சுவிஸ்பேட் கெடியாரமானது ஒருபக்கம் அதிக கனத்த கண்ணாடியால் மூடிபோட்டது மேல்சாவியுள்ளது. 4 கெம்பு செதுக்கியது. பார்ப்பவர் ஆச்சரியப்படும்படியானது. எந்தக்கம்பேனியிலும் கிடைக்கப்படமாட்டாது. பெயர்போன கம்பேனியாரால் செய்யப்பட்டது. 24 விதமான வினோத சாமான்களும் சேர்த்து ரூபா 6.

**இனாம்சாமான்களின் விபரம்.**

கெடியாரம் வைக்கும்படியான வில்வெட்பெட்டி 1, கண்ணாடி 1, வில் 1, சீமையில்செய்த வெகு நேர்த்தியான கொலுசு 1, சீமையில் செய்த ஒருபக்கம் எட்வர்ட் சக்கரவர்த்தியும் மற்றொருபக்கம் ராணி அலெக்சாண்டிரினாவுமாகிய இவர்களின் போட்டகிராப்வைத்த லாக்கெட் தொங்கடம் 1, சைனா பேனா 1, கத்தி 1, பூபோட்ட சைனா குட்டை 1, சீமை சென்ட் என்னும் வாசனைபுட்டி 1, ஆஸ்டிரேலியாவில் செய்த மனவுல்லாச பரிமளம் வீசும் ரோஸ் சோப்பு 1, ஷர்ட்டுபட்டன் செட் 1, பூனா சாவிவளையம் 1, குளிர்ச்சிபொருந்திய மூக்குக்கண்ணாடி 1, ஜெர்மன் மணிபாக்ஸ் 1, சீமை தோல்பை எலெக்டிரிக் தங்க ஷோக் மோதிரம் 1, ஆஸ்டிரியாவில் செய்த முன்பார்வையில் கண்ணாடிவைத்து உள்புறத்தில் 2 வருஷத்திய காலண்டர் வைத்து 80 பேஜுகள் அடங்கிய வாய்ப்புறத்தில் பென்சல் வைத்த நோட்புக் 1, பென்சல் 1, குழந்தைகள் வாத்தியம் 1, ஜெர்மன் தேசத்தில் செய்த மன்னாதிமன்னர்களாகிய சக்கரவர்த்திகளின் உருவங்களடங்கியதும் நகைகள் வைத்துக்கொள்ளும்படியான டப்பாக்கள் 6, ஆக மொத்தம் 24 வித சாமான்கள் இனாம்.

**V. SHAIK FAREED & Co,**
*Mount Road,* **Madras.**